கிராம நலம்

(மாதப் பத்திரிகை)

சென்னை அரசாங்க சமுதாய அபிவிருத்தி
இலாகா வெளியீடு

மாடி—1 | செப்டெம்பர், 1956 | படி—12

கிராமக் கைத்தொழில் வளர்ச்சி

நெல் குத்துவதிலும் மாவரைப்பதிலும் பண்டைக்கால முறைகளிடம் எனக்குத் தனி அபிமானம் ஒன்றும் கிடையாது. இன்று சோம்பலாயுள்ள கோடிக் கணக்கான கிராம வாசிகளுக்குக் கொடுக்கக்கூடிய வேலை வேறெதுவும் இல்லை என்பதால்தான் நான் அவற்றை ஆதரிக்கிறேன். கிராம வாசிகளை வாட்டும் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்தால் ஒழிய, கிராம முன்னேற்றம் சாத்தியமில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே, வீணைக் கழிக்கும் நேரத்தில் உபயோகமான ஒரு வேலையைச் செய்யும்படி, கிராம வாசிகளைத் தூண்டுவதே, பெரிய முன்னேற்ற வேலையாகும்.

—காந்தியடிகள்

சென்னை ராஜ்யத்தில் சமுதாய வளர்ச்சி

[ஸ்ரீ என். இ. எஸ். ராகவாச்சாரி, I.C.S., அடிஷனல் அபிவிருத்திக் கமிஷனர், சென்னை]

[சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களிலே சுமார் 2,000 கூட்டுறவு சங்கங்கள் இப்பொழுது இயங்கி வருகின்றன. இது வரை, கிராம மக்கள், அபிவிருத்தி வேலைகளுக்காக அளித்துள்ள பங்கின் மொத்த மதிப்பு 122 லட்சம் ரூபாயாகும். திட்ட வட்டாரங்களிலே, மொத்தம் சுமார் 2,500 மைல் நீளத்துக்குப் புதிய கிராம பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 2,000 புதிய கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன.

சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் நம் ராஜ்யத்தில் எவ்வாறு வெற்றிகரமாக நிறை வேறிவருகின்றன என்பதை ஸ்ரீ என். இ. எஸ். ராகவாச்சாரி, I.C.S. அவர்கள், அகில இந்திய ரேடியோ (சென்னை நிலையம்) மூலம் 1956-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 4வ யன்று எடுத்துக் கூறினர். அவருடைய ஆங்கில ஒலிபரப்புப் பேச்சின் மொழி ஆக்கம் கீழே தரப்பட்டிருக்கிறது.

—ஆசிரியர்]

ஏறக்குறைய நான்கு ஆண்டுகளுக்கு முன், 1952-ம் ஆண்டு அக்டோபர்மீ 2-ந் தேதியன்று, சென்னை ராஜ்யத்திலே, முதன் முதலாக சில வட்டாரங்களில் சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் அமலுக்கு வந்தன. அத் தேதிக்குப் பிறகு, பல தேசிய வளர்ச்சித்திட்ட வட்டாரங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றில் சில, சில மாதங்கள் கழிந்தபின்னர் சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. இதுகாறும், இத் திட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதையும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டங்கள் எங்ஙனம் நிறைவேறும் என்பதையும், நான் உங்களுக்கு எடுத்துக்கூற உத்தேசித்திருக்கிறேன்.

திட்டத்தின் இலட்சியம்

கிராமிய வாழ்க்கை சம்பந்தப்பட்ட சகல அம்சங்களிலும் அபிவிருத்தி காணுவதே, சமுதாய அபிவிருத்தி, தேசிய வளர்ச்சித் திட்டங்களின் நோக்கமாகும். சமுதாயத்திலே சிறந்ததொரு மாறுதலை உண்டாக்க கிராம மக்கள் ஒன்று கூடி முயற்சிக்கவேண்டும். இத்தகைய சூழ்நிலையை சிருஷ்டிப்பதே, இத்திட்டங்களின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. தங்கள் நலனுக்கு இன்றியமையாதனவாக விளங்கக்கூடிய திட்டங்களை வகுப்பதிலும், அவைகளை நிறைவேற்றுவதிலும், மிக்க பொறுப்புடனும் திட்சண்யத்துடனும், கிராம மக்கள் ஈடுபட்டு வருகிறார்கள். அரசாங்கத்தினரின் கடமையோ, கிராம மக்களுக்குப் புது வாழ்வை உருவாக்குவதிலே உதவிபுரிவதாகும்.

திட்டத்தை அமல் நடத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பிரதேசங்கள் திட்ட வட்டாரங்களாக விளங்குகின்றன. கிராம வாழ்க்கையைப் பொறுத்துள்ள சகல துறைகளிலும் அபிவிருத்திகாண, திட்டங்கள் வகுக்கப்பட்டு, இவ் வட்டாரங்களிலே நிறைவேற்றப்படுகின்றன.

அபிவிருத்திக்கென வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அவ்வட்டாரத்திலுள்ள கிராமங்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, அபிவிருத்திக்கான கூட்டுத் திட்டம் ஒன்று அவ்வட்டாரம பூராவிலும் அமல் நடத்தப் படுவதற்காக வகுக்கப்படுகிறது. வட்டாரத்தின் தேவைகளை யனுசரித்து வகுக்கப்பட்டிருக்கும் இத்திட்டம், வட்டார ஆலோசனைக் குழுவினராலும் அங்கீகரிக்கப்படுகிறது.

வட்டாரத்திற்கொரு திட்டம்

யாரோ சில அதிகாரிகள் திட்டத்தை வகுத்து விட்டால் மட்டும் போதுமானதல்ல. குடும்பத் திட்டங்கள், கிராமத் திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், வட்டாரத்திற்குரிய திட்டம் வகுக்கப்பட்டிருக்கவேண்டும். குடும்பம் ஒவ்வொன்றும் தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்றால், தன் மேம்பாட்டுக் கேற்ற சொந்தத் திட்டமொன்றை வகுத்துக் கொள்ளவேண்டும். குடும்பத்துக்குத் திட்டம் அத்தியாவசியம் என்பதை ஒவ்வொரு குடும்பமும் உணரவேண்டும். இந்த உணர்வு ஏற்பட்டுவிட்டால் போதும். திட்டத்தை வகுப்பதற்கு இது மிகவும் துணைபுரியும். குடும்பத்திட்டங்கள் அனைத்தும் கிராம சமுதாயத்தக் குரிய பொது நலத்திட்டங்கள் அனைத்தும், அபிவிருத்தித் திட்டத்தில் அடங்கியிருக்க வேண்டும். வட்டார திட்டத்திலோ, கிராமத் திட்டங்கள் அனைத்தும் அடங்கியிருக்கவேண்டும். இவ்வாறு விரிவான வகையில் திட்டமிடவேண்டியது அவசியமாகும்.

"கீழேயிருந்து மேல் நோக்கித் திட்டமிடுவது" என்று கூறப்படும் இந்த இலட்சியக்கொள்கையைப் பின்பற்றுவதில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோமா என்று கேட்கலாம். சில வட்டாரங்களில், அவ்வட்டாரங்களிலுள்ள கிராம ஸ்தாபனங்களால், கிராம அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்

கின்றன வென்பது வாஸ்தவமே. ஆனால், எல்லா கிராமங்களிலும் கிராம அபிவிருத்தி திட்டங்கள் மேற்சொன்ன முறையில் குடும்ப அபிவிருத்தித் திட்டங்களை அடிப்படையாகக்கொண்டு வகுக்கப்பட்டன என்று கூறுவதற்கில்லை. மேலும், கிராமங்களிலும் வாழும் குடும்பங்கள் ஒவ்வொன்றும் தம் தம் அபிவிருத்திக்கான குடும்பத்திட்டம் வகுத்திருப்பதாகவும் கூறமுடியாது. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். கிராமங்களில் பெரும்பாலானவற்றில், அம்மாதிரியான திட்டங்கள் வகுக்கவேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டிருக்கிறது. அந்த உணர்வு மேலும் வலுப்பட்டு வருகிறது. இவ்வாறு, மக்கள் மனதிலே உணர்ச்சியை உண்டாக்கியதையே, திட்ட சாதனைகளில் ஒன்றெனக் கூறலாம்.

கூட்டுறவு வளர்ச்சியினால் கிட்டும் பலன்கள்

திட்டத்தின் மற்றொரு இலட்சியம், கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்துவதாகும். கிராமத்திலுள்ள குடும்பங்கள் அனைத்தும் கூட்டுறவு சங்கத்தில் அங்கம் வகித்து, சங்கத்தின் மூலம் கடனுதவியும் பொருள்களும் பெற வேண்டும். குடும்பங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களும் சங்கத்தின் மூலமாகவே விற்கப்படவேண்டும். இவ்வாறாக ஒவ்வொரு கிராமத்திலும், கூட்டுறவு சங்கங்கள் இயங்க வேண்டும். தற்சமயம் சங்கங்கள் இல்லாத கிராமங்களில், புதிய சங்கங்கள் ஆரம்பிக்கப் படுகின்றன. அத்துடன், சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் முடிந்தவரை அதிகரிக்க முயற்சிக்கப்படுகிறது. சுமார் 2,000 சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. திட்ட வட்டாரங்களிலுள்ள கூட்டுறவு சங்கங்களில் சுமார் 2 லட்சம் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். தேவைப்படும் பங்கு மூலதனத்தைச் செலுத்தச் சக்தியில்லாதவர்களும், சங்கத்தில் சேர்வதற்காக, பங்கு மூலதனத்தில் ஒரு சிறு பகுதியை மட்டும் முதலில் அவர்கள் செலுத்தி, சங்கத்தில் உறுப்பினராவதற்கு அனுமதி வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இது நடைமுறைக்கு வந்தால், முதலில் இரண்டு ரூபாயை மட்டும் ஆரம்ப மூலதனமாகச் செலுத்துபவர், பங்கு மூலதனமாகப் பத்து ரூபாய் செலுத்தியுள்ள உறுப்பினருக்குக் கிடைக்கும் வசதிகளனைத்தையும் பெறுவார். பிறகு, ஆண்டுத் தவணைகளில், தாம் கொடுக்கவேண்டிய மீதி எட்டு ரூபாயையும் செலுத்த அனுமதிக்கப்படுவார். இது, அவர், சங்கத்தின் மூலம் கடன் பெறுவதற்கும் வசதியளிக்கிறது. கடன் வசதி அளிப்பது, கூட்டுறவு இயக்கத்தின் முதல்படியே ஆகும். பிறகு, கிராமங்களில் எல்லாக் காரியங்களையும் (கூட்டுறவுப் பண்ணை உட்பட) கவனிப்பதற்குத் தக்கவாறு, கூட்டுறவு சங்கத்தின் அலுவல்களைப் பெருக்க முற்படவேண்டும். கிராம மக்களுக்குத் தேவைப்படும் சரக்குகளையும் பொருள்களையும் அவர்களிடையே நியாய விலையில் விநியோகிப்பதற்கும் அவர்கள் உற்பத்தி செய்யும் விவசாய விளைபொருள்களை சீரான விலையில் விற்பதற்கும் தகுந்தவகையில் கூட்டுறவு சங்கங்கள் இயங்கிவரவேண்டும்.

சமுதாய அபிவிருத்தியில் மக்கள் பங்கு

கூட்டுறவின் மற்றொரு அம்சத்தைப் பற்றியும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். தங்களுடைய பொது நலனுக்காக, மக்கள் ஒன்றுகூடி முயற்சித்தால் தான் கிராம சமுதாயம் அபிவிருத்தியடையும். சமுதாயப்பொது நலனுக்காக, தங்கள் நேரத்தில் ஒரு பகுதியைச் செலவிட கிராம மக்கள் மனமுவந்து தாமாக முன்வந்தால்தான் கிராம நலனுக்காகத் தேவைப்படும் வசதிகள் பல கிட்ட வழி ஏற்படும். இந்தக் கொள்கையை ஒட்டியே சமுதாய அபிவிருத்தித்திட்டத்தின் கீழ், கிராமநல வேலைகள் நடைபெறுகின்றன. இவ் வேலைகளுக்காகும் செலவில் ஒரு பகுதியை, மக்களே கொடுத்துதவவேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. இப்பங்கை, அவர்கள், ரொக்கமாகவோ, பொருளாகவோ அல்லது உழைப்பாகவோ அளிக்கலாம். மக்களிடமிருந்து இப்பங்கைப் பெறும் பொறுப்பு, கிராம ஸ்தாபனத்திடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கிராமத்தில் உள்ள குடும்பம் ஒவ்வொன்றும் எந்த அளவில் தன் பங்கை அளிக்க முடியுமென்பதை, கிராம சமுதாயந்தான் நிர்ணயிக்கமுடியும். நம் மக்கள் சிறந்த அளவிலே தங்கள் பங்கை அபிவிருத்தி வேலைகளுக்காக அளித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் கூறவிரும்புகிறேன். ஆயினும் இந்தியாவிலுள்ள மற்ற ராஜ்யங்களில் வாழும் மக்கள், அபிவிருத்தி வேலைகளுக்காக அளித்த பங்கின் அளவைப் போல், நம் ராஜ்ய மக்கள் அளிக்கவில்லை எனத் தெரிகிறது. இதுவரை, மக்கள் அளித்த பங்கின் மொத்த மதிப்பு 122 லட்சம் ரூபாயாகும். இப்பங்கு பெற்று, மொத்தம் சுமார் 2,500 மைல் நீளத்துக்குப் புதிய கிராம பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 2,000 புதிய கிணறுகள் தோண்டப்பட்டிருப்பதுடன், அநேக புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், இவ்வாறு பாதைகளை அமைப்பதற்கும், கட்டுமான வேலைகளைப் புரிவதற்கும் மட்டுமே, மக்கள் ஒத்துழைப்பைப் பெறுவது போதாது. அமைத்த பாதைகள், தோண்டப்பட்ட கிணறுகள் முதலியவைகளின் பராமரிப்பையும் கிராம சமுதாயமே கவனித்து வரவேண்டியிருக்கிறது. குறிப்பாக, காடுகள், மேய்ச்சல் நிலங்கள், குளங்கள் முதலியவற்றைச் சரிவர பராமரிக்க, கிராம மக்கள் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்.

சமூக, பொருளாதார அபிவிருத்தி

அபிவிருத்தி வேலைகள் முக்கியமானவையே யென்றாலும், அவ் வேலைகளின் பயனாகக்கிட்டும் வசதிகள், நமது குறிக்கோளை அடைவதற்கு வழி கோலுகின்றவே தவிர, அவற்றால் மட்டும் நமது இலட்சியம் பூர்த்தியடைந்து விடவில்லை யென்பதை, திட்ட மதிப்பீட்டு ஸ்தாபனம் தனது 1956-ம் ஆண்டு அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது. பாதைகள், கிணறுகள், பள்ளிக் கட்டடங்கள்—இவை, அரசினர், கிராம மக்களின் நலனுக்காகத் தங்கள் பங்கை அளிக்க முன்வந்துள்ளதை, கிராம மக்களுக்கே எடுத்துக் காட்டுகின்றன. இவ்வசதிகளுக்கான ஏற்பாடுகளைச்

செய்வது, மக்கள் மனதிலே மேலும் நம்பிக்கையை உண்டாக்குகிறது. திட்டத்தை மக்கள் உண்மையாகவே ஆர்வத்துடன் வரவேற்கும்படி செய்கிறது.

ஒரு குறிப்பிட்ட அபிவிருத்தி வேலை பூர்த்தி செய்யப்பட்டதும், மேலும் பல அபிவிருத்தி வேலைகள் நடைபெறுவதற்கு, அது சிறந்த தூண்டுகோலாக விளங்குகிறது என்பது, அனுபவ பூர்வமாக அறிந்த உண்மையாகும். ஆனால், இக்கட்டத்துக்குப் பிறகு, திட்ட அதிகாரிகள், சமூக, பொருளாதார அபிவிருத்தியை வலியுறுத்த வேண்டியது அவசியமாகி விடுகிறது.

வேளாண்மை வளர்ச்சி பெறவேண்டும்

பொருளாதார அபிவிருத்தி மிகவும் முக்கியமானதென்பது, நம் ராஜ்யத்தில் அடிக்கடி வலியுறுத்தப்பட்டிருக்கிறது. கிராம மக்களுடைய பொருளாதார அபிவிருத்தியின் முக்கியமான அம்சம், வேளாண்மையே. அபிவிருத்தி வட்டாரங்களிலே, உர உபயோகமும் பொறுக்கு விதை உபயோகமும் நான்கு மடங்கு பெருகியிருப்பது மகிழ்ச்சி தரும் செய்தியே. ஆனால், இது போதுமானது என்று சொல்வதற்கில்லை. மொத்த விவசாய உற்பத்தியைக் கூடுதலாக 40 சத விகிதம் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. பொறுக்கு விதைகள், உரங்கள், பசுந்தாளுரங்கள், பாசன வசதி—இவை போன்ற பலவற்றிற்கு ஏற்பாடு செய்வதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். ஆகையால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ஒவ்வொரு வட்டாரத்திலும், விதைப் பண்ணைகளை ஆரம்பித்து, அந்தந்த வட்டாரத்து மக்களுக்குத் தேவைப்படும் விதைகளை அளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இம் மாதிரியான பண்ணைகள் 50–ஐ, நடப்பு ஆண்டில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. விவசாயத் திட்டத்தின் கீழ், சத்துள்ள உணவுவகைகளான காய், கறி, கனி வர்க்கங்களைப் பெருக்குவதிலும் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது.

தொழில்கள் பெருக வசதிகள்

விவசாய நாடுகளில், உப தொழில்கள் மிகவும் முக்கியமானவை. விவசாயத்தில் ஈடுபடாத நேரங்களில், விவசாயிகள் உப தொழில்களில் ஈடுபடலாம். இதற்காக, கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு முதலியவற்றிற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. தரமிகுந்த கோழி, ஆடு முதலியவைகள் விநியோகிக்கப்படுகின்றன. இத்துடன், அநேகமாக எல்லா வட்டாரங்களிலும், கதர் நூல் நூற்புக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும், சர்க்காக்களுக்கு, பெருத்த கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. விவசாயப் பொருளாதாரத்தில், வேலைக்குறைவைப் போக்குவதற்கு, நூல் நூற்றல் சிறந்ததொரு தொழிலாக விளங்குகிறது. ஆகவே, நூல் நூற்பு, தோல் பதனிடுதல், பாய் பின்னுதல் போன்ற பல உப தொழில்களும், அநேக வட்டாரங்களில் வளர்ச்சியுற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சமூகக் கல்வி எதற்காக ?

ஆனபோதிலும், சமூக, பொருளாதார வாழ்க்கையில் சிறந்த மாறுதலை உண்டாக்குவது, மனித சுபாவத்தைச் சார்ந்ததொரு பிரச்னையேயாகும். கிராமப்புறங்களில் வாழும் சுமார் 700 லட்சம் குடும்பங்களின் போக்கை மாற்றும் பிரச்னையாகும் இது. மேலும், சிறந்த வாழ்க்கையை நடத்த வேண்டும், அதற்காக உழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் வைராக்கியத்தையும் மக்கள் மனதிலே உண்டாக்கி, பொது அறிவு பெற்று, புதிய வழிகளில் வாழ்க்கையை நடத்த, அவர்களை ஊக்குவிக்கவேண்டும். சொல்லப்போனால், வட்டாரங்களில் சேவை புரியும் சமூகக் கல்வி அமைப்பாளர்களின் பிரத்தியேக வேலைப் பொறுப்பாக, இச் சமூகக் கல்வி பற்றிய பிரச்னை விளங்குகிறது. வட்டாரம் ஒவ்வொன்றிலும் இரு சமூகக் கல்வி அமைப்பாளர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவர் ஸ்திரீ. சமூகக் கல்வி நிலையங்களில் இவர்கள் விவாத அரங்குகள் நடத்துவதுடன், படங்கள் மூலமாகவும் செய்தி விளக்கம் தருகின்றனர். ஸ்திரீ சமூகக் கல்வி அமைப்பாளர், கிராம மாதர் இயக்கத்தில் விசேஷ கவனம் செலுத்துகிறார். இவர்கள் செய்யும் சேவையின் பயனாக, பல மாதர் சங்கங்களும், இளைஞர் சங்கங்களும் திட்ட வட்டாரங்களிலுள்ள அநேக கிராமங்களில் உருவாகியுள்ளன.

சுருங்கச் சொன்னால், கிராம மக்கள், சமூக, பொருளாதாரத் துறைகளில் ஒத்துழைப்பு மூலம் முன்னேறி, நம் நாட்டின் சுபிட்சத் திட்டத்தில் பங்குதாரர்களாக விளங்குவதற்கு, சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் வழி வகுத்து வருகின்றன என்று கூறலாம்.

கலசபாக்கம் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்தில், 1956-ம் ஆண்டு ஜூலை 18உ-யன்று, குழந்தைகள் வளர்ச்சிப் போட்டி ஒன்று நடைபெற்றது. மேலரை கிராமத்தில் பொருட்காட்சி நடத்தப்பட்டது.

குண்டடம் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் வன மகோத்சவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மொத்தம் 14,660 கன்றுகள் நடப்பட்டன. பெல்லம்பட்டியில் பஞ்சாயத்து அமைக்கப்பட்டது. சங்கரண்டாம் பாளையத்தில், ஜூலை 9-ந்தேதியன்று வட்டாரத்திலுள்ள கிராம பஞ்சாயத்துத் தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. பஞ்சாயத்து ஒவ்வொன்றிலும், 1956-57-ல், என்னென்ன அபிவிருத்தி வேலைகள் செய்யவேண்டும் என்பதுபற்றி, அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இவ்வட்டாரத்திலுள்ள கிராம சேவகர்கள் 35 வடிசாக்கடைக் குழிகளைத் தோண்டினார்கள். 18 தெருக்களையும் 24 சேரிகளையும் சுத்தம் செய்தார்கள்.

புதிய கிராமம்

(ஸ்ரீ கோ. வெங்கடாசலபதி, கூட்டு அபிவிருத்திக் கமிஷனர், சென்னை.)

[உணவிலும், உடையிலும் சுயதேவை பூர்த்தி செய்து கொள்ளும் கிராம மக்கள் என்னென்ன வேலைகளில் ஈடுபட்டு முன்னேறிவருகிறார்கள் என்பது இங்கு எடுத்துக் கூறப்பட்டிருப்பதோடு, குடியிருப்பு வசதி, கல்வி யறிவு, கிராமத் தொழில்கள் முதலியவற்றைச் சார்ந்த அபிவிருத்தி வேலைகள் சிறப்பாக நடைபெற்று வருவது பற்றி கலையழகோடு விமரிசனம் தரப்படுகிறது.

—ஆசிரியர்]

சுதந்திர இந்தியாவை உலகத்திற்கே ஒரு புது வழி காட்டும் ஒப்பில்லாத சோஷலிஸ சமுதாயமாக மாற்றி அமைக்க வேண்டுமென்பதை நம்முடைய லட்சியமாகக் கொண்டுள்ளோம். இந்த லட்சியத்தை நிறைவேற்றுவதற்காகவே நம்முடைய மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் ஐந்தாண்டுத் திட்டங்கள் தயாரித்து அதை அமுல் செய்து வருகிறார்கள். பாரத சமுதாயம் புது உருக்கொள்ள வேண்டுமானால் இந்த தேசத்திலுள்ள ஐந்து லட்சங்களுக்கு மேற்பட்ட கிராமங்கள் புதிய கிராமங்களாக மாற வேண்டும். அன்னியர் ஆட்சியின் காரணமாக பல துறைகளிலும் பாழ்பட்டு நின்ற நம்முடைய கிராமங்களை புதிய கிராமங்களாக மாற்றியமைப்பதே சமுதாய நலத் திட்டத்தில் குறிக்கோளாகும். சென்ற ஐந்தாண்டுகளாக நம்முடைய ராஜ்யத்தில் நடைபெற்றுவரும் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் பலனாக புதிய கிராமங்களுக்குரிய அம்சங்களையும், அறிகுறிகளையும் ஆங்காங்கே காண்கின்றோம். புதிய கிராமத்தை நிர்மாணிக்க விரும்பும் கிராமத் தலைவர்களுக்கும், ஊழியர்களுக்கும் எதிர்கால கிராமச் சித்திரத்தின் தோற்றம் நன்றாகத் தெரியவேண்டும். நல்லமுறையில் வேலை செய்ய ஆரம்பித்துள்ள சில கிராமக் காட்சிகளை எடுத்துக்காட்டுவதே இன்றைய எனது பேச்சின் நோக்கமாகும்.

விவசாய உற்பத்திப் பெருக்கம்

தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தயாரித்துக் கொள்வதற்காக கிராமத்தார்கள் ஒன்றுசேர்ந்து கிராமத்தின் நிலம் முழுவதையும் பொதுவாக பாவித்து கூட்டுறவு முறையில் விவசாய வேலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். கிராமத்திலுள்ள எல்லோருக்கும் வேண்டிய உணவுப் பொருள்களின் அளவு என்ன? அதற்கு எவ்வளவு தானியங்களும், காய்கறிகளும், பழங்களும் வேண்டுமென்பதைக் கணக்கெடுத்து ஊரைச் சுற்றியுள்ள நிலத்தின் தன்மைக்கேற்றாற்போல் பயிர்செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். கூட்டு முறையில் செய்யும் இந்த விவசாயத்தின் பலனாக ஊருக்கு வேண்டிய உணவு மட்டுமல்லாமல், வெளியிடங்களுக்கும் அனுப்பிவைக்கும் அளவுக்கு உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. வெறும் தானியங்களும், காய்கறிகளும் மட்டுமல்ல. இந்த ஊரிலுள்ளவர்களுக்குப் போதுமான பாலும், மோரும் கொடுப்பதற்கு வேண்டிய பசு மாடுகளுக்கும், விவசாய வேலைகளுக்கு உபயோகப்படும் காளை மாடுகளுக்கும் வேண்டிய மேய்ச்சல் நிலங்கள் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இங்கு ஆடு யாடுகள் வளர்க்கும் தொழிலையே சிலர் தங்களுடைய முழுநேரத் தொழிலாகக் கொண்டு வேலை செய்து வருகிறார்கள். ஆண்டுதோறும் குறிப்பிட்ட அளவு மரங்கள் நடுவது என்று உறுதி கொண்டுள்ள இந்த கிராமத்தைச் சுற்றி எங்கும் பச்சைப் பசேலென்ற மரக் கூட்டங்கள் சோலைவனம் போல் காட்சியளிக்கிறது. இந்த ஊரார் தங்கள் நிலங்களுக்கு வேண்டிய உரங்களுக்கு வெளியிடங்களை நம்பியிராமல் கிராம நிலங்களுக்கு வேண்டிய பசுந்தாள் உரத்தை காலாகாலத்தில் திட்டமிட்டு தயாரித்து வருகிறார்கள். ஊர் குப்பைகளை ஒன்று சேர்த்து கம்போஸ்ட் உரமாகச் செய்து அதை உபயோகித்து வருவது மற்ற கிராமங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அங்குள்ள மக்களின் மலஜலங்களைக்கூட நல்ல உரமாக்கி உபயோகிக்கும் இந்த வழக்கம் கிராமங்கள் தோறும் பரவினால் ஊர் சுத்தமாய் இருப்பதோடும், செலவு இல்லாமலேயே நல்ல உரம் கிடைக்கும் மார்க்கமாகவும் இருக்கிறது. இந்த ஊரின் விவசாய அபிவிருத்திக்கு மூலகாரணம் ஊரின் கூட்டு உழைப்பும், நவீன விவசாய முறைகள் இன்னதென்று அறிந்து அதை அனுஷ்டிப்பதுமேயாகும்.

கதர் அபிவிருத்தி

" எங்கள் ஊருக்கு வேண்டிய துணிமணிகளுக்கு பிறர் தயவை நாடாமல் நாங்களே உற்பத்தி செய்து கொள்ளுகிறோம் " என்று பெருமிதத்துடன் சொல்லும் இளைஞர்கள் நிறைந்த இன்னொரு ஊருக்குச் செல்வோம். இந்த ஊரார் ஊரிலுள்ள சுமார் இருநூறு குடும்பங்களுக்கும் எத்தனை கெஜம் துணி வேண்டுமென்பதைக் கணக்கெடுத்து, அதை உற்பத்தி செய்வதற்கு எத்தனை கைராட்டைகள், கைத்தறிகள் வேண்டுமென்பதையும் நிர்ணயித்ததோடு அல்லாமல் அதற்குவேண்டிய பருத்தியின் அளவு எவ்வளவு என்பதை

யும் கணக்கிட்டு, அந்தப் பருத்தியை உள்ளூரிலேயே உற்பத்தி செய்கிறார்கள். விவசாய வேலையில்லாத மற்ற சமயங்களில் அங்குள்ள சகோதரிகளும், தாய்மார்களும் ராட்டினங்களில் நூற்று, சிட்டங்களாகக் குவிப்பதையும், அதைக் கைத்தறி நெசவாளர்கள் வாங்கிச் சென்று விதம் விதமான ஆடைகள் நெய்துக் குவிப்பதையும் பார்க்கும் போது,

"பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப்போம்"

என்று பாரதியார் சொல்லிய சொல் வெறும் கற்பனையல்ல, காரியத்தில் செய்து காட்டும் ஒன்றே என்பதைக் கண்கூடாக அறிந்து கொள்ளுகிறோம். இந்த கிராமத்தார்களுக்கு அம்பர் சர்க்கா என்னும் அற்புதமான புதிய நூற்புக் கருவியைப் பற்றிய செய்தி எப்படியோ எட்டியிருக்கிறது. அந்தப் புதிய சர்க்காக்கள் எங்கும் கிடைக்கும், எப்போது தங்களுடைய கிராமத்திற்குவரும் என்பதைப் பற்றி அறிந்து கொள்ள மிகுந்த ஆவல் உள்ளவர்களாக காணப்படுகிறார்கள். கிராமவாசிகள் தங்களுக்குத் தேவையான ஆடைகளைத் தாங்களே தயார் செய்வதென்று தீர்மானித்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தால், அது வெகு சுலபமாக செய்யக்கூடிய காரியம் என்பதை இந்தப் புதிய கிராமம் எடுத்துக்காட்டுகிறது.

கிராமத் தொழில்கள் வளர்ச்சி

இந்தச் சமயத்தில் புதிய கிராமங்களை நிர்மாணிக்க விரும்பும் ஊழியர்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். கிராமங்களில் இன்று காணப்படும் வறுமைக்கெல்லாம் காரணம், அங்கு தொன்று தொட்டு இருந்துவந்த கிராமக் கைத்தொழில்கள் அழிந்து போனதேயாகும். அங்கு உற்பத்தி செய்யப்படும் உணவுத் தானியங்களைத் தவிர, மற்ற எல்லாவகைப் பொருட்களையும் நகரங்களிலிருந்தே இன்றைய கிராமவாசிகள் வாங்க வேண்டியிருக்கிறது. பருத்தி, எண்ணெய் வித்துக்கள், கரும்பு முதலான மூலப்பொருள்களை அவர்கள் கிராமங்களிலேயே பயிர் செய்தபோதிலும், தங்களுடைய உடனடியான தேவைக்குத் தயாரான பொருள்களை வாங்குவதற்காக அவற்றை நகர மக்களுக்கு விற்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இதனால் அவர்கள் எல்லாவற்றிற்கும் நகரங்களையே நம்பி வாழ வேண்டியவர்களாகிறார்கள்.

தங்களுடைய உடனடியானத் தேவைகளுக்காகவும், துணிமணி முதலியன வாங்குவதற்காகவும் பால், தயிர், வெண்ணை போன்ற பொருட்களை கிராமவாசிகள் விற்க வேண்டியிருக்கிறது. பணத்தினுடைய மதிப்பு அடிக்கடி மாறிக்கொண்டு வருகிற விஷயம் அவர்களுக்குப் புரியாததாக இருக்கிறது. பணம் சமூகத்தில் ஒரு தவறான மதிப்பை உண்டாக்கியுள்ளது. தானியம், காய்கறிகள், பால் முதலிய மக்களுக்குத் தேவையான பொருள்களை உண்டாக்கி உண்மையிலேயே எல்லாச் செல்வங்களுடனும் வாழும் கிராமவாசி, காகிதத்தாலான ரூபாய் நோட்டுகளுடனும், தங்கம், வெள்ளியால் செய்யப்பட்ட சில பொருள்களுடனும் வாழும் நகரவாசிகளைப் பார்க்கும் போது தங்களை ஏழ்மையானவர்கள் என்று கருதுகிறார்கள்.

கிராமவாசிகள் தாங்கள் தான் உண்மையிலேயே செல்வம் படைத்தவர்கள் என்பதை உணர்ந்து, தங்களிடமுள்ள பால், தயிர், வெண்ணெய் போன்ற பொருட்களை நகரங்களுக்கு கொண்டு போய் அவர்கள் கொடுக்கும் விலைக்கு கொடுத்துவிட்டு வராமல் இருக்கவேண்டும். இப்படிச் செய்தால் நகரவாசிகள் தங்களுக்குத் தேவையான பொருள்களைத் தாங்களே நேரில் கிராமத்திற்கு வந்து வாங்குவார்கள்: அப்போது கிராமவாசிகளும் தங்கள் விருப்பப்படிச் செய்யலாம். இது எனக்கு மட்டுமல்ல, கிராம அபிவிருத்தி வேலைகளில் பல ஆண்டுகளாக இடைவிடாது} சிந்தித்து வருவோர் அனைவரும் கண்டறிந்த உண்மையாகும்.

கிராமங்களில் குடியிருப்பு வசதி

உணவிலும், உடையிலும் சுயதேவை பூர்த்தி செய்து கொள்ளும் புதிய கிராமத்து வேலைகளைச் சென்று பார்த்தோம். இதேபோல் குடியிருப்பு வசதி எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ள ஒரு கிராமத்திற்குள் செல்வோம். இந்த கிராமத்தைச் சுற்றி ஐந்தாறு மைல் தூரத்தில் கிடைக்கக்கூடிய பொருள்களைக் கொண்டே அழகான நல்ல நல்ல வீடுகள் அமைத்திருக்கிறார்கள். அவைகள் போதுமான காற்றும், வெளிச்சமும், மற்ற வசதிகளும் உள்ளதாக இருக்கின்றன. அந்தச் சிறிய அழகிய வீடுகளுக்கு முன்னால் முற்றமும், வீட்டிலுள்ளவர்களின் உபயோகத்திற்கான காய்கறிகள் முதலியன பயிரிட சிறிது கொல்லை நிலமும், தங்களுடைய ஆடுமாடுகளைக் கட்டிக்கொள்ளத் தொழுவமும் அமைந்திருக்கின்றன. தெருக்களும், சந்துக்களும் தவிர்க்கக் கூடிய அசுத்தங்கள் இல்லாதவாறு சுகாதார முறையில் அழகாக அமைந்திருக்கின்றன. சாக்கடை நீரும், மழைக்காலங்களில் மழை நீரும் தடையில்லாமல் ஒழுங்காக ஓடுவதற்கேற்ற முறையில் சாக்கடைகள் அமைத்திருக்கிறார்கள். இந்த கிராமத்தின் குடிதண்ணீர் தேவைக்குப் போதுமான இரண்டு நல்ல கிணறுகள் அங்கு இருக்கின்றன. இந்த ஊருக்குப் புதியதாகக் கிடைத்துள்ள மின்சார உதவியைக் கொண்டு இந்த கிணற்று நீரைப் பெரிய தொட்டிகளில் சுகாதார முறையில் தேக்கி அதை ஊரிலுள்ள எல்லா தெருக்களுக்கும் கொண்டு செல்லும் குழாய்கள் அமைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும் அந்த ஊர் வாலிபர்களைக் காணும்போது,

"ஒளி படைத்த கண்ணினாய்,
உறுதிகொண்ட நெஞ்சினாய்,
இளைய பாரத்தினாய் வா வா வா"

என்று பாரதியாருடன் சேர்ந்து நாமும் பாட வேண்டியவர்களாக ஆகி விடுகிறோம். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் பாதுகாக்கப்பட்ட அந்த தண்ணீர் வசதி ஜாதி வித்தி

யாசமில்லாமல் அங்குள்ள எல்லா இனத்தார்களுக்கும் உபயோகப் படக்கூடியதாக இருக்கவேண்டு மென்ற எண்ணத்தோடு செய்யப்பட்டிருப்பதாகும். இந்தப் புதிய வீடுகள் அமைக்கும் திட்டத்தில் கிராமத்திலுள்ள தச்சர்களுக்கும், கொல்லத்துக்காரர்களுக்கும், கூரை ஓடுகள் செய்யும் குயவர்களுக்கும் எவ்வளவு வேலை கிடைத்திருக்கிறது என்ற கணக்கையும், பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சிமெண்ட் என்னும் எந்திர சுண்ணும்பின் உதவியில்லாமல் உள்ளூரிலேயே உற்பத்தி செய்யக்கூடிய செங்கல்லாலும், சுண்ணும்பாலும், ஓடுகளாலும் எங்கள் ஊர் வீடுகளை எவ்வளவுஅழகாக அமைத்திருக்கிறேம் பாருங்கள் என்று கூறும் அந்த இளைஞர்களைப் பார்த்து சபாஷ் என்று கூறவேண்டியவர்களாக இருக்கிறேம். வீடுகள் மட்டுமல்ல: திறந்த வெளியில் அழகாக அமைத்திருக்கும் நாடக மேடையும், பள்ளிக்கூட கட்டிடமும், பிரசங்க கிராம மண்டபம் முதலிய புதிய அம்சங்களும் "இது ஒரு புதியகி ராமம். இது ஒரு புதிய கிராமம்" என்று பறைசாற்றுவது போல் தோற்றமளிக்கின்றன.

பள்ளிகளுக்குக் கட்டிடங்கள்

புதிய கிராமங்களின வரிசையிலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஆர்வத்தோடு தன்ஊர் பள்ளிக்கூடத்தைப் பற்றிச் சொல்வதை சிறிது கேட்போம். "எங்கள் ஊரில் ஆதாரக் கல்வித் திட்டத்தின் கடைசி வகுப்புவரை எல்லோரும் படித்தாக வேண்டுமென்ற கட்டாயக் கல்விமுறையை தூண்டுதல் இல்லாமல் நாங்களே அமுல் செய்து வருகிறேம. பள்ளிக்கூட கட்டிடத்திற்காக சர்க்கார் சமுதாய நலத் திட்ட நிதியிலிருந்து ரூபாய் இரண்டாயிரம் தான் கொடுத்தார்கள். எங்கள் ஊர் பள்ளிக்கூட கட்டிடம் குறைந்தபட்சம் 12 ஆயிரம் பெறுமென்று எல்லோரும் சொல்கிறர்கள். பள்ளிக்கூட கட்டிடம் மட்டுமல்ல ; 8 உபாத்தியாயர்களுக்கு சர்க்கார் உதவி எதுவும் இல்லாமல் ஊர்க்காரர்களே வீடுகட்டிக் கொடுத்திருக்கிறேம். இப்போது அவைகளெல்லாம் மண்சுவரும், கூரையுமாக இருக்கின்றன. அடுத்த வருஷம் கூரையை மாற்றி ஓடுகள் வேய்வோம். ஆசிரியர்களிடமிருந்து வாடகை எதுவும் வாங்குவதாக உத்தேசமில்லை. வீட்டு வசதி மட்டுமல்ல ; பணம் இல்லாமல் ஆசிரியர்களுக்கு பாலும், மோரும் கொடுக்க ஊரார் ஏற்பாடு செய்யப் போகிறேம். எங்கள் ஊர் பிள்ளைக்குக் கற்றுத்தரும் ஆசிரியர்கள் உணவுக்கும், உடைக்கும் கவலை எதுவும் இல்லாமல் திருப்தியுடன் வாழப் பார்த்துக்கொள்ள வேண்டியது, எங்கள் கடமையல்லவா? இன்னும் இரண்டு வருஷங்களுக்குள் பள்ளிக்கூடத்தைச் சுற்றி ஒரு பெரிய பூங்கா அமைப்பதற்குத் திட்டமிட்டு இருக்கின்றேம். பள்ளிப் பிள்ளைகளுக்கும் மட்டுமல்ல ; ஓய்வு பெற விரும்பும் பெரியவர்களுக்கும் இந்த இடம் ஆனந்தமும், அமைதியும் கொடுப்பதுடன், அவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுக்கக்கூடிய இடமாகவும் அமைய வேண்டுமென்று விரும்புகிறேம்." கல்வியில் ஆர்வமுள்ள இந்த இளைஞர் கூறும் வார்த்தைகள் ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதற்கு பணமில்லையே என்று கவலையோடு இருக்கும் அரசாங்கத்திற்கு ஒரு புது வழி காட்டுவதாக இருக்கிறது. கல்வியும், கட்டடமும் மட்டுமல்ல ; படிக்க முடியாத ஏழைப்பிள்ளைகள் என்று யாரும் இல்லாமல் செய்வதற்கு அந்த ஊரார் பொது நிதியிலிருந்து ஒரு வேளை நல்ல உணவு கொடுப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறர்கள். அதை ஆரம்பித்து வைப்பதற்கு இன்னும் ஒரு வாரத்தில் கல்வி இலாகாத் தலைவர் தங்கள் கிராமத்திற்கு விஜயம் செய்யப் போவதை பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகிறர் அந்த இளைஞர்.

கிராம அபிவிருத்தி வேலைகளையெல்லாம் சட்டபூர்வமான பஞ்சாயத்துக்கள் மூலம் செய்விக்க வேண்டுமென்பது சமுதாய அபிவிருத்தித் திட்டத்தினுடைய நோக்கமாகும். இந்த நோக்கத்திற்கு இணங்க சில பஞ்சாயத்துகள் ஆங்காங்கு வேலை செய்ய ஆரம்பித்திருக்கின்றன. புதிய பஞ்சாயத்துக்கள் ஊரின் பள்ளிக்கூடத்தை நிர்வகிப்பதோடு, ஒரு புத்தகசாலையையும், ஒரு வாசகசாலையையும் நடத்தும். அதோடு வயது வந்தவர்களுக்கு ஒரு இரவு பள்ளிக்கூடமும், விளையாட்டுக்களுக்கும், தேகப் பயிற்சிகளுக்கும் ஏற்பாடு செய்யும். கலைகள், கைத்தொழில்கள் சம்பந்தமான பொருட்காட்சியும், கிராம விழாக்களும், சந்தையும், பஜனைகளும், காலாட்சேபங்களும் நடைபெற வழி செய்யும். கிராமக் கூத்துகள், நாட்டியங்கள், நாடகங்கள் முதலியவற்றை ஆதரிப்பதோடு, கிராமத்திற்கான காவல் ஏற்பாடுகளையும் கவனித்துக்கொள்ளும். கிராமத்தில் தற்காப்புக்கான பயிற்சியை அளிக்கும். வரி வசூலித்து, அதன்மூலம் நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய வசதிகளையும், கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தி, அதன் மூலம் நல்ல விதைகளையும், விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளையும் கொடுத்துதவும். தரிசாகக் கிடைக்கும் நிலங்களை, கூட்டு முயற்சியால் சாகுபடிக்குத் தயார் செய்யும். கிராமங்களுக்கு வேண்டிய கைத்தொழில்களின் வளர்ச்சிக்குப் பாடுபடுவதோடு, பண்டமாற்றுதலையும் வியாபாரத்தையும் கவனித்துக்கொள்ளும். சுகாதார, வைத்திய உதவியும் கிராமத்திற்கு நல்ல முறையில் கிடைக்கச் செய்யும். வழக்குகளைத் தீர்த்து நீதி வழங்கும். சுருங்கக் கூறின் கிராம நிர்வாகத்திற்குத் தேவையான எல்லா அதிகாரங்களையும் இந்தப் பஞ்சாயத்திடம் இருக்கும்.

கிராம மாதர் நலம்

குடும்பங்களின் மேம்பாட்டிற்குத் தாய்மார்களின் சேவை எவ்வளவு அவசியமென்பதை எல்லோரும் அறிவார்கள். நம் நாட்டில் நல்ல பண்பாடுகளை யெல்லாம் போற்றிப் பாதுகாத்து வருபவர்கள் நம் தாய்மார்கள். கிராமங்களிலே ஓரளவு லக்ஷ்மிகரம் இன்றிருப்பதற்கு அவர்களுடைய இடைவிடா முயற்சியே ஒரு முக்கிய காரணம். அதே சமயத்தில் கிராமங்களின் பொது நல வாழ்வில் ஓரளவு பங்கு கொண்டு தம்மாலான கடமையைச் செய்யவேண்டிய புதிய பொறுப்பு இப்போது நம்முடைய கிராமங்களில் வாழும்

G.N.—2A

மாதர்களுக்கு ஏற்பட்டுள்ளது. சுதந்திர இந்தியாவில் ஏற்பட்டுள்ள இந்த புதிய பொறுப்பை நம் நாட்டு மாதர்கள் வகிக்கப் பின்தங்க மாட்டார்கள் என்பதை அவர்கள் நிரூபித்து வருகிறார்கள். குடும்பத்திற்கான உணவு, உடை, ஆடு மாடுகள், குழந்தைகள் முதலிய செல்வங்களைத் தக்கவாறு பாதுகாத்து, போற்றி வளர்ப்பது நாம் நிர்மாணம் செய்ய விரும்பும் புதிய கிராமத்தில் ஒரு சிறந்த அம்சமாகும்.

இம்மாதிரி ஒரு புதிய கிராமத்தை அமைப்பது என்பது வெறும் மனக்கோட்டையல்ல. இத்தகைய புதிய கிராமங்களைக் காண விரும்பினால் தமிழ் நாட்டிலுள்ள சமூதாய அபிவிருத்தித் திட்ட வேலைகள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று, புதிய கிராமத்திற்கு அடிகோலி வரும் சில இடங்களை நேரில் சென்று பார்க்கலாம்.

"ஞாலம் கருதினும் கைகூடும்" என்ற பொய்யா மொழி பிறந்த தமிழ் நாட்டில் காந்தியடிகளைப் போன்ற தலைவர்கள் நிர்மாணம் செய்ய விரும்பிய புதிய கிராமங்களை அமைப்பது ஆகாத காரியமல்ல. "எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்" என்னும் தமிழ் வேதத்தில் கண்ட உண்மையை மனதில் இறுத்தி, பாரத நாடு வளம் பெறவும், கிராமங்கள் தழைக்கவும் எல்லோரும் ஒன்று பட்டு உழைப்போமாக.

(அகில இந்திய ரேடியோ ஒலிபரப்புப் பேச்சு)

முதல் அமைச்சர் சுற்றுப் பிரயாணம்

ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலூக்காக்களுக்கான ஒருங்கு படுத்தப்பட்ட கிராமக் கடன் விற்பனை வசதி கூட்டுறவு முன்னேற்றத் திட்டத்தை 1956-ம் ஞு ஜூலை மீ 19உ-யன்று இராமநாதபுரம் மாவட்டக் கழகத் தலைவர் திரு S. ராமசாமி நாயுடு, M.L.A. அவர்களின் தலைமையின் கீழ் சென்னை முதலமைச்சர் திரு கே. காமராஜ் அவர்கள் துவக்கிவைத்தார்கள். பின்னர், முதலமைச்சர் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் உகாண்டப் பருத்தி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் ஆதரவின்கீழ் எழுப்பப்படவிருக்கும் பருத்தி அரைக்கும் ஆலைக்கு அஸ்திவாரக் கல்லை நாட்டினார்கள்.

மாலையில் P. ராமச்சந்திரபுரத்தில் எழுப்பப்பட்டுள்ள பல நோக்க கூட்டுறவுச் சங்கத்தின் கிட்டங்கியின் வரலாற்றைப்பற்றி திரு ரா. கிருஷ்ணசாமி நாயுடு, M.L.A. அவர்கள் பேச மாநில கூட்டுறவு பதிவாளர் அவர்கள் கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைத்தார்கள். திரு கே. காமராஜ் அவர்கள் கிட்டங்கியைத் திறந்து வைத்தார்கள்.

பின்னர் வத்திராயிருப்பில் சமுதாய நலத் திட்ட உதவியினால் கட்டப்பட்டுள்ள பிரசவ விடுதியையும் திரு கே. காமராஜ் அவர்கள் திறந்து, துவக்கிவைத்தார்கள்.

சுந்தரபாண்டியம் பால் விற்பனை கூட்டுறவு சங்க துவக்க விழா

ஸ்ரீவில்லிபுத்தூர் சமுதாய நலத் திட்டத் தொகுதியைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் Q 820 பால் கூட்டுறவு சங்கத் துவக்க விழா 29-7-56 காலை 10-மணிக்கு திரு A. வைகுண்டம், M.L.A. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சிவகிரியில் கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாம்

ஊத்துக்கோட்டை வட்டாரத்திலுள்ள சிவகிரியில், 1956-ம் ஞு ஆகஸ்ட்டு மீ 3உ-யன்று, கிராம தலைவர்கள் பயிற்சி முகாம் திறப்பு விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சிவகிரி மக்களின் சார்பில் ஜில்லா போர்டு உறுப்பினர், ஸ்ரீ ஜி. செங்கம நாயுடு, சென்னை கவர்னர் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரமொன்றை வாசித்துக் கொடுத்தார்.

கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாமைத் திறந்து வைத்து கவர்னர் ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா பேசுகையில், கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு தற்போது ஏராளமான மக்கள் குடியேறுவதாகவும், மக்கள் நல் வாழ்வுக்கான வசதிகள் கிராமங்களில் இல்லாததே இதற்குக் காரணமென்றும், இவ் வசதிகளை ஏற்படுத்த, கிராமத் தலைவர்கள் தகுந்த பயிற்சி பெற்று, பொறுப்பேற்றுக் கொண்டு பணிபுரிய வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

அடிஷனல் அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ என். இ. எஸ். ராகவாச்சாரி அவர்கள் பிறகு பேசுகையில், 'சமுதாய அபிவிருத்தித் திட்டம் என்றால் என்ன ? திட்டத்தால் கிராம மக்கள் பெறும் பலன்கள் யாவை ?' என்பவற்றைப்பற்றி விளக்கினார். ஸ்ரீ ஜி. சிவய்யா வந்தனோபசாரம் கூற, விழா இனிது முடிவுற்றது. இவ்விழாவை யொட்டி, ஊத்துக்கோட்டை வட்டார அபிவிருத்தி அதிகாரி, ஸ்ரீ சி. பு. பெருமாள் வெளியிட்டுள்ள சிறப்பு மலரில், அரசியல் பிரமுகர்களும் அதிகாரிகளும், சிவகிரி கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாம் வெற்றிபெற வாழ்த்தியுள்ள செய்திகள் பல பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், சிந்தனையைத் தூண்டும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல, ஆங்கிலம், தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளிலே, அச்சிறப்பு மலரில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

கோவில்பட்டி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஞு ஜூலை மாதத்தில் 280 மணங்கு உரம் விநியோகிக்கப்பட்டது. சுமார் 300 ஏக்கர் நிலத்தில் பசுந்தாளுரச் செடி சாகுபடி செய்யப்பட்டது. 200 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. 284 கால்நடைப் பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. இரு இளைஞர் மன்றங்களும், மாதர் சங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டன. 17 சேரிகள் துப்புரவு செய்யப்பட்டன. கீழ ஏரால் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று திறக்கப்பட்டது. இந்நிலையத்துக்குத் தேவைப்படும் புதிய கட்டிடத்தைக் கட்ட 20-7-56-ல் முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் அஸ்திவாரக்கல் நாட்டினார். திலகர் நூற்றாண்டு விழாவையொட்டி, நூற்புப் போட்டி நடத்தப்பட்டது.

துணியும் கதரும்

[ஸ்ரீ எஸ். லட்சுமிரதன் பாரதி, துணை அபிவிருத்தி கமிஷனர்.]

அன்னியத் துணியைத் தள்ளி விலக்கும் திட்டம், நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஓர் முக்கியமான அணி வகுப்பாயிருந்தது. கதர் அதற்கு ஆதாரமாகத் தோன்றியது. பின்னுல் மக்களுக்கு இன்றியமையாத உடையில் தன்னிறைவு கொள்வதற்கு, கதர் சிகரமாக உருவாகியது. கதரைப்பற்றி மக்களிடத்தும் ஊழியர்களிடத்தும் பல சந்தேகங்கள் இன்று எழுகின்றன. நாடு விடுதலையடைந்த பின், மக்களின் துணித் தேவைகளை நமது நாட்டு ஆலைகள், கைத்தறிகள் ஆகியவற்றின் மூலமே தேடிக்கொள்வதால், கதருக்கிருந்த அரசியல், பொருளாதாரச் சிறப்புகள் அறவே ஒழிந்துபோனதாகப் பெரும்பாலோர் நினைக்கிருர்கள். நூற்றுயிரக் கணக்கான கைத்தறிக்காரர்கள் ஆலை நூலைக் கொண்டே, ஆடைகள் நெய்து பிழைப்பதால் கையால் நூற்ற நூலைக்கொண்டு நெய்த கதரையே அணிய வேண்டுமென்பது, அவர்களுக்குப் பாதகமெனவும் பலர் கருதுகிருர்கள். இன்னும் கதர், கைராட்டை, இவற்றின் தரத்தையும் திறத்தையும் உயர்த்தும் முயற்சிகளினுல், இப்பொழுது கண்டுபிடித்திருக்கும் நாலு கதிர்களையுடைய (ஏகா) அம்பர் சர்க்கா, அதனினும் பெரிய 16 கதிர்களுடன் இயங்கும் விசைச் சர்க்கா போன்றவை, கதருக்கு பொருத்தமா அல்லது விரோதமா என்ற கேள்விகளையும் எழுப்பியிருக்கின்றன. இவற்றினும் எளியதும், கையினுலேயே இயக்கி ஒரே கதிரில் அதிக நூல் உற்பத்தி செய்யக் கூடியதுமான 'சுதர்சன்' சர்க்காவை மைசூரில் கண்டு பிடித்திருப்பதாகப் பத்திரிக்கையில் படிக்கிருேம். இன்னேரன்ன பலதிறப்பட்ட நிகழ்ச்சிகளினுலும் வளர்ச்சிகளினுலும் நிர்மாண ஊழியர்கள் முதற்கொண்டு மந்திரிகள் வரை வலுத்த கருத்து வேற்றுமைகள் வெளிப்பட்டு மக்களிடையே மயக்கம் விளைவிப்பதை நாம் காணுகிருேம்.

உலகத்திலே பல்லாயிரக் கணக்கானவை தம்மில் வேறுபடுவதின் மூலம் ஒன்றிற்கொன்று விரோதமென எடுத்துக் கொள்வது நியாயமல்ல. ஆய்ந்து அவற்றினூடேயுள்ள பொருத்தத்தைக் காணுவதே அறிவுடைமை. ஆராய்ந்து பார்த்தால் இன்றைய நிலைமையில் நம் நாட்டில் கைராட்டை அம்பர் போன்ற விசைராட்டை, கைத்தறி, விசைத்தறி, ஆலைத்தறி ஆகியவற்றிற்கு அது அதற்குரிய இடமிருக்கிறதென்று புலப்படும்.

வாழ்க்கை நிறைவு, குடி செயல் வகை போன்ற மக்கட் பண்புகள் வழி நோக்கினுல் இவற்றிற்கிடையே உள்ள தராதரங்களையும் காணலாம். அவற்றை நாம் புறக்கணித்து, கேவலம் பொருள் ஒன்றைமட்டும் கருதி, இவற்றின சிறப்பு நயங்களை மதிப்பிடுவதற்கில்லை. அப்படிச் செய்தால் கதர் ஒருநாளும் ஆலைத்துணியோடு எதிர்த்து நிற்கவியலாது; ஏன், கைத்தறித்துணிகூட போட்டிபோட முடியாது.

மனையற மாட்சி

மனித வாழ்க்கையில், குடும்பம், இன்னும் நாகரிகத்திற்கும், பண்பிற்கும், இன்பத்திற்கும் நிலைக்களனுக நிற்கின்றது என்னும் அரசியல், சமய பொருளாதார வளர்ச்சிகளினிடையேயும், நெருக்கடிகளினிடையேயும் இல்லறத்திற்கே பெரிய இடுக்கண்கள் ஏற்பட்டு, கொள்கையளவிலும் கூட மனை மாண்பினைப் புறக்கணிக்கும் சிந்தனைகள் வெளிப்படுகின்றன. பெரும் போர்கள், ஆண்களையும் பெண்களையும் பெருவாரியாக ஓரிடத்தில் கொண்டு குவிக்கும் நவீன ஆலை உற்பத்திமுறைகள், ஒழுக்கத்திற்கு ஊனம் விளைவிக்கும் சமயப் பித்தலாட்டங்கள், மனையறத்தைப் பாழ்படுத்திச் சிதைத்து வேரறுக்கின்றன.

உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றும் ஒரு குடும்பத்தின் அரணுக்கும் ஆக்கத்திற்கும் அடிப்படை. அவற்றில் தன்னிறைவு பெற்றுலன்றி மனையற மாட்சியில்லை. இல்லாள் ஆக்கி அளிக்கும் அருஞ்சுவை உண்டியை நிகர்க்கும் கதர். நகரப் பொது விடுதிகளில் வாங்கி அருந்தும் உணவைப் போன்றவை கைத்தறித் துணிகள். போர்க்களம், பெருந் தொழிற்சாலைகள், விழவுகளில் மாந்தர் குவியும் நெருக்கடிகளில் வழங்கும் தயாரித்த தகரவைப்பு ஆகாரங்களை ஒக்கும் ஆலை ஆடைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயத்திற்கு உகந்தது. காந்தியடிகள் கதரின் உயிர் நாடி குடும்பத் தன்னிறைவுக் கொள்கையில் உறைவதைக் கண்டறிந்து வற்புறுத்தினுர். மனை மாட்சி வேண்டில் காதலைப்போன்று, கதரும் அகத்தில் ஆட்சிபுரியும்.

தன்னிறைவுபெற இராட்டை அவசியம்

பழைய இராட்டினம், கிசான் சர்க்காக்களைப் போன்று எளியவர்களுக்கும் கிராமங்களில் பயன்படத்தக்க முறையில் உற்பத்தி செய்யக்கூடிய கைராட்டைகள் எல்லாம் தன்னிறைவு விரும்பும் அகத்திற்குச் சாலச் சிறந்தவைகளாகும். ஆனுல் எளிய குடும்பத்தின் சக்திக்கு அப்பாற்பட்ட விலை உயர்ந்த சர்க்காக்களோ, அல்லது அவர்களது தேவைகளுக்கு மேற்பட்ட, விசைச் சர்க்காக்களைக் கொண்டு உற்பத்திசெய்யக் கூடிய நூலோ, புறத் துறையில்தான் பயன்படும்; அவை சமூக, சமுதாய, அரசாங்க ஆதரவுகளின்றி நிலைக்கவோ, வளரவோ மாட்டா! எனவே தன்னிறைவுக் கொள்கைக்கு அவை அதீதமானவை

என்று சொல்லலாமே தவிர, அவை தம்மட்டில் வெறுக்கத்தக்கன என்று தள்ளியெறிய வேண்டிய தில்லை.

நாட்டு மக்கள் தங்கள் பொருளாக்கத்தை அரசாங்கத் தின் பொறுப்போடு, பிறநாட்டு வியாபாரத்தினுல் பெருக்கிக் கொள்வதற்கு, துணிகளை ஏற்றுமதி செய்ய விரும்புகின் றனர். அத்துறையில் ஆலைத்துணிகளுக்கும், ஒருபான்மை கைத்தறித் துணிகளுக்கும் கிராக்கியிருக்கின்றது. அவ் விதம் செல்வம் தேடுவதால், கதருக்காவது, கதர்க் கொள்கைக்காவது போட்டியோ, பாதகமோ ஏற்படாது. அடுத்து நம் நாட்டில் பரம்பரையாக லக்ஷக்கணக்கான கைத்தறிக்காரர்கள், போதுமான வருமான முடைய நகரக் குடும்பங்களுக்கு ஆலை நூலினுல் நெய்த துணிகளை விற்பதும் தவருகாது.

வருமானத்தைப் பெருக்கச் சிறந்த வழி

ஆனுல் இன்றைய நிலையில் வறுமையாலும், வேலை யில்லாமையாலும், அரை குறையான வேலையாலும் வாடித்தவிக்கும் மக்களின் வருமானத்திற்கு வழிசெய்ய வேண்டிய பெறும் பொறுப்பு, மக்களையும் அவர்களது அரசாங்கத்தையும் சார்ந்திருக்கிறது. அத்தகைய தொழில் துறைகளை ஆய்ந்து தேடுங்கால் உடனடியாக ஒவ்வொரு குடும்பமும் தனது தேவைக்கு மேல் நூற்பதின் மூலம் வருமானத்தைப் பெருகச்செய்யும் திட்டம் வகுக்க வேண்டிய அவசியமேற்படுகிறது. அப்படிச் செய்வது ஆலை முதலாளிகளின் தேவைகளைவிடவும் இன்னும் கைத்தறிக் காரர்கள் ஆலை நூலை உபயோகிக்கவேண்டிய தேவைகளை விடவும் முக்கியமானது. எனவே இக்குறையை நீக்கி, நாட்டில் துணிப் பெருக்கால் பொருள் ஆக்கத்தை வளர்ப்பதற்கு, அம்பர் சர்க்காவையும் அதைச் சார்ந்த இதர விசைச் சர்க்காக்களையும் ஆதரிக்கவேண்டியது கடமையா கிறது. அவ்விதம் செய்யும்பொழுது நாட்டின் நலனுக்குப் பொறுப்பாளியான தலைவர்கள் குடும்பத் தன்னிறைவுக் கொள்கைக்கு உறைவிடமான கதருக்கு முதலிடமும், அதற்கடுத்தபடியாக, எளிய குடும்பங்களுக்கும் வருமான உயர்வு அளிக்கக்கூடிய விசைச் சர்க்காக்களுக்கு முறை யான இடங்களும், மேலும் வெளிநாட்டு வர்த்தகத்திற்கு உதவும் ஆலைகளுக்கு அடுத்த இடங்களும் அளித்து, வாழ்க்கையை வளப்படுத்தவேண்டும். இத்துறையில் குடும்பங்களின் வறுமைக்கேற்றவாறு, அதிகமான உற்பத்தி சாதன உதவிகளை நல்கி சர்வோதய சமுதாயத்தை தோற்றுவிப்பதற்கு முயற்சிப்பார்கள். இத்தகைய கவனத் தோடும் நோக்கத்துடனும், திட்டங்களை வகுத்து வேலை செய்வது நலம். அப்பொழுது அவை கதருக்கு எந்தவிதத் திலும் விரோதமில்லாமல், அதன் தனிச் சிறப்பை போற்றி வளர்ப்பதற்கு இடமாகும்.



..... திருமங்கலத்தில் அம்பர் சர்க்கா பள்ளி துவக்க விழா நடைபெற்றபோது, ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரசாதும் அபிவிருத்தி அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்ஸலமும் அம்பர் சர்க்காவைப் பார்வை யிடுகின்றுர்கள்.

வெள்ளியணை வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு ஜூன் மாதத்தில், 64 கம்போஸ்ட் உரக் குழிகள் தோண்டப்பட்டன. 30 பவுண்டு பொறுக்கு விதைகள் விநியோகிக்கப்பட்டன. 66 கனிதரும் மரக்கன்றுகள் நடப்பட்டன. இரு தேனீக் கூண்டுகள் பாதி விலைக்கு விநியோகிக்கப்பட்டன. 168 நோயுற்ற கால்நடைப் பிராணிகளுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டது. 555 பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக் கப்பட்டது. மரத்தடியில் சமுதாய மேடைகள், பரப்பட்டி, கொட்டாபட்டி, ராயகவுண்டன் வலசு முதலிய ஊர்களில் கட்டப்பட்டு வருகின்றன. 1956-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் இவ் வட்டாரத்திலுள்ள மக்கள், அபிவிருத்தி வேலை களுக்காக, மொத்தம் ரூ. 291-4-0 ரொக்கமாகவும் ரூ. 1,775-0-0 உழைப்பு மூலமாகவும் தங்கள் பங்காக அளித்திருக்கிறுர்கள்.

இராம அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம்

(ஸ்ரீ S. வேங்கடசாமி, M.A., பொதுஜனத் தொடர்பு அதிகாரி)

சமுதாய அபிவிருத்தி என்பது இராமங்களில் நடைபெற்றுள்ள பொதுநல வேலை விவரங்கள் மட்டுமல்ல. பள்ளிக்கூட கட்டடங்கள், ரஸ்தாக்கள், ரேடியோ நிலையங்கள், இரவுப் பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றின் பட்டியலை இராம அபிவிருத்தி என்று சொல்லமுடியாது. இந்திய நாடு பூராவிலும் மலர்ந்து வரும் ஒரு புதிய சமுதாய இயக்கத்தின் வரலாறாகவே, இதை எண்ணிப்பார்க்க வேண்டும், என்பது என் வேண்டுகோள். அப்போதுதான் இதன் உண்மை நிலை நன்கு வெளிப்படும். சுருங்கச் சொன்னால், பாரத நாட்டின் சமீபகாலச் சரித்திரத்தில் ஒரு முக்கிய படலம் இப்போது எழுதப்பட்டு வருகிறது, என்று கூறலாம். எனவே, நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ள சீர்திருத்த இயக்கத்தின் கதையைப் படிக்கும் கண்ணோட்டத்தோடு நாம் இராம அபிவிருத்தி வேலைகளை ஆராயவேண்டும்.

நாட்டில் அமைதியை நிலைநாட்டி, சட்டத்தைப் பாதுகாப்பதில் மட்டும் அரசாங்கம் கருத்து செலுத்திய காலம் மாறி, மக்கள் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் அபிவிருத்திக்கான க்ஷேமாபிவிருத்தி ராஜ்யம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. நாம் பெற்ற குடியரசுத் திட்டத்தின் பரிசாக நமக்கு இந்த மகத்தான பொறுப்பு ஏற்பட்டுள்ளதை எல்லோரும் அறிவார்கள். ஆயினும் இந்த பொறுப்பை நாம் ஏற்க முடியாது என்று பலர் அஞ்சினார்கள். இப்போதுள்ள நிர்வாக இயந்திரத்தை, இதற்கு எப்படிப் பயன் படுத்த முடியும் என்று பலர் சந்தேகப்பட்டார்கள். இதெல்லாம் முடியாத காரியம் என்று பலர் ஜோசியம் கூறினார்கள். ஆனால், கடந்த ஆறு வருஷ அனுபவம், இவற்றையெல்லாம் பொய்யாக்கிவிட்டது. நிர்வாக இயந்திரத்தை, புதிய பொறுப்புக்களை ஏற்று நடத்துவதற்கேற்ற வகையில் மிகத் திறமையான முறையில் சீர்திருத்தம் செய்தாகிவிட்டது. அதே சமயத்தில், பொறுப்புக்களைப் பொதுமக்கள் பகிர்ந்து கொள்ளவும் வசதி செய்து தரப் பட்டது.

செய்தி நிலையங்கள்

இதற்கென செய்தி நிலையங்கள் (Information Centres) ஒவ்வொரு வட்டாரத்திலும் உருவாகத் தொடங்கின. நாடெங்கும் வெற்றிகரமாக நிறைவேறியுள்ள திட்டங்கள், அந்த சாதனைகளின் விவரம் முதலியவற்றை விளக்கும் அழகான படங்கள், புத்தகங்கள், பிரசுரங்கள் முதலியன தயாரிக்கப்பட்டு இராம அபிவிருத்தி வட்டாரங்களுக்கு அனுப்பப்படுகின்றன. பொது மக்களின் அறிவைப் பெருக்கவும், பொதுநல வேலைகளில் அவர்களின் ஆர்வத்தை ஈடுபடுத்தவும், முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இராம அபிவிருத்தி வேலைகள்பற்றிய விவரம், ராஜ்ய அரசாங்கத்தின் சாதனைகள், மத்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ள மகத்தான சேவைகள் முதலியன பாமரருக்கும் விளங்கச் செய்யவேண்டிய கடமை ஏற்பட்டுள்ளது.

இதை யொட்டி சென்ற ஜூலை மாதம் முழுவதும் சென்னை ராஜ்யத்தின் பல்வேறு ஜில்லாக்களிலேயும் ஐந்தாண்டுத் திட்ட பிரசார விழாக்கள் நடைபெற்றது பலருக்கும் ஞாபகமிருக்கும். நகரங்களில் மட்டுமின்றி, இராமப் பிரதேசங்களில் எல்லாம், விழாக்கள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சிறப்பாக, சமுதாய அபிவிருத்தி வேலைகள், தேசிய வளர்ச்சித் திட்டம் ஆகியவைகள் நடைபெறும் வட்டாரங்களில் பொது மக்களின் உற்சாக வெள்ளம் கரைபுரண்டோடியது என்று கூறலாம்.

மக்கள் ஒத்துழைப்புடன் நிறைவேறும் திட்டம்

இந்த விழாக்கள் எல்லாம் எதற்காக? என்ற கேள்வி எழுவது இயற்கை. சில நாட்களுக்கு முன்பு சென்னை நகரத்தில் ஐந்தாண்டுத் திட்டப் பொருட்காட்சியை ஆரம்பித்து வைத்துப் பேசிய நிதியமைச்சர் ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள், இதற்குத் தக்க பதிலளித்தார். அவர் சொன்னார், "சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, முதல் ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டபோது, அதைப்பற்றி எத்தனையோ சந்தேகங்களும் எதிர்ப்புகளும் நையாண்டியும் காணப்பட்டன. ஆனால், காலப்போக்கில் நாடெங்கும் அபிவிருத்தி வேலைகள் தொடங்கப்பெற்று தீவிர முன்னேற்றம் ஏற்பட்டபோது, மக்கள் அதன் அவசியத்தையும் உபயோகத்தையும் தக்கவாறு உணர்ந்தார்கள். அதன் விளைவாகத்தான், இன்னும் தீவிர வகையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகியுள்ளது."

"மற்ற நாடுகளிலும் இதுபோன்ற அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேறியதை உலக சரித்திரம் எடுத்துக் காட்டுகிறது. முக்கியமாக, ரஷ்ய நாட்டு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை, நாம் இச்சமயத்தில் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம். ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாத எதேச்சாதிகார வாதிகளால் உருவாக்கப்பட்ட அத் திட்டத்தை, பொதுமக்கள் ஏற்று நடத்துவதை

விட, வேறு வழியில்லாமல் இருந்தது. அதனால் பலருக்கு மனக்கசப்பும், உள்ளச் சோர்வும், ஏற்பட்டதென்றாலும், அப்படியே அதை வெளிக்காட்ட முடியவில்லை. ஆனால், நம் திட்டமோ அப்படிப்பட்டதல்ல. நம் நாட்டில் அபிப் பிராய சுதந்திரம் அளவில்லாமல் உண்டு. பொது மக்களுக்கு இத் திட்டத்தால் பயனில்லாதிருந்தால், அதை இதற்குள் வசைபாடி, சமாதி கட்டிவிட்டிருப்பார்கள். அதற்கு மாறாக, இப்போது விரிவான முறையில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றுவதில் இந்தியாவின் ஜனசக்தி முழுவதும் ஈடுபட்டிருக்கிறது. எனவே, வெறும் ஆதிக்கக் கட்டுப்பாட்டின் துணைகொண்டு மட்டுமல்லாமல், ஜனங்களின் மனப்பூர்வமான ஒத்துழைப் போடு உருவாகி நிறைவேறும் நம் நாட்டு அபிவிருத்தித் திட்டங்கள், உலக சரித்திரத்தில் எங்கும் காணாத அளவுக்கு, அதிசயமான வெற்றி அளிக்கும்" என்று நிதியமைச்சர் ஸ்ரீ சுப்ரமணியம் அவர்கள் விளக்கினர்.

அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குவதில், சமீப கால மாக பொது மக்களுக்கு அதிக சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு வருகிறது. கிராம அபிவிருத்திக் கமிட்டிகள் இதற்கென விசேஷமாக ஏற்பட்டு, தங்கள் தங்கள் கிராம அபிவிருத்திக் கான திட்டங்களை வகுத்துள்ளன. இந்த கிராமத் திட்டங்களை அஸ்திவாரமாகக் கொண்டு ஜில்லா அபிவிருத் தித் திட்டங்களும், ராஜ்ய அபிவிருத்தித் திட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அகில இந்தியாவுக்கும் திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றும் பொறுப்பைத் திட்டக் கமிஷன் ஏற்றுள்ளது.

அபிவிருத்தி கமிஷனர்கள் மகாநாடு

திட்டக் கமிஷன் தலைவர் நமது பிரதமர் நேருஜி என்பது எல்லோருக்கும் தெரியும். திட்டக் கமிஷன் உப-தலைவராக இருந்து இந்தியா முழுவதிலும் வேலைகளைச் சரிவர நடத்தும் பொறுப்பை ஏற்றிருப்பவர் ஸ்ரீ வி. டி. கிருஷ்ண மாச்சாரி அவர்கள். இவர் நம் நாட்டின் பழுத்த நிர்வாக நிபுணர்களுள் தலையானவர். நாடெங்கும் நடைபெறும் அபிவிருத்தி வேலைகளைப் பற்றி ஆராயவும், அங்கங்கே யுள்ள சிக்கல்களைக் குறித்து விவாதிக்கவும், கடந்த சுமார் நான்கு வருஷங்களாக அபிவிருத்திக் கமிஷனர்கள் மகா நாடு ஒவ்வோராண்டும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தியாவில் இருக்கும் எல்லா ராஜ்யங்களிலும் உள்ள அபிவிருத்திக் கமிஷனர்கள் ஒவ்வொரு வருஷமும் இந்த மகாநாடுகளில் கலந்து கொண்டுவருகின்றனர். ஐந் தாண்டுத் திட்ட வேலைகளில் கிராமவாசிகளுக்கு மிகவும் அவசியமாகவுள்ள சமுதாய அபிவிருத்தித் திட்டங்களில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. இவற்றில் சிறப்பாக நிர்வாகத் துறையில் செய்யவேண்டிய மாறுதல்களுக்குத் தேவையான நிதி வசதி, அவற்றை நிறைவேற்றுவதற் கான புதிய விதி முறைகள் முதலியனவற்றைத் திருத்தி அமைப்பதற்கான எல்லா நடவடிக்கைகளும் அபிவிருத்திக் கமிஷனர்கள் மகா நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

கிராம அபிவிருத்தி போர்டு கூட்டங்கள்

அதேபோன்று ஒவ்வொரு ராஜ்யத்திலும் அபிவிருத்தித் திட்டங்களைத் தீவிரமாக நிறைவேற்றுவதற்கான விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ராஜ்ய அரசாங்கத்தின் பல்வேறு இலாக்காத் தலைவர்கள், அரசாங்கக் காரிய தரிசிகள் ஆகியவர்களைக்கொண்டு போர்டு (Board) ஒன்று நியமிக்கப்பட்டு அவ்வப்போது கிராம அபிவிருத்தி வேலை கள் ஆராயப்படுகின்றன. ராஜ்ய அரசாங்கத்தின் பிரதம காரியதரிசியே இந்த கிராம அபிவிருத்தி போர்டின் (Rural Development Board) தலைவராவர். மாதத்திற்கு ஒரு முறை அமைச்சர் எல்லோரையும் அங்கத்தினராகக் கொண்ட விசேஷக் கமிட்டி ஒன்று, ராஜ்யத்தின் அபி விருத்தி வேலைகள் யாவற்றையும் விரிவாகப் பரிசீலனை செய்து வருகிறது. அதோடன்றி, கிராம அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் பொது மக்க ளுக்கு எடுத்துக்கூற சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. அந்த ந்த வட்டாரத்தில் உள்ள ஜனப் பிரதிநிதிகளின் கருத்துக் கிணங்க, திட்டங்களை உருவாக்கவும் அமுல் நடத்தவும் அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. சமுதாய அபிவிருத்தி, தேசிய வளர்ச்சித் திட்டம் ஆகிய வட்டாரங்களின் வரவு செலவுத் திட்டங்கள், அதிகாரப் பற்றற்ற அங்கத்தினர்களைக் கொண்ட ஆலோசனைக் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப் படுகின்றன. இந்த ஜனநாயக நடவடிக்கைமூலம், அபி விருத்தி வேலைகளுக்குத் தேவையான பொதுஜன சக்தியும் ஆதரவும் திரட்டப்படுவதோடு, நிர்வாகப் பொறுப்பும் பொது மக்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இத்தகைய நடவடிக்கைகளெல்லாம் ஏதோ குறிப்பிட்ட ஒரு ஜில்லாவிலோ, ராஜ்யத்திலோ மட்டும் நடைபெற வில்லை. இந்தியாவெங்கும் இத்தகைய ஜனநாயகப் பயிற்சி நடைபெற்று வருகிறது. அரசாங்க அதிகாரிகள் ஜனநாயக ஆட்சியில் புதிய பொறுப்புக்களைத் தக்கவாறு புரிந்து கொண்டு அதற்கேற்ப தங்கள் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு, அவசியமான மகாநாடுகளும், ஆராய்ச்சிக் கூட்டங்களும் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் மகாநாடு

முற்போக்கான இந்தக் கொள்கையை யொட்டி, ஜூலை மாதம் 24-ந் தேதி முதல், மூன்று நாள் சென்னை நகரிலுள்ள அரசாங்கத் தலைமைக் காரியாலயத்தில் ஒரு மகாநாடு நடைபெற்றது. ராஜ்யத்தின் எல்லா ஜில்லாக் களிலிருந்தும் வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் (Block Development Officers) அனைவரும் அங்கு வந்திருந்தனர். மேல் நாடுகளுக்குச் சென்று திரும்பிய கிராம அபிவிருத்தி அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் அம்மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில், கிராமவாசிகளின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கூறி ஸ்வீடன் போன்ற ஐரோப்பிய நாடுகள் அபிவிருத்தித் துறையில்

எப்படி முன்னேறியுள்ளன என்பதை விளக்கினர். கிராமங்களில் வேலைபார்த்து வரும் அபிவிருத்தி அதிகாரிகள் மேலும் உற்சாகத்தோடும் வேலை செய்து, கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டு மென்று கூறினர்.

கிராமத் தொழில் வளர்ச்சி

மூன்று நாள் நடைபெற்ற இந்த மகாநாடு அனுபவ பூர்வமான அநேக ஆலோசனைகளை எடுத்துக்கூறியதை, பலரும் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். அவற்றுள் மிகவும் முக்கியமானது, ஒவ்வொரு வட்டாரத்திலேயும் 'வார்தா' செக்கு, கைக்குத்தல் அரிசி, தோல் பதனிடும் தொழில், மண்பாண்டம் தயாரித்தல், பனைவெல்லம் உற்பத்தி செய்தல், முதலான தொழில்களை விஞ்ஞான முறையில் செய்வதற்கான வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுப்பதாகும். கிராம வாசிகளுக்கு வீட்டு வசதிகள் செய்து தரவும், ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது 50 புது வீடுகள் கொண்ட காலனிகளை (colonies) ஏற்படுத்தவும், சிபார்சு செய்யப்பட்டது. கிராம பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு சங்கங்கள், விவசாய சங்கங்கள் ஆகியவை தீவிரமாக வேலை செய்வதற்கான வழிவகைகள் ஆராயப்பட்டன. சமீபத்தில் நைநிடாவில் நடைபெற்ற அபிவிருத்திக் கமிஷனர்கள் மகாநாட்டில் செய்த முடிவை யொட்டி, உணவுப் பொருளுற்பத்தியை 40 சத வீதம் அதிகப்படுத்துவதற்கான ஆலோசனைகளும், அதற்கான சமுதாயக் கல்வியை பரப்பும் வழிவகைகளும் வகுக்கப் பட்டன. சிறப்பாக, கிராமங்களில் வாழும் மாதர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காக, மாதர் சங்கங்களின் வேலைகளை, குறிப்பாக பிற்போக்கு வகுப்பாரும் கலந்து கொள்ளும் வகையில் விரிவாக்க ஆலோசனை கூறப் பட்டது.

மேற்சொன்ன ஆலோசனைகளை அரசாங்கம் தக்க வகையில் ஆராய்ந்து ஆவன செய்யும் என்று தெரிவிக்கப் பட்டது. எனவே, நிர்வாகத் துறையில் கிராம மக்களின் பிரச்னைகளை அறியவும், அவற்றைத் தீர்ப்பதற்கான வழி முறைகளைக் கண்டுபிடிக்கவும் அரசாங்கம் அதிக சிரத்தை காட்டிவருவது இதனுல் நன்கு விளங்கும். இது தவிர, கிராமக் கைத்தொழில்களை வளர்க்கும் துறையில் பரீக்ஷார்த்தமாக கோவை ஜில்லாவைச் சேர்ந்த கீழ் பவானிப் பிரதேசத்தில் ஒரு விசேஷத் திட்டம், கடந்த சுமார் ஏழு மாதங்களாக நடைபெற்று வருகிறது. சென்ற வாரம் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அங்கே இதுவரையில் செய்யப்பட்ட வேலை விவரங்கள் பரிசீலிக்கப்பட்டன. சுமார் 6,000 மேற்பட்ட ஜனங்கள் பிழைப்பதற்கான கிராமக் கைத் தொழில்கள் அபிவிருத்தியாயுள்ளன. இதன் மற்றொரு சிறப்பான அம்சம், இத்தொழில்களுக்கான மூலப் பொருள்கள் முழுவதும் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த கிராமங்களிலேயே கிடைப்பனவாகும்.

சென்ற மார்ச்சு மாதம் இறுதியில் கிடைத்த புள்ளி விவரங்களின்படி, சென்னை ராஜ்யத்தில் பத்தொன்பது லக்ஷ ரூபாய்க்கு மேல், பொது மக்களிடமிருந்து உழைப்பு மூலமாகவும், ரொக்கமாகவும், பல்வேறு கிராம அபிவிருத்தி வேலைகளுக்காக, கிடைத்துள்ளன. பொறுக்கு விதைகள், இரசாயன உரம், தழை உரம், முதலியன அதிகமாக உபயோகிக்கப்பட்டுள்ளன. கிராம வாசிகளின் வாழ்வில் எல்லாத் துறைகளிலேயும் அபிவிருத்தி ஏற்படுவதற்கான பிரசாரமும், அங்கங்கே உடனடியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் சுற்றுப் பிரயாணம்

கிராமவாசிகள் அபிவிருத்தி வேலைகளில் மேலும் அதிக அக்கறை கொள்வதற்காக பொதுக் கூட்டங்களும் கண் காட்சிகளும், சுற்றுப்பிரயாணங்களும் கிராமத் தலைவர் களின் பயிற்சி முகாம்களும், அங்கங்கே நடைபெற்று வருகின்றன. நம் ராஜ்யத்து விவசாயிகள் இந்தியா வெங்கிலும் நடைபெறும் பல்வேறு அபிவிருத்தி வேலைகளை, சிறப்பாக சிந்திரியிலுள்ள இரசாயன உற்பத்தி சாலை, சித்தரஞ்சன் ரயில் உற்பத்திசாலை, முதலியவற்றை யெல்லாம், நபர் ஒன்றுக்கு ரூ. 250 செலவில், சுமார் 6 வார காலத்தில் நேரில் கண்டுவர, அபிவிருத்தி இலாக்கா ஏற்பாடு செய்துவருகிறது. வடக்கே அமிர்தசரஸ், ஹரித்துவாரம், முதலியனவும் தெற்கே தனுஷ்கோடி, ராமேஸ்வரம், மேற்கே பம்பாய், பூனு, கிழக்கே கல்கத்தா, விசாகப்பட்டிணம் முதலிய சுமார் 40 ஊர்களைக் கண்டுவர வசதி கிடைக்கும். இவையெல்லாம் பொது மக்களுக்கு நாட்டு அபிவிருத்தியில் நாட்டம் ஏற்படுவதற்கும், ஆட்சிப் பொறுப்பை பகிர்ந்து கொள்வதற்கும் சிறந்த சந்தர்ப் பங்கள் என்று சொல்லவும் வேண்டுமோ ?

(அ.இ.ரே. திருச்சி நிலையத்தில் ஒலிபரப்பப்பட்ட பேச்சு.)

"கிராம நலம்" ஆண்டு மலர்

காந்தி ஜெயந்தி மலராக, 1956, அக்டோ பரில் வெளிவரும் "கிராம நலம்" சுமார் 120 பக்கங்கள் கொண்டதாக இருக்கும். கவர்ச்சி மிக்க பல படங்கள், சிந்தனையைக் கவரும் சிறந்த கட்டுரைகள், கதைகள், பாடல்கள், முதலியன அம் மலரில் பிரசுரிக்கப் படும்.

இம் மலரின் விலை எட்டணு. சந்தாதாரர்கள், இம் மலரைப் பெறக் கூடுதலாக பணம் அனுபப வேண்டியதில்லை.

"கிராம நல" ஏஜெண்டுகள், தங்களுக்குத் தேவைப்படும் விசேஷ மலர் பிரதிகளின் எண்ணிக்கையை முன்கூட்டியே, கீழ்க்கண்ட முகவரிக்குத் தெரிவிக்கக் கோருகிறோம் :—

ஆசிரியர்,
"கிராம நலம்"
சென்னை-9.

கோரைப் பாய் நெய்தல்

[வந்தவாசி ஸ்ரீ எச். ஏ. கான், கிராம சேவக் பயிற்சியாளர், கல்லுப்பட்டி]

[கோரையும், கத்தாழையும் விளையும் வட்டாரங்களில், இந்தப் புராதன கிராமத் தொழிலை வளம்பெறச் செய்ய வசதியிருக்கிறது. கோரைப்பாய் நெய்தலைப்பற்றி இக் கட்டுரையாளர் இங்கு தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார். கலை ஆர்வமிக்க தொழிலாளர் சாயக்கோரையைக் கொண்டு பாய் பின்னும்போது, பல எழில் உருவங்களைச் சிருஷ்டிக்க முடியும்.

—ஆசிரியர்]

கோரைப்பாய் நெய்தல் நமது நாட்டில் பழங்காலந் தொட்டு செய்யப்படுவதாகும். அழகிய முறையில் இங்கு நெய்யப்படும் பாய்கள் உள்நாட்டுப் பகுதிகளில் மட்டும் அல்லாமல் உலகமெங்கும் ஏராளமான அளவு ஏற்றுமதி யாகின்றன. நமது நாட்டவரின் கைத்திறனை செவ்விய முறையில் உணர்ந்து கொள்வதற்கு அவை உதவியாகவும் இருக்கின்றன என்றும் சொல்லலாம். பத்தமடையும், வந்தவாசியும் இதில் அதிகம் பெயர் பெற்ற இடங்கள். தினசரி ஆயிரக்கணக்கில் இங்கு பாய்கள் தயாராகின்றன. ஏராளமான குடும்பங்கள் இத் தொழிலை நம்பிப் பிழைக் கின்றன.

வருவாய் உள்ள தொழில்

கோரைப்பாய் நெய்தல் நல்ல வருவாயுள்ள தொழில். குடிசைத் தொழிலாக கிராமங்களில் பெருத்த அளவில் அநேக இடங்களில் செய்யப்பட்டு வருகிறது. ஆண்-பெண் இருபாலாரும், இதில் ஈடுபடலாம். நமது நாட்டில் லட்சக் கணக்கான குடும்பங்கள் இத் தொழிலை மட்டும் நம்பி அதன் மூலம் வாழ்க்கை நடத்திவருகின்றன.

முதலில்............

நிலத்தில் பயிராகும் கோரையைத் தகுந்த வளர்ச்சி பெற்றபின் அறுத்துக்கொள்ளவேண்டும். அவைகளை இரண்டாகக் கிழித்து காயவைப்பார்கள். போதிய காய்ச்சல் கொடுத்து உயரத்திற்கு ஏற்றவாறு அடுக்கிவைத்து கட்டுகள் கட்டிவிடுவார்கள். பாய் நெய்யும்போது பாய்க்குத் தக்க வாறு கோரையின் உயரம், கனம் ஆகியவைகளைக் கொண்டு பல ரகங்களாகப் பிரித்துக்கொள்ளுவார்கள். தடித்த கோரைப் பாய்களைவிட 'நைஸ்' கோரைப் பாய்கள் பொதுவாக அனைவராலும் அதிகமாக விரும்பப்படு கின்றன. அவைகளுக்கு ஏற்றவாறு விலையும் வித்தியாசம் ஆகும். மெல்லிய கோரையைக் கொண்டு பாய் நெய்ய சிறிது நேரம் அதிகம் பிடிக்கும்.

சாயக் கோரை—கவரும் ஊரை

கோரைப் பாய்களில் பலவித வர்ணங்களைப் பார்த்திருக்கி றீர்கள். அவைகள் எப்படிக் கிடைத்தன? இயற்கையில் விளையும் கோரை ஒரே நிறமாக வெண்மையாக இருக்கும். பிறகு அவைகளுக்குப் பலவித வர்ணங்கள் கொடுப்பார் கள். துணிகளுக்குச் சாயம் போடுவது போலவே, இவை களுக்கும் சாயம் போடுவார்கள். கோரையைப் பெரிய பானை யொன்றில் போட்டு, தண்ணீர் ஊற்றி நன்றாக கொதிக்க வைப்பார்கள். பிறகு நாம் எந்த சாயம் ஏற்ற விரும்புகிறோமோ, அந்தச் சாயப் பொடியை ஒரு குறிப்பிட்ட அளவு (கோரைக்கு தகுந்தபடி) கொதிக்கும் நீரில் போட்டு, சிறிது நேரம் கழித்துப் பார்த்தால் கோரைக்கு சாயம் 'பிடித்து' இருக்கும். இவ்வாறு பல ரகங்களைக் கொண்ட பாய்கள் பார்ப்பதற்கு அழகாயும், வசீகரமானதாயும், கவர்ச்சியாகவும் இருக்கும்.

மனிதன் அழகை விரும்புவது இயற்கைதானே? சாயக் கோரையைக் கொண்டு பாயில் பலவித வேலைப்பாடுகள் செய்யலாம். வண்ண மலர்களை வரையலாம். புஷ்ப வேலைப்பாடுகள் கொண்ட ஓவியங்களைத் தீட்டலாம். தாஜ் மஹால், குதுப்மினார் போன்ற எழில் உருவங்களையும் நெய்யலாம். பொன்மொழிகள்—பெயர்—விலாசம் இவை களையும் அமைக்கலாம். ஆனால் சாதாரண கோரைப் பாய்களைவிட இத்தகைய வேலைப்பாட்டிற்கு வேலை அதிக மாகும். மிகவும் நிதானமாகச் செய்யவேண்டும். வேலை அதிகமானால் விலையும் அதிகமாகும் என்று கூறவும் வேண்டுமோ?

நூல்

கோரைப்பாய் நெய்வதற்கு தேவைப்படும் நூல் கத்தாழை நாரிலிருந்து செய்யப்படுகிறது. கத்தாழையை அழுகவைத்து நார் எடுப்பார்கள். நூல்நூற்கும் வேலையைப் பெண்கள் எளிதில் செய்யலாம். வடஆற்காடு ஜில்லா, வந்தவாசி தாலுகா வட்டாரத்தில் ஏராளமான வீடுகளில்

குடிசைத் தொழிலாக பாய்க்கான நூல் தயாரிக்கப்படுகிறது. கதர் நூல் நூற்பது போலவே இதையும் எல்லோரும் எளிய முறையில் நூற்கலாம். ஆண்களைவிட பொதுவாக சிறுமியரும், மாதர்களும்தான் இதில் அதிக ஆர்வத்துடன் நூற்கமுடியும். ஆண் இனத்திற்கே பொறுமை என்பது சற்று குறைவுதானே ! ஆண்கள் பாய் நெய்யவும் பெண்கள் அதற்கான நூல் நூற்கவும் செய்து வந்தால் குடிசைத் தொழிலாக பாய் தயாரிக்க முடியும்.

பாய் தயாரித்தல்

நீண்ட சதுரமுள்ள அளவில் குச்சுகளை நட்டு அதில் மூங்கில் கொம்புகளைப் பொருத்தி நூலை ஏற்றுவார்கள். கோரையை அடிக்கும் ' அச்சி ' யும், அதனுள் இருக்கும் அதன் கண்கள் மாறி மாறி திறப்பதாக " முக்கொம்பு " (மூன்று கொம்பு) ஒன்று நடுவில் வைக்கப்பட்டு பொருத்தப்பட்டிருக்கும். பாய் நெய்பவர் ஒரு மணையில் உட்கார்ந்து கொண்டு நெய்ய வேண்டும். கோரையை ஒவ்வொன்றாக எடுத்து நெய்வதற்கு ஒரு குச்சி பயன் படுத்தப்படும். வழ வழப்பாக இருக்கும் இதை ' குச்சாலி ' என்பார்கள். அதன் நுனி சற்று கூர்மையாகவும் ஒரு துவாரம் உள்ளதாகவும் இருக்கும். அத்துவாரத்தில் கோரையின் முனையை நுழைத்து மறுபக்கத்தில் இழுத்துக் கொண்டு அச்சியினால் அடித்து கெட்டிப்படுத்துவார்கள். ஒவ்வொரு கோரையாகத்தான் பாய் உருவாகிறது.

பாயின் நீளம் சரியாக வளர்ந்த பின்னர் நூலை வெட்டி முடிபோட்டு விடுவார்கள். பிறகு பக்க வாட்டில் உள்ள ' தலைப்பு ' பின்னப்படும். அதன் உள்ளே கோரை அல்லது நூல் கொடுத்துப்பின்னுவார்கள்.

இவ்வாறு கோரைப்பாய் உருவாகிறது.

வேதாரணியம் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு ஜூன் மாதத்தில், ஹரிஜனங்களுக்கென இரு கிணறுகள் பஞ்சநதிகுளம் கிராமங்களில் கட்டப்பட்டன. கடினவயல் கிராமத்தில் ஹரிஜனங்களின் உபயோகத்துக்காகக் கட்டப்பட்டு வரும் கிணறு வேலை பூர்த்தியாகி வருகிறது. தனிகோட்டகம் கிராம மக்கள் உழைப்பு மூலம் சுமார் 200 ரூபாய் அளித்து, ஓராசிரியர் பள்ளிக் கட்டிடமொன்றைக் கட்டி முடித்திருக்கிறார்கள். ஒரு மக்கள் மனமகிழ் மன்றமும் 3 இளைஞர் மன்றங்களும் அமைக்கப்பட்டன. பிராந்தியங்களா, ஆதனூர், தூத்துக்குடி முதலிய கிராமங்களில் உள்ள குளங்களை, கிராம மக்களே ஆழப்படுத்திச் செப்பனிட்டார்கள். ஆயக்காரன்புலம் III சேதியில் மாதர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

" கிராம சேவக் "

ஸ்ரீ கு. மணி

[நாட்டைக் காக்கும் " கிராம சேவக " நல்லதேவன், கிராமத்திற்குப் பணியாற்றச் செல்கிறான். அப்பொழுது அக்கிராமிய மக்கள் நல்லதேவனுக்குக் குதூகல வரவேற்பு கொடுத்து அழைக்கிறார்கள்.]

' ஏரு பூட்டி போவாயே அண்ணே சின்னண்ணே '
என்ற இசை.

நாட்டைக் காக்கும் நல்லதேவனே
நாளுமெங்களுடன் வாழ வந்தவனே
கூடி வந்து வாழ்வாயே தம்பி சின்னதம்பி
நம் வறுமை எல்லாம் தீருமே தம்பி சின்னதம்பி.

கால நேரத்திலே கடுகியே வந்து
கதர் உடையெல்லாம் உடுத்தினு வந்து
கலங்கிடும் மனதை எழுப்பவே வந்து
கருத்துக்கள் பலவே சொல்லவும் வந்து
(கூடி வந்து.)

எண்ணரும் வேலை இருப்பது பாராய்
எங்களைக் கொண்டு இபக்க நீ வாராய்
சங்கடங்கள் பல இருப்பது காணாய்
மங்கள கீதம் பாடியே வாராய்
(கூடி வந்து.)

பழம் பெரும் தொழிலைப் பாத்துக் காத்துக்க
உழவுத் தொழிலில் ஊக்கம் காட்டிக்க
நாட்டுப் பஞ்சத்தை நினைத்துப் பாத்துக்க
உள்ள உண்மையை உடனே உரைக்க
(கூடி வந்து.)

கிராமத் தலைவரே நீங்கதானுங்க
கிராம சேவையே மேற்கொண்டவருங்க
புண்ணிய பூமியில் புறந்தவருங்க
புவனம் யாவையும் ஆள வந்தீங்க.
(கூடி வந்து.)

G.N.—4A

சுய ஆட்சி ஆராய்ச்சி

[ஸ்ரீ K. பரமசாமி, B.A., சமுதாயக் கல்வி அமைப்பாளர், திருவண்ணாமலை]

உலகத்தின் வரலாற்று ஏடுகளை புரட்டிப்பார்க்கின்ற போது ஒவ்வொரு காலத்திற்கு ஒவ்வொரு விதமான ஆட்சி நடந்திருக்கிற தென்பதை நாம் அறிகிறோம். நமது நினைவையும், எண்ணத்தையும் தற்காலத்திற்கு செலுத்தினால் அங்கே நாம் காணுகிற காட்சி என்ன ? சிறு, சிறு கூட்டமாக மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள், அக்கூட்டம் ஒவ்வொன்றிற்கும் ஒரு தலைவன் இருந்திருக்கின்றான். அதற்கும் பிறகு கொஞ்ச காலம் தள்ளிவந்தால் சிறு கூட்டம் பெருங் கூட்டமாகமாறி, அதற்குத் தலைவனை உண்டாக்கி அவனுக்கு அரசனென்று பெயரிட்டு, மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அரசன் அரசோச்சு முறையில் தவறியதால் பிறகு சர்வாதிகாரிகள் தோன்றியிருக்கின்றார்கள். இந்த நிலையில் மக்கள் அறியாமையிலிருந்து விடுபட்டார்கள். அதன் காரணமாக உரிமையை உணரத் தலைப்பட்டார்கள். தனி ஆட்சி முடியாட்சியாக மாறியது. மீண்டும் சிந்தித்தார்கள். சிறந்ததொரு குடியாட்சியை உலகமுழுவதும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இவ்வாறு சங்கிலித் தொடர்போல, காலத்திற்கொப்ப ஆட்சி மாறிக் கொண்டே வந்து இன்று மக்களாட்சியாக மலர்ந்திருக்கின்றது.

அண்ணல் வகுத்த திட்டம்

நம் கிராமங்களில் சுய ஆட்சி இன்றேல் நாடு உருப்படாது என்று காந்தி அண்ணல் உணர்ந்தார்கள். திட்டத்தை உருவாக்கினார்கள். அதுதான் நிர்மாணத்திட்டம். இத் திட்டத்தை மக்களிடம் எடுத்துச் சொல்லி அமைதியான முறையில் புரட்சி செய்தார்கள். அதுதான் இன்று சமுதாய வளர்ச்சித் திட்டமாகவும், தேசிய வளர்ச்சித் திட்டமாகவும் மாறி மக்களுக்குத் தொண்டு புரிகின்றது. அதன் குறிக்கோள் என்ன ? கிராமத்தில் இன்று நிலவும் நிலை மாறி, கிராமங்கள் அறிவுபெற்று, தெளிவுடன் தங்கள் அன்றாட அடிப்படைத் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து—தன் நிறைவு பெற்று—பிறர் கையை எதிர்பாராமல்—" தன் கையே தனக் குதவி " என்னும் மூதுரைக் கேற்ப கடின உழைப்பும், கூட்டு முயற்சியுங் கொண்டு புது வாழ்வு வாழ வகைசெய்து, கிராம சுய ஆட்சி ஏற்படுத்துவதுதான் அதன் லட்சியம். அங்கே மக்களை வறுமை என்னும் தேள் கொட்டாமலும், பிணி என்னும் பாம்பு படமெடுக்காமலும், அறியாமை என்னும் அரக்கன் பிடியிலிருந்து விடுபடவும் அதன் காரணமாக மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்ந்து நலமிகுநாட்டை " Welfare State " உருவாக்கதான் சமுதாய வளர்ச்சித் திட்டம் பணிபுரிகிறது. அதுமட்டுமல்ல ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு குடும்பமாக மாறி, அக்கிராமத்தில் விளையும் உணவுப் பொருள்களை அவர்களே உபயோகித்து, அவர்களுக்கு வேண்டிய துணிகளை அவர்களே உற்பத்தி செய்து, கிராமத்தின் நிர்வாகத்தையும் நீதியையும் அவர்களே நடத்த வேண்டுமென்பதுதான் திட்டத்தின் அடிப்படை நோக்கம்.

பஞ்சாயத்து உள்ள கிராமங்களில் அபிவிருத்தி வேலைகள்

கிராமத்தின் நிர்வாகத்தையும், நீதியையும் பஞ்சாயத்துகளுக்குக் கொடுத்தால், பஞ்சாயத்து தலைவர்களும், அங்கத்தினர்களும், சரிவர அதிகாரத்தை உபயோகிக்கத் தகுதி வாய்ந்தவர்களா ? நீதியை நிலைநாட்டுவார்களா ? பொறுப்புடன் கடமையைச் செய்வார்களா ? கட்சிப்பூசல்கள் நிறைந்த இடமாயிற்றே? அவர்களிடம் ஒற்றுமை உணர்ச்சி இல்லையே ? பொது நலப்பணியாற்றுவார்களா ? கிராம அபிவிருத்தி வேலைகளில் கவனம் செலுத்துவார்களா ? என்ற கேள்விகள் பொறுப்புணர்ந்தவர்களின் உள்ளங்களிலே ஏற்படுவது இயற்கை—நியாயமுங்கூட. இக்கேள்விகளுக்குப் பதில் அளிக்குமுன் முதல் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் சமுதாயவளர்ச்சித் திட்டமும், தேசியவளர்ச்சித் திட்டமும் கிராமங்களில் செய்த அபிவிருத்தி வேலைகளை நம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்தி அலசிப்பார்த்தால் எந்தெந்த கிராமங்கள் நல்ல பணிகளை நிறைவேற்றியிருக்கின்றன வென்பது தெள்ளிதில் விளங்கும். எங்கெங்கு பஞ்சாயத்துகள் இருந்தனவோ அங்கெல்லாம் அதிகமான அபிவிருத்தி வேலைகள் நடந்திருக்கின்றன வென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஆனால் அந்த பஞ்சாயத்துகளில் கட்சி வேறுபாடுகிடையாதா ? உண்டு. பணபலம் உண்டா ? இல்லை. அங்கத்தினர்கள் ஒத்துழைத்தார்களா ? முற்றிலும் ஒத்துழைத்தார்கள் என்று சொல்ல முடியாது. தலைவருக்குப் போதிய அதிகாரம் உண்டா ? இல்லை—எடுப்பார் கைப்பிள்ளை. இத்தனை இக்கட்டுகளின் மத்தியில் தான் பல பணிகள் போற்றக்கூடிய முறையிலே நடத்த முடிந்திருக்கின்றன. ஊராண்மைக் கழகத் தலைவரால் தலைவரும், அங்கத்தினர்களும் வேற்றுமையாக கூட்டுணர்ச்சியுடன் உழைத்த பஞ்சாயத்துகளுமுண்டு. பல வேலைகள் தங்களின் சக்திக்கு மேற்பட்டவைகள் நடந்திருக்கின்றன.

மக்களின் மகத்தான சக்தி

மேற் கூறியவைகள் எதைக் காட்டுகின்றன ? கிராம மக்கள் தொண்டு செய்ய ஒரு சட்டபூர்வமான குழு தேவை. அவர்களிடம் மகத்தான சக்தி உறங்கிக் கிடக்கின்றது—

17 SEP 1956
MADRAS

....உதகை வட்டாரத்திலுள்ள, கொத்தமுடியில், குடிநீர் விநியோகத்துக்கான, அபிவிருத்தி வேலையை,
விவசாய அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் ஆரம்பித்து வைத்தார்....



....நட்டாபட்டியில் குடிநீர் கிணறு செப்பனிடப்பட்டிருக்கிறது....

17 SEP 1958

....ஒயிலாட்டம்....



....சோலைபட்டியில் கட்டப்பட்டிருக்கும் வாசகசாலை....இதைக் கட்ட, மக்கள் ரூ. 1,381 அளித்திருக்கிறார்கள்....

17 SEP 1958

....சொக்கதேவன்பட்டியில் விவசாய அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம், புதிய பாதை ஒன்றைத் திறந்துவைக்கிறார்....

....வடவெட்டி கிராம பாதையில் குறுக்கிட்டுள்ள கல்லை, வெடி வைத்துத் தகர்த்தெறிகிறார்கள் கிராம மக்கள்....

......ஊராண்டாரப்பனூரில் உள்ள ஊரணி செப்பனிடப்பட்டிருக்கிறது ...50 ஏக்கர் நிலத்துக்கு இதன் மூலம் பாசன வசதி கிடைத்து வருகிறது...

......ஊராண்டாரப்பனூரில் பாதை அமைப்பு வேலை......புதிய நடைபாதை பாலமும் அமைக்கப்படுகிறது......

பொது அறிவு பொதிந்து கிடைக்கின்றது—ஆற்றல் அடங்கியிருக்கிறது என்பதைத்தானே. இவைகளை எல்லாம் வெளிக்குக் கொண்டுவந்து—அவர்களுக்கு வாய்ப்பும், வசதியும் கொடுத்தால் நிச்சயமாக பஞ்சாயத்து ராஜ்யம் நல்ல முறையில் அமையும். இன்றிருக்கும் மக்களை நம்பித்தானே மகத்தான காரியங்களை அரசாங்கம் செய்கிறது. அகில உலகமே ஆச்சரியப்படும்படி மகத்தான தேர்தலை நம் மக்கள் நல்ல முறையில் நடத்திக் காட்டவில்லையா ? எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் குறைந்திருந்தும், உள்ள உறுதியோடு நமது அரசாங்கம் ஜனநாயகத்தின் அடிப்படையில்தான் அரசு என்று கூறி, போற்றக் கூடிய முறையில் நிர்வாகம் நடத்தவில்லையா ? உலகமே கண்டு வியக்கும்படி முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றியுடன் முடிக்கவில்லையா ?—செய்தோமே: புகழேணியின் உச்சியில் இன்று நிற்கிறோமே. இவைகளிலிருந்து நாம் பெறும் பாடம், நமது மக்களிடத்திலே திறமையும், தகுதியும் அதிகமுண்டு படிக்காவிட்டாலுங்கூட என்பதுதான். திறமைக்கும் தகுதிக்கும் ஒரு உதாரணம்—நாகரிகத்தின் சாயலேபடாத ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி தண்ணீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று வாங்கி தன் கிணற்றில் வைத்தாரென்று வைத்துக்கொள்வோம். வாங்கும்போது அந்த இயந்திரத்தைப் பற்றிய நுணுக்கங்கள் ஒன்றுமே தெரியாது. ஆனால் ஒரு மூன்று மாத காலத்திற்குள் அவர் அந்த இயந்திரத்தின் பழுது பார்த்தலையும், என்ன செய்யவேண்டும்—எதனால் பழுதேற்பட்டது என்பதையெல்லாம் நன்கு அறிந்து இயந்திர நிபுணரைவிட மிஞ்சி விடுகிறாரே—இது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

சில யோசனைகள்

கிராமங்களிலே தகுதியும், திறமையுங்கொண்ட ஜனநாயகத் தலைவர்கள் அதிகம் உண்டு. ஆனால் மறைந்திருக்கின்றார்கள். அவர்களைக் கண்டுபிடித்து—கண்டுபிடிக்க முடியும்—பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தால், நிச்சயமாக கிராம சுயஆட்சி நல்ல முறையில் நடக்கும். கிராமங்களில் பஞ்சாயத்து ராஜ்யம் செம்மையுடன், சிறந்த முறையில் பணியாற்ற வேண்டுமானால், கீழ்க்கண்டவைகளை கவனத்தில் கொண்டு பஞ்சாயத்துகளை நிறுவினால் உண்மையிலேயே நல்ல முறையில் நிர்வாகம் நடைபெறும் :—

1. பஞ்சாயத்து தலைவர் தேர்தல் இரகசிய முறையில் நடைபெறவேண்டும்,
2. பயப்படாமல் போதுமான அதிகாரம் தலைவருக்கும், அங்கத்தினர்களுக்கும் கொடுக்கவேண்டும்.
3. கிராமத்தின் நிதி வசூலில் 50 பங்காவது கிராமத்திற்குக் கொடுக்கவேண்டும்.
4. தலைவருக்கும், அங்கத்தினர்களுக்குமுள்ள வேலைகளை நிர்ணயம் செய்தல் வேண்டும்.
5. தலைவருக்கும், அங்கத்தினர்களுக்கும் நிர்வாகத்தைப்பற்றியும்—பொதுப்பணி பற்றியும்—கூட்டு முயற்சி பற்றியும் நல்லதொரு பயிற்சி கொஞ்ச காலத்திற்கு அளிக்கவேண்டும்.
6. நூல் நிலையங்கள் ஏற்படுத்தி, நிர்வாகத்தைப் பற்றிய—பொது நலப்பணி பற்றிய புத்தகங்கள் கொடுக்கப்படவேண்டும். அதாவது சமுதாயக் கல்வி பரவ வழி செய்யவேண்டும்.
7. பல கிராமங்களுக்குச் சென்று நிர்வாக நடைமுறை பற்றித் தெரிந்துகொள்ள வசதி செய்ய வேண்டும்.
8. கிராம சேவகர்கள் அதிகாரப் பற்றற்ற முறையில் பஞ்சாயத்து நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வேண்டும்.
9. சிவப்பு நாடாவின் சிங்காரவேலை குறையவேண்டும்.

தலைவருக்கும், அங்கத்தினர்களுக்குமுள்ள வேலைகளை நிர்ணயம் செய்ய வேண்டுமென்பதை ஒரு சிறிது விளக்குவது அவசியம். ஐந்து அங்கத்தினர்களும், தலைவரும் கொண்ட பஞ்சாயத்து என்று வைத்துக்கொள்வோம். அந்த பஞ்சாயத்தில் தலைவர் முழு நிர்வாகத்தை கவனிப்பவர்—நிதிப் பொறுப்பும் அவரிடம் இருக்கவேண்டும். ஒரு அங்கத்தினர் விவசாயத் துறையைக் கவனிக்கவும், அடுத்தவர் கால்நடைத் துறையைக் கவனிக்கவும், மற்றுமொருவர் சமுதாயக் கல்வித் துறையைக் கவனிக்கவும், இன்னுமொருவர் கூட்டுறவுத் துறையைக் கவனிக்கவும், ஐந்தாமவர் தொழில் துறையைக் கவனிக்கவும் முழு அதிகாரமும் கொடுக்கவேண்டும்.

அக்கிராமத்திற்கு சமுதாயக் கல்வி அமைப்பாளர் போகிறாரென்றால், இத்துறையைக் கவனிக்கும் அங்கத்தினரைக் கண்டு பேசி, செய்யவேண்டிய பணிகளை அவரிடம் கலந்து தலைவருக்கும் தெரியப்படுத்தி அத்துறையிலே அக்கிராமத்திற்கு என்னசெய்யவேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டும். இதுபோலவே மற்ற அதிகாரிகளும் குறிப்பிட்ட அங்கத்தினர்களைக் கண்டு பேசி, பணியாற்றவேண்டும். தலைவரையும், மற்ற எல்லா அங்கத்தினர்களையும் கூட்டிச் செய்யவேண்டிய காரியமாக இருந்தால் செய்தல்வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து மந்திரி சபைபோல கிராம நிர்வாகம் நடைபெறவேண்டும்.

அரசியல் சட்டத்தில் கூறியபடி பஞ்சாயத்து

இம்முறையில் அதிகாரத்தை ஒரு பக்கமாகக் குவிக்காமல் நிர்வாகத்துறையில் பரவல் கொள்கையைக் கடைப்பிடித்து கிராமத்தில் சுய ஆட்சி ஏற்படுத்தினால் நிச்சயம் வெற்றியுறும். அண்ணல் காந்திஜி கண்ட நலமிகு நாடுதான் நமது லட்சியம் என்று அகில உலகிற்கும் அறிவித்தாகிவிட்டது. நமது அரசியல் சட்டத்தின் 40-வது பிரிவுப்படி, கிராமப் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தி சுய நிர்வாகம்

நடத்தத் தீர்மானமாகி யுள்ளது. அதற்கொப்ப கிராமப் பஞ்சாயத்துக்களை, நிறுவி, செயல்படவைப்பது நமது தலையாய கடமை.

பண்ருட்டி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956, மே மாதத்தில், 59 கம்போஸ்ட் உரக் குழிகள் தோண்டப்பட்டன. 104-6 மணங்கு உரமும் 31-1 மணங்கு விதைகளும் விநியோகிக்கப்பட்டன. காய்கறித் தோட்ட சாகுபடி, மேலும் ஒரு ஏக்கர் நிலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சீர்திருந்திய நெல் சாகுபடி முறை எட்டு ஏக்கர் நிலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. கிணறு ஒன்று தோண்டப்பட்டதுடன், மக்கள் மன மகிழ் மன்றம் ஒன்றும் கட்டப்பட்டது. மக்கள் உழைப்பு மூலம் அளித்தது ரூ. 922. ரூ. 379-14-0 பெறுமான கதர் விற்கப்பட்டது.



....திருமங்கலத்தில் முதலமைச்சர் ஸ்ரீ கே. காமராஜ் அம்பர் சர்க்காவைப் பார்வையிடுகிறார்......

அறிவிப்பு

"கிராம நலம்" பத்திரிகையின் விளம்பர விகிதம்

வெளி அட்டைப் பக்கம் ..	ரூ.	150- 0- 0
உள் அட்டைப் பக்கம் ..	ரூ.	125- 0- 0
இதர பக்கங்களில் :		
பக்கம் ஒன்றுக்கு	ரூ.	100- 0- 0
அரைப் பக்கம்	ரூ.	60- 0- 0

சந்தா விவரம்

வருட சந்தா	ரூ.	1- 8- 0
ஆறு மாத சந்தா	ரூ.	0-12- 0

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பலாம்.

தனிப் பிரதி—இரண்டு அணு

தனிப் பிரதிகளை அனுப்ப, தபால் பில்லைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மற்ற விவரங்களுக்கு, பின்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள் :

பொதுஜனத் தொடர்பு அதிகாரி,
(சமுதாய அபிவிருத்தி),
செக்ரடேரியட்,
சென்னை-9.

Public Relations Officer,
(Community Development),
Public (R.D.P.) Dept.,
Secretariat,
Madras-9.

இப் பத்திரிகை, சென்னை அரசாங்க, சமுதாய அபிவிருத்தி இலாகாவால் நடத்தப்படுகிறது. ஆயினும், இதில் வெளியிடப்படும் அபிப்பிராயங்களும், காணப்படும் கருத்துக்களும், சென்னை அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான அபிப்பிராயங்களை வெளியிடுகின்றன என்பதில்லை.

இப் பத்திரிகையில் வெளியிடும் பாட்டு, கதை, நாடகம் முதலியவற்றில் வரும் பெயர்கள் யாவையும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல.

செய்தித் திரட்டு

திருநெல்வேலி நகராட்சிப் பொருட்காட்சியில் ஐந்தாண்டுத் திட்ட கண்காட்சி

1956-ம் ஆண்டு ஜூன் மீ 9உ முதல் ஜூலை மீ 1உ வரை திருநெல்வேலி நகரசபையினரால் ஒரு பொருட்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் சேரன்மகாதேவி, சங்கரன்கோவில், குருவிகுளம் சமுதாய நலத் திட்ட பகுதிகளும், வள்ளியூர், கோவில்பட்டி தேசிய வளர்ச்சி வட்டாரங்களும் பங்கெடுத்துக்கொண்டன. விவசாயப்பகுதியில் ஜப்பானிய முறைப்படி நெல் சாகுபடி செய்யும்முறை காட்டப்பட்டிருந்தது. பயிர்களுக்கு பூச்சி மருந்தடிக்கும் கருவிகளும் சிறந்த காய்கறிகளும் சிறந்த வித்துக்களும் விவசாய சம்பந்தமான படங்களும் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. கால்நடைப் பகுதியில் பசுக்களுக்குச் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் கருவிகள் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. கைத்தொழில் சம்பந்தமாகக் காருகுறிச்சி மண்பாண்டங்கள், சிமிண்டால் செய்யப்பட்ட புகையில்லாத அடுப்பு, பெஞ்சுகள், மீன் வளர்ப்புத் தொட்டிகள், தேன் எடுக்கும் கருவிகள், தீப்பெட்டிகள் செய்யும் முறைகள், கிராம மக்களால் செய்யப்பட்ட பொம்மைகள், கத்திகள், கத்தரிக்கோல்கள், காந்த விளக்குகள், பனையோலை விசிறிகள், பத்தமடைப் பாய்கள், பைகள், மாதர் சங்கங்களில் துணியினால் செய்யப்பட்ட பொம்மைகள், பைகள், பூ வேலைகள் முதலியன வைக்கப்பட்டிருந்தன. விசேஷமாக அம்பர் சர்க்காவும், அதற்குப் பட்டைபோடும் கருவியும் வைக்கப்பட்டிருந்தன. பலவகை மீன்வகைகள், கோழிமுட்டையின் வளர்ச்சியைக் காட்டும் பாபங்கள், கோழிவளர்ப்பு சம்மந்தப்பட்ட கருவிகள், படங்கள் முதலியன ஏராளமாக வைக்கப்பட்டிருந்தன. மற்றும் ஐந்தாண்டுத் திட்ட சம்பந்தமான படங்கள் அழகாக அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. தினசரி ஏராளமான மக்கள் இந்த கண்காட்சிகளைக் கண்டு களித்தனர். வெளி அரங்கிலே ஐந்தாண்டுத் திட்ட காட்சிகள் மக்களின் மனதைப் பெரிதும் கவர்ந்தது. தினசரி இரவு 9 மணிக்கு சேரன் மகாதேவி சமுதாய நலத் திட்ட சமூகக் கல்வி அமைப்பாளரால் ஐந்தாண்டுத் திட்ட சினிமாக் காட்சியும் காட்டப்பட்டது.

உசிலம்பட்டி வட்டாரத்தில்

உசிலம்பட்டி சமுதாய நலத் திட்ட வட்டாரத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட விளம்பர விழா 1956-ம் ஆண்டு ஜூலை மீ 12உ முதல் 15உ முடிய உசிலம்பட்டி, வாலாந்தூர், விக்ரமங்கலம், பாப்பாபட்டி ஆகிய கிராமங்களில் ஸ்ரீ முத்து, எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினரால் அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

1956-ம் ஆண்டு ஜூலை மீ 12உ காலை பள்ளி மாணவ மாணவிகளுடன் மா பெரும் ஊர்வலம், சமுதாய நலத் திட்ட அலுவலகத்திலிருந்து புறப்பட்டு போர்டு உயர்நிலைப் பள்ளியில் முடிவடைந்தது. உசிலம்பட்டி டிப்டி கலெக்டர் ஸ்ரீ S. கிருஷ்ணராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற குழந்தைகள் கண்காட்சியில் தேகாரோக்கியமுள்ள நல்ல குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இனிப்புப் பண்டங்களும் விநியோகம் செய்யப்பட்டன.

அன்று மாலை மல்யுத்தம், சைக்கிள் ரேஸ், மாணவ மாணவிகளுக்குரிய ஸ்போர்ட்ஸ், பெண்களுக்கு நூற்பு போட்டி போன்ற பல விளையாட்டுப் போட்டிகளுக்குப் பின்னர் ஜில்லா போர்டு உபதலைவர் ஸ்ரீ S. அருணாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஸ்ரீ தினகரசாமி தேவர், எம்.எல்.ஏ., ஸ்ரீ முத்து, எம்.எல்.ஏ., வட்டார அபிவிருத்தி அதிகாரி ஸ்ரீ வெல்லிங்டன், சிறு சேமிப்புத் திட்ட அதிகாரி ஆகியோர்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகளும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமும், மக்களின் கடமையும் என்பதைப்பற்றி பேசினார்கள். நூற்பு, பேச்சு, கட்டுரை போன்ற பலவிதப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஸ்ரீமதி வெல்லிங்டன், B. A., அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.

இரவு 9 மணிக்கு சமுதாய நலத் திட்ட பாடகர் குண்டத்தூர் சீனிவாசன் அவர்களால் எழுதப்பட்ட "லட்சிய கிராமம்" என்ற நாடகம் ஷை அலுவலகத்தினரால் நடத்தப்பட்டது.

இராமநாதபுரம் ஜில்லாவில்

இந்த ஜில்லாவிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி வட்டாரங்களில், 1956-ஆண்டு மே மாதத்தில் 6,773 சிட்டம் கதர் நூல் உற்பத்தி செய்யப்பட்டது. தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 8,800 ரூபாயும், புயல் நிவாரண திட்டத்தின் கீழ் 8,200 ரூபாயும் மக்களுக்குக் கடனாக வழங்கப்பட்டது. சிங்கம்புணரி வட்டாரத்தில். 9,000 மீன் குஞ்சுகள், மீன் வளத்தைப் பெருக்குவதற்காக, விநியோகிக்கப்பட்டன. ராஜபாளையம், சிங்கம்புணரி வட்டாரங்களில் 381 கால்நடைப் பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. மொத்தம் ஆறு நடைபாதை பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

உதகை வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு ஜூலை மாதத்தில், வன மஹோத்சவ விழாவும், ஐந்தாண்டுத்திட்ட பிரசார விழாவும் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டன. கனி தரும் மரக்கன்றுகள் 3,285-ம், இதர மரக்கன்றுகள் 138,600-ம், நடப்பட்டன. 237 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. இலாகா மூலம் 1,708 பவுண்டு உரமும், இதர ஆதாரங்கள் மூலம் 4,276 மணங்கு உரமும் விநியோகிக்கப்பட்டன. புதிய கூட்டுறவு சங்கங்கள் 6-ம், முதியோர் கல்வி நிலையம் 1-ம், சேவா சமாஜங்கள் 4-ம் இவ் வட்டாரத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

காவேரிப்பட்டினம் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு ஜூன் மாதத்தில், 28 பவுண்டு கம்பு விதைகள், 890 பவுண்டு நெல் விதைகள், 80 பவுண்டு டி. எம். வி-2 வேர்க்கடலை வித்துக்கள், 3 மூட்டை (240 பவுண்டு கொண்ட மூட்டை) டி. எம். வி-3 வேர்க்கடலை வித்துகள், முதலியவை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. சொக்கம்பட்டி, சென்னம்பட்டி, நாகரசம்பட்டி, அரசம்பட்டி, அகரம் முதலிய ஊர்களில் மேச்சேறி ஆடுகள் பத்து விநியோகிக்கப்பட்டன. பேயூரில் இளைஞர் சங்கம் ஒன்றும், பனந்தூரில் மாதர் சங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டன. சுமார் 179 ரூபாய் பெறுமான கதர் துணி விற்கப்பட்டது. புதிய வார்தா செக்கு ஒன்று காவேரிப்பட்டினத்திலுள்ள வார்தா செக்கு நிலையத்தில் தயாரிக்கப்பட்டது.

கிராம சேவகர்களுக்கு வரவேற்பு

கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள பவானி சாகரில், தேசிய வளர்ச்சித்திட்ட அலுவல்களில் பயிற்சிபெற்று சென்னைக்கு, சென்ற ஜூலை மாதத்தில் வந்து சேர்ந்த பத்து கிராம சேவகர்களுக்கு, சென்னை, சமூகநல செய்தி ஸ்தாபனத்தாரால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த ஸ்தாபனத்தின் பொது காரியதரிசி ஸ்ரீ சி. சுந்தர வதனம், அவர்களை வரவேற்று பேசுகையில், தேசிய வளர்ச்சிக்கு கிராம நலம் எவ்வளவு முக்கியமாக விளங்குகிறது என்பதைப்பற்றியும், உழவர்களிடையே தேசிய வளர்ச்சித் திட்டத்தை கிராம சேவகர்கள் எவ்வாறு பரப்புகிறார்கள் என்பதைப்பற்றியும் விளக்கினார். சமூகநல செய்தி ஸ்தாபன உப-தலைவர்களுள் ஒருவரான ஸ்ரீ டி. பாலசுந்தரம், சென்னை கார்ப்பரேஷன் மேயராக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி, அவருக்கு வாழ்த்துக்கூறி, ஒரு தீர்மானம், அக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கீ. வை. குப்பம் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு ஜூலை மாதத்தில், லாட்டேரியில் ஒரு மாதர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 300 கால் நடைப் பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. வேங்கடபுரத்தில் விவசாய இளைஞர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. செஞ்சி, லாட்டேரி, அமணன்குப்பம் முதலிய இடங்களில் கிராமத் தொழில்கள்பற்றி பூர்வாங்க புள்ளிவிவர சேகரிப்பு வேலை நடைபெற்றது. ஜூலை முதல் வாரத்தில் முதலமைச்சர் இவ் வட்டாரத்திலுள்ள 19 கிராமங்களுக்கு விஜயம் செய்தார். அவர், தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஒரு விவசாய டிப்போவையும் திறந்து வைத்தார். ஐந்தாண்டுத் திட்ட பிரசார வார விழாவையொட்டி, கண்காட்சி நடத்தப்பட்டது.

செங்கல்பட்டு ஜில்லாவில்

இந்த ஜில்லாவிலே, 1956-ம் ஆண்டு பிப்ரவரியில், 161·91 ஏக்கர் பரப்பில் ஜப்பானிய நெல் சாகுபடி முறை ஆரம்பிக்கப்பட்டது. 238·83 ஏக்கர் பரப்பில் பசுந்தாளுரச் செடிகள் பயிரிடப்பட்டன. விதைகளையும், உரத்தையும் வாங்குவதற்காக விவசாயிகளுக்கு 19,852 ரூபாய் வழங்கப்பட்டது. கிணறுகள் தோண்ட 5,400 ரூபாயும், காளைகள் வாங்க

திருநெல்வேலி நகராட்சிப் பொருட்காட்சியில் பங்கெடுத்துக்கொண்ட சேரன் மகா தேவி சமுதாய நலத்திட்ட அதிகாரியும், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சமூக கல்வி அமைப்பாளர்களும்.

10,050 ரூபாயும் வழங்கப்பட்டது. 1,134 நோயுள்ள கால் நடைபிராணிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. 4,707 பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டன. நான்கு புதிய கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கெட்டித்த ரஸ்தாக்கள் மொத்தம் 3 2 மைல் நீளத்துக்கும் சாதாரண ரஸ்தாக்கள் 1·2 மைல் நீளத்துக்கும் அமைக்கப் பட்டன. பதினான்கு கிணறுகள் தோண்டப்பட்டு புதுப்பிக்கப் பட்டன. எட்டு முதியோர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆறு மக்கள் மனமகிழ் மன்றங்களும் ஆரம்பிக்கப்பட்டன. ஏழு சர்க்காக்கள் விநியோகிக்கப்பட்டன. சுமார் 626 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டது.

மண்டகொளத்தூர் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜூலை மாத முதல் வாரத்தில், போளூரிலே ஐந்தாண்டுத் திட்ட பிரசார விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மண்டகொளத்தூர் விவசாயிகள் 20 பேர்களடங்கிய கோஷ்டி ஒன்று பல விஷயங்களைப் பற்றி விவரமாக அறிந்துகொள்ள சுற்றுப் பிரயாணம் செய்தது. இப்பிரயாணத்துக்கான செலவுக்காக, கோஷ்டியினர், நபருக்கு 25 ரூபாய் வீதம் தங்கள் பங்கை அளித்தனர். இச் செலவுக்காக, அரசினர் அளித்தது 500 ரூபாயாகும். பொத்தரை கிராம சேவக் தலைமையில் சுமார் 100 தொண்டர்களால், சுமார் 25 வண்டி மண் கொட்டப்பட்டு, சுமார் 2 பர்லாங்கு நீளத்துக்கு, குண்ணத் தூர் கிராமத்தில், பாதை அமைக்கப்பட்டது.

திருவண்ணாமலை வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜூலை மாதத்தில், இரு கிணறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன கல்பூண்டி கிராமத் தில் 500 கெஜ நீளத்துக்கு வடி சாக்கடைக்கால் அமைக் கப்பட்டது. பாதை அமைப்பு வேலைகள் நான்கு பூர்த்தி செய்யப்பட்டதுடன், விவசாய கண்காட்சி ஒன்றும், 1956, ஜூலை மாதத்தில் நடத்தப்பட்டது. ஐந்தாண்டுத் திட்ட பிரசார விழாவும், வன மகோத்சவமும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. ஒரு வாசக சாலை ஆரம்பிக்கப் பட்டது. 90 மணங்கு உரமும், 20 இனத்தரமிகுந்த சேவல் களும் விநியோகிக்கப்பட்டன.

காங்கேய வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜூலை மாதத்தில், 41 ஏக்கர் நிலம் சாகுபடிக்குகந்தவகையில் பண் படுத்தப்பட்டது. மேலும் சுமார் 10 ஏக்கர் நிலத்துக்கு பாசன வசதி அளிக் கப்பட்டது. 333 கால்நடைப் பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. 300 கெஜ நீளத்துக்கு வடிசாக் கடைக்கால் அமைக்கப்பட்டது. சுமார் 224 மணங்கு உரமும், சுமார் 2 மணங்கு பொறுக்கு விதைகளும் விநியோகிக்கப் பட்டன. சுமார் 15 ஏக்கர் நிலத்தில் காய்கறித் தோட்ட சாகுபடி ஆரம்பிக்கப்பட்டது. 155 வீடுகள் கட்டப்பட்டன. 200 வீடுகள் செப்பனிடப்பட்டன. இம்மாதத்தில், மக்கள், அபிவிருத்தி வேலைகளுக்காக, உழைப்பு மூலம் அளித்த பங்கு 7,376 ரூபாயாகும்.

ஆலங்குடி வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜூலை மாதத்தில், 4 பர்லாங்கு நீளத்துக்குப் புதிய பாதை ஒன்று அமைக்கப்பட்டது. ஆலங் குடியில் பிரசவ விடுதி கட்டி முடிக்கப்பட்டது. 120 கால் நடைப் பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப் பட்டது. 5 பஞ்சாயத்துகள் அமைக்கப்பட்டன. 5 சிறுவர் பூங்காக்களும் அமைக்கப்பட்டன. குறுகிய காலக் கடனாக 7,200 ரூபாயும், சிறு நீர்ப்பாசனத்திட்டங்களின் கீழ் கடனாக 2,600 ரூபாயும், விவசாயிகளுக்குக் கடனாக வழங்கப் பட்டது.

திருமங்கலம் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜூலை மாதத்தில், வனமகோத் சவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. வேம்பு, அசோக் கன்றுகள் 50 நடப்பட்டன. 500 தழையுரச் செடி களும் நடப்பட்டன. பள்ளமுத்தூரில் ஆடு வளர்ப்போர் சங்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆலம்பட்டி, புதுப்பட்டி, கரிசல்பட்டி, கீளவனேரி, மைக்குடி, கீழக்கோட்டை, மேலக் கோட்டை, செவரக்கோட்டை, பொட்டல்பட்டி முதலிய ஊர் களில் துப்புரவு இயக்கம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. மைட்டம்பட்டியில் புதிய கிணறு ஒன்று கட்டப்பட்டது. சின்னபொக்கம்பட்டியிலுள்ள கிணறு ஒன்று புதுப்பிக்கப் பட்டது. எம். புளியங்குளத்தில் சமூகக் கல்வி நிலையமும், பொட்டல்பட்டியில் மாதர் மன்றமும், மரவபட்டியிலும், கின்னிமங்கலத்திலும் மாலைப்பள்ளிகளும் அமைக்கப் பட்டன.

மகா கவி பாரதியார்

(ஸ்ரீமதி J. பாலாம்பாள், தேவகோட்டை.)

ராகம்—வஸந்தா.] [தாளம்—ஆதி.

பல்லவி.

கவியின் பெருமை என்ன சொல்வேன்
கண்ணிய பாரதியே புண்ணியனே உந்தன்
(கவியின்)

அனுபல்லவி.

புவியில் மாந்தர்க்கு புத்துயிர் அளித்ததுபோல்
பெருமையுறும் பேரின்பக் கருத்தே நிறைந்த உன்
(கவியின்)

சரணம்.

பாரத தேசம் செய்த தவப்பயனாய் உதித்த
பார் புகழவே நீர் பாடிய காவியம்
சீரும் சிறப்பு மிக்க செல்வம் நிறைந்த நாட்டில்
பேரிகை கொட்டும் உந்தன் வீரம் நிறைந்த தமிழ்
(கவியின்)

பெரம்பலூர் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜூலை மாதத்தில், 89 இராட்டைகள் விநியோகிக்கப்பட்டன. பயிர் பாதுகாப்புக்காக 100 பவுண்டு பூச்சிகொல்லி மருந்து விநியோகிக்கப்பட்டது. 60 ஏக்கர் நிலம் இயந்திரக் கலப்பைகொண்டு உழப்பட்டது. 5 ஏக்கர் நிலத்தில் மண்வள பாதுகாப்பு முறைகள் பின்பற்றப்பட்டன. வனமகோத்சவம், ஐந்தாண்டுத் திட்ட பிரசார வாரம், உலக சுகாதார தினம், ஹரிஜன தினம் முதலியவைகளை யொட்டிய விழாக்கள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. சமூகக் கல்வி நிலையமொன்றும், மலையாளபட்டி பலநோக்குக் கூட்டுறவு சங்கமும் ஆரம்பிக்கப்பட்டன.

முசிரி வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜூலை மாதத்தில், 10,524 மரக் கன்றுகள் நடப்பட்டன. 215 கம்போஸ்ட் உரக் குழிகள் தோண்டப்பட்டன. 280 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. முசிரியில், 20-7-56-ல், விவசாய பொருட்காட்சி நடத்தப்பட்டது. தும்பலம் கிராமத்திலிருக்கும் தோல் பதனிடும் தொழிற்சாலையில், 15 பேர்களுக்கு தோல் பதனிடும் தொழிலில் பயிற்சி அளிக்கப்பட்டது. புலிவலம் கிராமத்திலிருக்கும் விளையாட்டுச் சாமான் தயாரிப்புத் தொழிற்சாலையில், 82 விளையாட்டுச் சாமான்கள் தயாரிக்கப்பட்டன. இரு பள்ளிக் கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. சமுதாய மன்றம் ஒன்று எவூரில் கட்டி முடிக்கப்பட்டது. வெள்ளாளபட்டியில் இளைஞர் மன்றம் அமைக்கப்பட்டது. சுமார் 44 ரூபாய் பெறுமான இராட்டைகள் விற்கப்பட்டன.

வெள்ளியணை வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜூலை மாதத்தில், 72½ பவுண்டு உரமும், 44½ பவுண்டு பொறுக்கு விதைகளும் விநியோகிக்கப்பட்டன. ஆண்டிபட்டியில் கால்நடை கண்காட்சி நடைபெற்றது. நோயுற்ற பிராணிகள் 113-க்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. நடுப்பாளையத்தில் ஹரிஜனங்களின் உபயோகத்துக்காக கிணறு ஒன்று கட்டிமுடிக்கப்பட்டது. தனியபட்டியில் பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, திருச்சிராப்பள்ளி கலெக்டர் அவர்களால் 28-7-56-ல் திறக்கப்பட்டது. சுமார் 223 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டது. ஐந்தாண்டுத் திட்ட பிரசார வார விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

வேதாரணியம் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956, ஜூலை மாதத்தில் 12,176 மணங்கு கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. நடை பாதை பாலம் அமைக்கும் வேலை ஒன்று பூர்த்தி செய்யப்பட்டது. ஐந்து கிணறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. கோடியக்கரை கிராம மருந்தகக் கட்டிட வேலையும் பூர்த்தி செய்யப்பட்டது. 149 நோயுற்ற கால்நடைப் பிராணிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. 20 கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டன. புஷ்பவனத்தில் ஆடுகள் கண்காட்சி நடத்தப்பட்டு, சிறந்த ஆடுகளுக்காகப் பரிசுகள் வழங்கப்பட்டன. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று செட்டியாருதப்பை குக்கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இரு மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

அன்பொளிச் சுவட்டிலே

வாரீர் ! வாரீர் ! வையகம் தழைக்கவே !

(கொடுமுடி ராஜகோபாலன்)

அகவல்

கண்ணுக்கினிய காலைக் காட்சியின்
எண்ணரும் எழில்களை யேட்டில் அமைப்போம்.
மண்ணும் விண்ணும் மகிழ்ச்சியுறவே
மாலை மதியமும் விசும்பின் மீனும்,
கடலும் வரையும் கணக்கில் நதியும்,
வண்டினம் முரலும் வனப்பமர் பொழிலும்,
தூய கற்பனைக் கிழியில் தோன்றவே,
பற்பல வர்ணங் குழைத்தே படைப்போம் ;
கவிதை புனைவோம் ; காப்பியம் சமைப்போம் ;
உளந்தொறும் ஒப்பிலா ஓவியம் தீட்டுவோம் ;
ஆனால்,
அன்பொளிச் சுவட்டிலே அமர்ந்தே செல்லும்
அடியார் தொண்டை ஒக்குமோ அறைவீர் !
மக்கட் சேவையே மாயோன் பூசையாம் ;
என்றே சாற்றுவீர் எட்டு திக்கிலும்,
வாரீர் ! வாரீர் ! வையகம் தழைக்கவே !

குறிப்பு:

அன்பொளிச் சுவட்டிலே மக்களுக்குச் சேவை செய்யும் அரிய வாய்ப்பை சமுதாய நலத் திட்டம் அளிக்கிறது. இத்துறையில் பணியாற்றுவது, கவிதை, காவியம் உருவாக்குவதைவிடச் சிறந்த சேவை என்பது கருத்து.

...சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில் வாழும் கிராமமக்கள் கொண்டாடும்
சுதந்திரத் திருவிழா



1. துணிப்பற்றுக் குறைப் பிடியிலிருந்து விடுதலை பெற, நூல் நூற்கிறார்கள்.
2. வேலையில்லாத் திண்டாட்டத்தினின்று விடுதலை பெற, பல கிராமத் தொழில்களில் ஈடுபடுகிறார்கள்.
3: உணவுப் பற்றுக்குறைப் பிடியிலிருந்து விடுதலை பெற, சீர் திருந்திய விவசாய முறைகளைப் பின்பற்றி விளைச்சலைப் பெருக்குகிறார்கள்.
4. அறியாமை என்ற இருட்டறையிலிருந்து விடுதலை பெற, கல்வி ஞானம் பெறுகிறார்கள்,
5. ஓலைக் குடிசைகளில் அவதியுறுவதினின்று விடுதலை பெற, வீடுகள் கட்டிக் கொள்கிறார்கள்.
6. நோய் நொடியிலிருந்து விடுதலை பெற, கிராம மருந்தகம் கட்டியிருக்கிறார்கள்,

(ஆகஸ்ட் மாதத் தொடர்ச்சி)

காட்சி 21.

இடம் : காட்டுப்பட்டியில் மோகனின் வீடு.

காலம் : காலை நேரம்.

நடிகர்கள் : மோகன், ஹேமா, ராமு, கந்தன்.

மோகன் அசைவற்றுப் படுக்கையில் படுத்துக் கிடக்கிறார். தலை, கால், கை முதலிய இடங்களில் கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. பக்கத்தில் ராமு கவலை தோய்ந்த முகத்தோடு நின்றுகொண்டிருக்கிறான். ஹேமா மோகனுடைய கையைப் பிடித்துப் பார்க்கிறாள்.

ராமு.—மணி 8 ஆகிறதே ! இன்னும் மோகன் விழிக்க வில்லையே.

ஹேமா.—இன்னும் 5 நிமிஷத்தில் மோகன் கண்ணைத் திறந்துவிடுவார். நல்ல நினைவு வந்துவிடும்.

ராமு.—நினைவுவர இவ்வளவு நாழி ஆகுமா ?

ஹேமா.—8 மணி நேரம் ஒரு பெரிசா என்ன ? சில சமயங்களில் ரெண்டு நாள், மூன்று நாள்கூட சிலருக்கு நினைவு தப்பியிருந்து பிறகு வந்திருக்குதே !

ராமு.—ஊகும்—அப்படியா ?

ஹேமா மெதுவாக உலாத்திக்கொண்டிருக்கிறாள். மோகன் அப்படியும் இப்படியுமாக தலையை அசைத்துவிட்டு மெள்ள கண்களை மூடிக்கொள்கிறார். ஹேமா அருகில் வந்து உற்றுப்பார்க்கிறாள். சிறிது நேரங் கழித்து மீண்டும் கண்களைத் திறக்கிறார் மோகன். கண்களை அகல விரித்து அருகில் இருப்பவர்கள் ஒவ்வொருவரையும் உற்றுப்பார்க்கிறார். பிறகு ஹேமாவைப் பார்த்துவிட்டு கேட்கிறார்.

மோகன்.—யாரு....ஹேமாவா ! நான் எங்கே இருக்கிறேன் ?

ஹேமா.—காட்டுப்பட்டியில் உங்கள் வீட்டில்தான் இருக்கிறீர்கள். ஏன் ? என்ன வேண்டும் ?

(தலையிலும் கையிலும் உள்ள கட்டுகளைத் தொட்டுப் பார்க்கிறார் மோகன்.)

மோகன்.—பள்ளத்தூர் Bridge work ஆற்றில் தண்ணி வந்துவிடும்—வேலையை முடிக்கமுடியாது Promotion—ஜனங்கள் கஷ்டப்படுறாங்க வேலமுத்து ½'' Rod வந்திடுங்க Maintenance work.

ராமு.—இஞ்ஜினியர் சம்பந்தா சம்பந்தமில்லாமலே பேசுறாரே என்ன டாக்டர் இது ?

ஹேமா.—ராமு ! அவர் பேசுவதை எல்லாம் கவனித்தாயா ? எல்லாம் அவருடைய ஆபீஸ் வேலைகள்.

ராமு.—டாக்டர் உண்மைதான்.

ஹேமா.—அவர் உள்ளத்தில் ஆபீஸ் வேலைகளுக்கன்றி வேறெதற்குமே இடமில்லை. ஆகையால்தான் இப்படி. (கந்தன் பரபரப்போடு ஓடிவருகிறான்.)

ஹேமா.—என்ன கந்தா இங்கே வந்து நிற்கிறாய் ? நல்லிடைக்குறிச்சிக்கல்லவா போகச்சொல்லி இருந்தேன் ?

கந்தன்.—அங்கிருந்துதான் வருகிறேன். அங்கே நம்ப வீட்டை கொள்ளை அடிக்க ஆள் கூட்டம் சேர்ந்துகிட்டு இருக்குது. இன்னேரம் காலாடித்தனத்தை ஆரம்பிச்சிருப்பானுங்க. உடனே கிளம்பு கொளந்தே.

ராமு.—யார் அந்த அயோக்கியர்கள் ?

கந்தன்.—எல்லாம் உன்னுடைய மோகனத்தூர் ஆட்கள் தான்.

ராமு.—என்ன ! மோகனத்தூர் ஆட்களா ? என்ன காரணம் ?

கந்தன்.—மோகன் பூட்டாருன்னு யாரோ டேப்பு கிளப்பிட்டானுங்க. அதை நம்பிக்கிட்டு நம்ப ஐயாத்தான் இதுகளுக்கெல்லாம் காரணம்னு நெனச்சிக்கிட்டு கலாட்டாப் பண்ண வாராங்க.

ஹேமா.—கந்தா ! நீ எப்படி இங்கு வந்து சேர்ந்தாய் ?

கந்தன்.—சம்பந்த முதலியார் வீட்டுக்கு யாரோ காரில் வந்தாங்க. அந்தக் காரிலே அவருதாங்க என்னை அனுப்புச்சாரு.

ராமு.—டாக்டர் ! இப்போ என்னசெய்வது ?

ஹேமா.—அதுதான் எனக்கும் புரியவில்லை. இஞ்சினியரை இந்த நிலையில் விட்டுவிட்டு செல்வது ஒரு டாக்டருக்கு அழகா ? அல்லது இஞ்சினியரை கவனிக்க இங்கேயே தங்கிவிட்டால் ஆபத்து சமயத்தில்கூட அப்பாவை பார்க்கவராத பாவி என்று உலகம் தூற்றுதா ?

ராமு.—இங்கு நடந்தவைகளை புரிந்துகொண்டீர்களா ?

மோகன்.—ஏன் ? புரிந்துகொள்ளாமல் என்ன.

ஹேமா.—நான் புறப்படுகிறேன். நீங்கள். . .?

மோகன்.—நானுந்தான் உடன் வரப்போகின்றேன்.

ஹேமா.—இந்த நிலையில் நீங்கள் நல்லிடைக் குறிச்சிக்கு வருவதா ? முடியவே முடியாது ! நேற்று இரவு அடிபட்டு நினைவு வந்த உங்களுக்கு இப்போதுதான் சுய உணர்வு மீண்டிருக்கிறது—இந்நிலையில் கார் பிரயாணம் ஆபத்து—உயிருக்கே உலை வைத்துவிடும்.

மோகன்.—டாக்டர் ! என்னை இந்தக் காட்டுப் பட்டியில் விட்டுவிட்டுச் சென்றுவிட்டால் இந்த உயிருக்கு ஆபத்து நேரிடாது என்று நீங்கள் நம்புகிறீர்களா ? அல்லது இந்த நோயாளி தனியாக வரமுடியாதென்று எண்ணுகிறீர்களா ? (எழுந்திருக்கிறர் முடியவில்லை. படுத்துக் கொள்ளுகிறர்.)

ஹேமா.—நான் மட்டும் போனுல்கூட போதும் எல்லாவற்றையும் சரிசெய்திட முடியும்.

மோகன்.—அதுதான் தவறு டாக்டர் ! ஏன் என்னை அழைத்துக்கொண்டு செல்ல மறுக்கின்றீர்கள்—இறந்துவிடுவேன் என்று அஞ்சித்தானே ?

(கஷ்டப்பட்டு எழுந்திருக்கிறர் மோகன். தாங்கிப் பிடிக்கிறர் ராமு.)

மோகன்.—ஹேமா ! இந்தியன் இறப்பைக் கண்டு என்றுவது அஞ்சி யிருக்கின்றனு ? அஞ்சியிருந்தால் தூக்குக் கயிற்றில் துணிவுடன் தொங்கியிருப்பானு ? துக்கமின்றி செக்கிழுத்திருப்பானு ? கஷ்டமின்றி கல்லுடைத்திருப்பானு ? கசையடியால் தசைகள் சிதறும்போதும் மாதாவின் மணி மந்திரத்தை மலர்ந்த முகத்தோடு உச்சரித்திருப்பானு ? பெருமைமிக்க இனமல்லவா இந்திய இனம் ? அதற்குச் சிறுமையைத் தேடித் தரலாமா நான் ? உடந்தையாக இருக்கலாமா நீங்கள் ?

ராமு.—உண்மைதான் டாக்டர் ! ஏழையாக இருப்பான் இந்தியன். ஆனுல் கோழையாக இருப்பதில்லை. வாழையடி வாழையாக வரும் இக் கொள்கைக்கு இஞ்சினியர் சாரின் இதயம் ஓர் எடுத்துக்காட்டு. வருவது வரட்டும்—இஞ்சினியரையும் அழைத்துக்கொண்டேசெல்வோம்.

திரை விழுகிறது. பூம் ! பூம் ! என்ற ஒலி கிளம்புகிறது.

காட்சி 22

இடம் : சச்சுதானந்தம் பிள்ளை வீடு.

காலம் : பகல் நேரம்.

நடிகர்கள் : சச்சுதானந்தம் பிள்ளை, டேவிட், பக்கிரி, கந்தன், ராமு, மோகன் மற்றும் பலர்.

(சச்சுதானந்தம் பிள்ளை நாற்காலியில் கட்டப்பட்டிருக்கிறர். சுற்றி பலர் நின்று கொண்டிருக்கிறர்கள்.)

பக்கிரி.—பிள்ளைவாள் ! எப்படியிருக்கிறது. இன்றைய நாள் உங்கள் வாழ்விலோர் திருநாளல்லவா ? மோகனை கொலை செய்ய எவ்வளவு பணம் கொடுத்தீர்கள்.

சச்சு.—என்ன புலம்புகிறீர்கள் ? மோகன் கொலை செய்யப் பட்டு விட்டானு ?

பக்கிரி.—ஏன் ? பணம் கொடுத்த உனக்குத் தெரியாதா ? படுகொலை புரிந்தவன் திரும்பி வந்து இன்னம் பதில் சொல்ல வில்லையா ?

சச்சு.—வீண் பழியை சுமத்தாதே! வேதனையடைய நேரிடும்.

பக்கிரி.—வேதனை அடைவது யார் என்பது இப்போது தெரிய வில்லை. . . . ம் . . சாவி . . பெட்டிச்சாவி . . . . ம் . . கொடு.

சச்சு.—தயங்குகிறர்.

பக்கிரி.—ஏன் தயக்கம் ? சாவியைக் கொடுக்கப்போகின்றுயா ? இல்லை இதை வாங்கிக்கொள்கின்றுயா ?

(பக்கிரி அடிக்க கையை ஓங்குகிறுன்)

" நிறுத்துங்கள் அடிக்காதீர்கள் " என்று கூறிக் கொண்டு ஹேமா பரபரப்போடு உள்ளே வருகிறுள். தொடர்ந்து கந்தனும் வருகிறுன்.

பக்கிரி.—அப்பாவுக்கு ஆபத்து என்றதும் பாகாக உருகி பறந்து வந்து விட்டார்கள் டாக்டர்.

ஹேமா.—ஏன் இந்தக் கலவரம் ? ஏன் இந்த அட்டகாசம் ? என் தந்தை உங்களுக்கு என்ன தீங்கு செய்தார் ? அல்லது நான்தான் கொடுமை விளைவித்தேனு ?

(கந்தன் சச்சுதானந்தம் பிள்ளையை அவிழ்த்து விடப் போகிறுன். கூட்டத்தில் ஒருவன் தடுக்கிறுன்.)

பக்கிரி.—நாட்டிற்குழைத்த நல்லானை ஏழைகளின் நண்பனை எங்கள் மோகனை கொலை செய்தது போதாதா ? எங்களுக்கு தீங்கு வேறு செய்ய வேண்டுமா ?

ஹேமா.—இல்லை ! மோகன் கொலை செய்யப்படவில்லை.

பக்கிரி.—அப்பாவைக் காப்பாற்ற வேண்டுமே என்று எங்களுக்கு ஆறுதல் மொழி கூறுகிறீயா ?

ஹேமா.—உண்மை தான். இறக்க வில்லை மோகன் உயிரோடு இருக்கின்றார் !

பக்கிரி.—பொய் ! பொய் ! முழுப்பொய்.

மோகன்.—"பொய்யல்ல உண்மையேதான். சந்தேகம் எதற்கு ? என்னையே பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூறிக்கொண்டே மோகன் மெதுவாக நடந்து வருகிறார். ராமு அனுசரணையாகப் பிடித்துக்கொண்டு வருகிறான். கூட்டத்தினர் மோகனைப் பார்க்கிறார்கள். ஆச்சரியப் படுகிறார்கள். மோகன் வாழ்க ! என்று கூக்குரலிடு கிறார்கள்.

மோகன்.—என் இந்த கலாட்டாக்கள் ? சச்சுதானந்தம் பிள்ளையை அவிழ்த்து விடுங்கள்.

(பக்கிரி சென்று கட்டை அவிழ்த்து விடுகிறான்.)

மோகன்.—ஒருவர் மீது அன்பிருக்காலம். அதற்காக மற்றொருவரை துன்பத்திற்குள்ளாக்குவது மனிதப் பண்பிற்கு உகந்ததா ? நேற்று நான் அடியுண்டேன். அறை பட்டேன். அப்போதுகூட நான் வேதனைப்படவில்லை. இன்று இந்த சச்சுதானந்தம் பிள்ளை இருக்கின்ற நிலையை பார்க்கின்ற போதுதான் வேதனை ஏற்படு கின்றது. வெந்து உருகுகின்றது. சாந்த மூர்த்திகள் வாழ்ந்த இந்திய மண்ணிலா இழிச் செயல்கள் ?

பக்கிரி.—ஆத்திர மிகுதியால் செய்துவிட்டோம். இனி இதைப்போல் எதையும் செய்யமாட்டோம். மன்னித்து விடுங்கள்.

மோகன்.—குற்றம் என்பதை உணர்ந்து கொண்டாலே போதும், இங்கிருந்து கொள்ளை யடிக்கப்பட்டிருக்கும் சாமான்கள் அத்தனையும் திருப்பிக் கொண்டுவர வேண்டும். இல்லையேல் மோகனின் இதயப்புண் ஆறாது.

பக்கிரி.—ஊசியா இருந்தாலும் தூசியா இருந்தாலும் கொண்டு வந்து திருப்பிக் கொடுத்துடறேனுங்க.

சச்சு.—மோகன் ! உங்களுடைய பெருமையை அறியாமல் இருந்துவிட்டேன். அன்று ஆணவமாகக்கூட பேசி விட்டேன். அவைகளை தயவுசெய்து மறந்து விடுங்கள். அன்பின் வலிமையை இன்றுதான் புரிந்துகொண்டேன். அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகளின் சக்தி எல்லாம் அன்பின் சக்திக்கு ஈடாகாது என்பதை இப்போது தான் புரிந்துகொண்டேன். என்னை மன்னித்து விடுங்கள்.

மோகன்.—என்ன ? உங்களை மன்னிப்பதா ? நானா ? நல்லா சொன்னீர்கள் !

சச்சு.—கந்தா ஒரு காகிதம் கொண்டு வா.

ஹேமா.—என் ? எதற்கு ?

சச்சு.—புதிய பாதைக்கு இனமாக நிலம் கொடுக்கப் போகிறேன். இன்றே என் சம்மதத்தை எழுத்து மூலம் மோகனிடம் கொடுத்துவிட வேண்டும். பொது மக்களுக்கு உபயோகப்படாத சொத்து பெட்டியில் இருந்து தான் என்ன பலன். (திரை விழுகிறது.)

காட்சி 23.

இடம் : செஷன்ஸ் கோர்ட்.

காலம் : பகற்பொழுது கோர்ட் நடக்கும் நேரம்.

நடிகர்கள் : நீதிபதி, பப்ளிக் பிராசி கூட்டர், எதிரி தரப்பு வக்கீல், மற்றுஞ் சில வழக்கறிஞர்கள், சேகர், மூர்த்தி, சச்சுதானந்தம் பிள்ளை, ஹேமா, மோகன், ராமு, கந்தன், சப்-இன்ஸ்பெக்டர், இரண்டு போலீஸ் ஜவான்கள், கோர்ட் குமாஸ்தா, கோர்ட் பியூன், பொது மக்கள் முதலானவர் கள்.

நீதிபதி, பப்ளிக் பிராசிகூட்டர் முதலியவர்கள் அவரவர் இடத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். பப்ளிக் பிராசிகூட்டர் அருகில் Sub-Inspector உட்கார்ந்திருக்கிறார்கள். சேகரும் மூர்த்தியும் கூண்டிற்குள் நிற்கிறார்கள். மற்றவர்கள் ஒருபுறமாக நிற்கிறார்கள்.

நீதிபதி.—சாட்சி விசாரணைகள் முடிந்துவிட்டன. குற்ற வாளிகள் கோர்ட்டில் வழக்கு சம்பந்தமாக ஏதாவது சொல்லிக்கொள்ள ஆசைப்பட்டால் இப்போது சொல்ல லாம்.

சேகர்.—கனம் கோர்ட்டார் அவர்களே ! பணத்தைக்களவாடி னேன். பாதகச் செயலில் ஈடுபட்டேன். என்னை மணக்க ஒப்பாத ஹேமாவை தப்பாக நடத்தினேன். நிரபராதியான மோகனை கடத்தி வந்து கொலை புரிய சதி செய்தேன், என்றெல்லாம் குற்றம் சாட்டப்பெற்று இதோ ! இந்தக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறேன். நீங்கள் எதிர் பார்க்கலாம் பொய்யையும் புனைசுருட்டை யுங்கூறி இவைகளையெல்லாம் நான் மறுப்பேன் என்று ! அதுதான் இல்லை.

நீதிமான்களே ! சட்டப் புத்தகம் எங்களை குற்றவாளிகள் என்று குறிப்பிடலாம். ஆனால் நான் ஒப்பவில்லை. காரணம் கேட்பீர்கள். அதையும் சொல்லிவிடுறேன்.

கனம் கோர்ட்டார் அவர்களே ! நான் பணத்தைக் களவாடினேன் ! எங்கே ? மாற்றான் வீட்டிலா ? இல்லை ! என் சொந்த அத்தானிடம். அதுவும் பாதக செயலிலே ஈடுபடவேண்டும் என்பதற்காகவா ? அல்ல ! அளவுக்குமீறி ஓரிடத்தில் பணம் குவிந்து விட்டால் அது நீதிக்குப் புறம் பாக வேலை செய்ய ஆரம்பித்துவிடும் என்பதற்காகத் தான். மேலும் எனக்குப் பணம் தேவைப்பட்டது.

மணக்க விரும்பாத ஹேமாவை வற்புறுத்தி இணங்கச் செய்தேன். அவள் வாழ்வைப் பாழாக்க வேண்டுமென்ப தற்காகவா ? அல்ல ! சமூகத் தொண்டுபுரியவேண்டியவள், செண்டுபூசி தின்டு தலையணைகளுக்கிடையில் சிக்கி சிதைந்து விடுவாளோ என்பதற்காகத்தான். மேலும் முறைப்பெண். அக்காள் மகள் அயலானோடு கொஞ்சிக் குலாவுவதை தன்மானமுள்ள எவன்தான் சகித்துக் கொண்டிருப்பான் ?

நிரபராதியான மோகனை தந்திரமாகக் கடத்திக்கொண்டு வந்தேன். கொலை செய்தால் மலையினும் மரணம் பெரி தான நிலையடைந்து விடலாம் என்ற எண்ணத்தாலா ?

அல்ல ! தனக்கென ஒரு கலையை கற்றுணர்ந்த மோகன் போன்றவர்கள் நிலையினின்று மாறுபடக்கூடாது என்பதற்காகத்தான்.

இதோ அருகில் இருக்கிறானே என் நண்பன் இரண்டாவது குற்றவாளி எனக் கூறப்படும் மூர்த்தி எனக்கு உதவி செய்தான். அவ்வப்போது யுக்தியும் சொல்லிக் கொடுத்தான். உண்மைதான். ஏன் ? எதற்காக ? உலகைக் கெடுத்து உளுக்க வைக்கவேண்டுமென்ற ஊதாரி குணத்தாலா ?, அல்ல ! என்னிடமிருந்து வாங்கிக்கொண்ட பணத்திற்கு வஞ்சகமில்லாமல் உழைக்கவேண்டுமே என்னும் வளப்பமான குணத்தால் தான்—மூர்த்தி ஓர் ஏழை! எனினும் மனிதன் தானே ! அவன்.

வளப்பமுடன் வாழ ஆசைப்பட்டான். பணம் தேவைப்பட்டது. உழைக்க முன் வந்தான். ஆனால் ஏற்பார் யாருமில்லை. ஏங்கிய அவன் உள்ளம் வீங்கி வெடிக்கும் நிலையில் தான் தாங்கிப் பிடித்தேன் நான். அவன் மீது யாதொரு குற்றமுமில்லை. கனம் கோர்ட்டார் அவர்களே ! இப்போது கூறுங்கள் நாங்கள் குற்றவாளிகளா ? தண்டிக்கப்பட வேண்டியவர்களா ?

நீதிபதி.—(சர்க்கார் தரப்பு வழக்கறிஞரைப் பார்த்து) சர்க்கார் தரப்புவாதத்தை இனி ஆரம்பிக்கலாம்.

பப்ளிக் பிராசிகூட்டர் எழுந்திருக்கிறார். நீதி மன்றத்தில் கூடியிருக்கும் கூட்டத்தினரைப் பார்க்கிறார். நீதிபதியை பார்க்கிறார். பிறகு பேசுகிறார்.

" முதல் எதிரி சேகர் சட்டத்தை விட்டுவிட்டு செய்த குற்றங்களுக்கு, சூழ் நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் எடுத்துக் கூறி தாங்கள் குற்றவாளிகள் அல்ல என வாதாடினார். இது சட்ட சபை அல்ல, நீதி மன்றம். புதிதாகச் சட்டம் இயற்றப் போவதில்லை. இங்கு முன்பே இயற்றப்பட்ட சட்டங்களின்படி கட்டுக்கோப்பான நிலையில் திட்டவட்டமாக உலகம் இயங்கி வருகின்றதா இல்லையா என்பதை தீர்மானிக்கத்தான் நீதிமன்றங்கள். ஆகையால் குற்றவாளிகள் கூறிய சமய சந்தர்ப்பத்தையே கருத்தில் கொள்ள கோர்ட்டார் அவர்கள் சட்டப்பிரச்னைகளை நுணுக்கமாக அணுக வேண்டுகிறேன்.

சேகர் சற்று முன்பு வாதாடியபோது அளவுக்கு மீறிய செல்வம் ஓரிடத்தில் குவிந்துவிட்டால் அது நீதிக்குப் புறம்பாக வேலை செய்ய ஆரம்பித்துவிடும் என்பதாலும் தனக்கு தேவைப்பட்ட தென்பதாலும் தான் பணத்தைக் களவாடியதாக குறிப்பிட்டார். பணம் எக்காரணத்திற்காக யாரிடமிருந்து களவாடப்பட்டது என்பது முக்கியமல்ல. இங்கு பணத்தைக் களவாடினாரா இல்லையா என்பதைத்தான் கவனிக்கவேண்டும். முதல் எதிரி சேகரோ, தான் பணத்தைக் களவாடியதாக ஒப்புக்கொண்டுள்ளார். இதைக் கோர்ட்டார் குறித்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(நீதிபதி குறித்துக் கொள்கிறார்.)

சச்சுதானந்தம் பிள்ளையின் மகள் ஹேமா—முதல் குற்றவாளி சேகரின் தமக்கை மகள்—முறைப்பெண்தான் சேகருக்கு மணக்க உரிமை உண்டு அவருக்கு, தொன்று தொட்டு வரும் பழக்கத்தால். மறுப்பாரில்லை. ஹேமாவை மணக்க ஆசைப்பட்டார் சேகர். குற்றம் சொல்வதற்கில்லை. ஆனால் சேகரை மணக்க ஹேமா விரும்பினாரா ? அதுதான் இல்லை ! இதை ஹேமாவின் வாக்குமூலம், சாட்சிகளின் சொற்கள், வழக்கின் போக்கு எல்லாம் ருசுப்பிக்கின்றன. மணந்து கொள்ள மறுக்கிறாள் ஹேமா என்பதை உணர்ந்து கொண்ட முதல் குற்றவாளி சேகர் குறுக்கு வழியை கைப்பற்றினார். கொடுமைப்படுத்தி அடிமையாக்கத் துணிந்தார். மெத்தப் பயமூட்டி சத்தியம் செய்யச்சொன்னார். சத்தியம் செய்யப்படவில்லையே என வாதாடப்பட்டது. உண்மைதான். சத்தியம் செய்யவில்லை தான் ஹேமா ! ஏன் கள்ளச் சாராயம் காய்ச்சும் கேஸ் ஒன்றின் நிமித்தம் வித்தையூர் சென்ற சப்-இன்ஸ்பெக்டர் சங்கரன் எதிர் பாராமல் அங்கு செல்ல நேரிட்டது. ஆகையால் சத்யம் செய்வது நின்று விட்டது. இல்லையேல் ஹேமா சத்யம் செய்திருப்பார், மாமன் சேகரை மணந்து கொள்கிறேனென்று. மனப்பூர்வமாகவா ? அல்ல ! குணங் கெட்ட சேகர் கொடுமைப் படுத்தியதால் ! மாமன் சேகருக்கு மாலையிட்டிருப்பார் ஹேமா ! நல்லதுணை என்பதற்காகவா ? அல்ல ! சொல்லிழுக்கு கூடாதென்பதற்காக ! இல்வாழ்வில் புகுந்திருப்பார் ஹேமா, நல் வாழ்வு காண்பதற்காகவா ? அல்ல ! பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் ஒழியும் என்பதற்காக ! இல்லறத்தை ஏற்றிருப்பார் ஹேமா ! நல்லறத்தை காண்பதற்காகவா ? அல்ல ! தொல்லுலகில் நல்லவர்கள் அல்லலுற ஆகாது என்பதற்காக ! Your honour ! தன்னை மணக்க விரும்பாத ஹேமாவை வற்புறுத்தி இணங்கச் செய்தார் என்பது முதல் குற்றவாளி சேகர் செய்த இரண்டாவது குற்றமாகும்.

மூன்றாவதாக ஹேமா, மோகன் இருவருக்கும் நட்பு உண்டு. கடிதப்போக்குவரத்துகளும் நடந்திருக்கின்றன. கடிதங்களையெல்லாம் கோர்ட்டார் பார்வையிட்டிருக்கிறார்கள். மோகனத்தூருக்குப் பாதையமைக்கும் விஷயம் காணக்கிடைக்கின்றனவேயன்றி முதல் எதிரி சேகர் கூறியதுபோல் காதல் சம்பந்தமான விஷயங்கள் எதுவுமே கடிதங்களில் இல்லை. அப்படியே ஹேமா, மோகன் இருவரும் காதலர்களாக இருந்திருந்தால்கூட உள்ளங் கலந்த நல்லதோர் நட்பை கள்ளத்தனமாகப் பிரிக்க சேகருக்கு என்ன உரிமை ? மோகன் ஒழிந்தால் தான், ஹேமா தன்னை மணப்பாள் என்ற பயங்கர முடிவுக்கு வந்திருக்கிறார் முதல் எதிரி சேகர். அதன்படி மோகனைக் கடத்திக் கொண்டும் சென்றிருக்கிறார். ஆனால் எதிர்பாராதவிதமாக கொலை தவிர்க்கப்பட்டு விட்டது. Your Honour! வித்தையூர் முசாபரி பங்களாவில் நித்திரை செய்து கொண்டிருந்த நிரபராதியான மோகனை தந்திரமாக கடத்திக்கொண்டு வந்தார் என்பது முதல் எதிரி சேகர் செய்த மூன்றாவது குற்றமாகும்.

அடுத்தபடியாக கூண்டில் நிற்கின்ற இரண்டாவது எதிரி மூர்த்தி ஏழையாக இருக்கலாம். வேலை கிடைக்காது கஷ்ட மடைந்துமிருக்கலாம். அதைப்பற்றி அக்கறை இல்லை. முதல் எதிரி சேகர் செய்த மூன்று குற்றங்களுக்கும் மூர்த்தியும் உடந்தை என்பதை சாட்சிகளின் விசாரணை தெளிவாக்குகின்றது.

ஆகையால் இந்த இரண்டு குற்றவாளிகளுக்கும் I.P.C. 380, 366, 364-வது பிரிவுகளின்படி உயர்ந்த அளவு தண்டனை அளிக்கும்படி கேட்டுக்கொண்டு என் வாதத்தை முடித்துக்கொள்கிறேன்.

(சர்க்கார் வழக்கறிஞர் உட்காருகிறார். நீதிபதி கைக் கெடிகாரத்தைப் பார்க்கிறார்.)

நீதிபதி.—நேரமாகிவிட்டது. தீர்ப்பு நாளையதினம் அறி விக்கப்படும்.

(திரை விழுகிறது.)

காட்சி 24.

இடம் : பூங்காவில் வாசகசாலை.

நேரம் : காலை நேரம்.

நடிகர்கள் : டேவிட், பக்கிரி.

டேவிட் வாசகசாலையில் பேப்பர் படித்துக்கொண்டிருக் கிறான். அப்போது பக்கிரி போகிறான்.

பக்கிரி.—டேவிட் ! இங்கேதானா இருந்தே நீ !

(டேவிட் மௌனமாக படித்துக்கொண்டிருக்கிறான்.)

பக்கிரி.—நான் கூப்பிடுகிறேன் திரும்பிக்கூட பார்க்காமல் அப்படி என்னப்பா பேப்பரிலே........?

டேவிட்.—வித்தையூர் சதி வழக்கின் தீர்ப்பு வந்திருக்குது..

பக்கிரி.—அடடே! தீர்ப்பு சொல்லியாச்சா ? எங்கே.... உரத்திப்படி நானும் கேட்கிறேன்.

(டேவிட் படிக்கிறான்.)

வித்தையூர் சதி வழக்கில் தீர்ப்பு

கீழத் தஞ்சை செஷன்ஸ் ஜட்ஜ் ஸ்ரீ பெரியசாமி மூப்பனார் இன்றைய தினம் நல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்த சேகர், மூர்த்தி என்ற இருவர் மீதும் 380, 366, 364-வது I.P.C. பிரிவுகளின்படி தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் இருவரும் குற்றவாளிகள் எனத் தீர்மானித்து முதல் எதிரி சேகருக்கு ஒவ்வொரு குற்றத்திற்கும் தனித்தனியே பத்து ஆண்டுகளும் இரண்டாவது எதிரி மூர்த்திக்கு முதல் இரு குற்றங்களுக்கு தலா ஐந்து ஆண்டும் மூன்றாவது குற்றத் திற்கு 7 ஆண்டும் கடுங்காவல் தண்டனை விதித்து தண்டனை காலத்தை குற்றவாளிகள் சேர்ந்தே அனுபவிக்கலா மென்றுங் கூறினார்.

பக்கிரி.—டேவிட் ! "கோர்ட்டில் சேகரின் அகால மரணம்" என்னடாது ? அதைப்படி........

டேவிட்.—அடடே ஆமாம்.

கோர்ட்டில் சேகரின் அகால மரணம்

வித்தையூர் சதி வழக்கில் நீதிபதி தீர்ப்புக் கூறிய பிறகு குற்றவாளிகளை போலீசார் அழைத்துக்கொண்டு சென்றார்கள். வழியில் சேகர் தயங்கினார். போலீசார் வரும்படி கையைப் பிடித்து இழுத்தனர். சேகரின் உடல் தடாரென்று தரையில் விழுந்தது. சில நிமிடங்களில் ஆவி பிரிந்துவிட்டது. பிரேத விசாரணை செய்த டாக்டர் இருதயம் வெடித்து ஆவி பிரிந்துவிட்டதென கூறினாராம்.

பக்கிரி.—தொலைந்தானா பாவி ! தொலையத்தான்வேண்டும். தொலையட்டும்.

(திரை விழுகிறது.)

காட்சி 25.

இடம் : சச்சுதானந்தம் பிள்ளை வீட்டில் கல்யாண மண்டபம்.

காலம் : காலை நேரம்.

நடிகர்கள் : ஹேமா, மோகன், சச்சுதானந்தம் பிள்ளை, கந்தன், ராமு, பக்கிரி, டேவிட், கலெக்டர், ஊர்ப் பிரமுகர்கள்.

நடுவில் மேஜை இருக்கின்றது. இரண்டு பக்கத்திலும் நாற்காலிகள் பெஞ்சுகள் போடப்பட்டிருக்கின்றன. நடுவில் கலெக்டர் உட்கார்ந்திருக்கிறார். அவருக்கருகில் மோகனும் ஹேமாவும் ஒரு சோபாவில் மணமாலையோடு மலர்ந்த முகத்தோடு உட்கார்ந்திருக்கிறார்கள். கந்தன், தம்பதி களுக்கு விசிறிக்கொண்டிருக்கிறான். சச்சுதானந்தம் பிள்ளை, ராமு, சோமு, டேவிட், பக்கிரி, ஊர் பிரமுகர்கள் அனைவரும் உட்கார்ந்திருக்கிறார்கள்.

(கலெக்டர் எழுந்திருந்து பேசுகிறார்.)

கலெக்டர்.—குதூகலத்தோடு இருக்கும் உங்கள் நடுவில் இருப்பது எனக்கு மகிழ்ச்சி தருகின்றது.

ராமு எழுந்து வந்து, "மோகனத்தூர் சாலை அமைப்புக் குழுவின் சார்பாக இந்த மலர் மாலையை ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு அணிவிக்கிறேன்" என்று கூறி மாலையை அணிவிக்கிறார். கலெக்டர் மாலையைக் கழற்றி வைத்துவிட்டு மேற்கொண்டு பேசுகிறார் :

"பல ஆண்டுகளாக கவனிப்பார் அற்றுக்கிடந்த மோகனத்தூருக்குப் புதிய பாதை அமைக்கப்பட்டு விட்டது. இந்தப் புதிய பாதை சம்பந்தமாக திரு மோகன் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அற்ப சொற்பமானவையல்ல. இப் புதிய பாதையை, திரு மோகன் தமது வாழ்க்கையின் லட்சியமாகவே கொண்டு விட்டார். புதிய பாதை அமைக்கப்பட்டால் தான் திருமணம் செய்துகொள்வதென்று தீர்மா னித்து விட்டாராம். சச்சுதானந்தம் பிள்ளையே நேரில் சென்று கேட்டுங்கூட தன் தீர்மானத்திலிருந்து மாறுபட விரும்பவில்லையாம் மோகன் ; சச்சுதானந்தம் பிள்ளை இனாமாக நிலங்கொடுத்ததுமல்லாமல், ஏராள பணமும் கொடுத்திருக்கிறார். மோகனத்தூர் வாசிகள் 300 பேர் எதையும் எதிர்பார்க்காமல் இடைவிடாமல் வேலை செய்து, பத்தே நாளில் புதிய பாதை அமைத்திருக் கிறார்கள். நரியன் ஆற்றுக்குப் பாலங்கூட கட்டப்பட்டு விட்டது. அரசாங்கத்தில் இதற்கென ஒதுக்கப்பட்ட ரூ. 40,000-ல் ஒரு பைசாகூட எடுக்கவில்லை.

என்னைக்கொண்டு புதிய பாதையைத் திறந்து வைக்கச் செய்த பிறகுதான், திரு மோகன் அவர்கள் இன்று காலை மணவறையில் உட்கார்ந்தார் என்பது போற்றத்தக்கது.

திருமதி ஹேமா அவர்கள் புதிய பாதை அமைக்கும் காலத்தில் மோகனுக்கு உற்ற துணை புரிந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. திரு மோகனுக்கு ஏற்றவர் தான் ஹேமா என்பது தெளிவு. ஹேமா, மோகன் இருவருடைய வாழ்க்கை என்னுஞ் சோலை, வீரதீரங் கொண்ட பல மலர்களை நாட்டிற்களிக்குமென நம்புவோ மாக.

ஹேமா மோகன் இருவரும் அமைத்துத் தந்த புதிய பாதையிலேயே நீங்களும் நடந்து இந்திய நாட்டிற்கும் ஏனைய நாடுகளுக்கும் இனியது செய்வீர்கள் என்று நம்பு கிறேன்.

வணக்கம் !"

முற்றும்

சென்னை விவசாயிகளின் அகில இந்திய யாத்திரை

முக்கிய அறிவிப்பு.

இந்தப் பிரயாணத்திட்டம், கீழ்க்கண்டவாறு, இறுதியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ரயில் நிலையம்.	வருகை.	புறப்பாடு.
சென்னை (ராயபுரம்) ..	..	9-11-56 (இரவு)
விஜயவாடா	10-11-56 (காலை)	10-11-56 (நடுப்பகல்)
விசாகபட்டணம் ..	11-11-56 (காலை)	11-11-56 (பிற்பகல்)
பூரி, புவனேசுவரம் ..	12-11-56 (காலை)	12-11-56 (இரவு)
டாட்டா நகர் ..	13-11-56 (காலை)	13-11-56 (இரவு)
கல்கத்தா (ஹௌரா) ..	14-11-56 (காலை)	15-11-56 (இரவு)
சித்தரஞ்சன் ..	16-11-56 (காலை)	16-11-56 (இரவு)
தன்பாத் (சிந்திரி உர உற்பத்திசாலை)	17-11-56 (காலை)	17-11-56 (இரவு)
கயா	18-11-56 (காலை)	13-11-56 (இரவு)
சாசி	19-11-56 (காலை)	19-11-56 (இரவு)
அலஹாபாத் ..	20-11-56 (காலை)	20-11-56 (இரவு)
லக்ஷ்மணபுரி ..	21-11-56 (காலை)	21-11-56 (மாலை)
ஹரித்வாரம் ..	22-11-56 (காலை)	23-11-56 (பிற்பகல்)
நங்கல் அணை ..	24-11-56 (காலை)	24-11-56 (நடுப்பகல்)
அமிருதசரஸ் ..	25-11-56 (காலை)	25-11-56 (மாலை)
டில்லி	26-11-56 (காலை)	27-11-56 (இரவு)
மதுரா, பிருந்தாவனம்	28-11-56 (காலை)	28-11-56 (இரவு)
ஆக்ரா கோட்டை ..	29-11-56 (காலை)	29-11-56 (மாலை)
சாஞ்சி	30-11-56 (காலை)	30-11-56 (முற்பகல்)
அவுரங்காபாத் (அஜந்தா எல்லோரா).	1-12-56 (காலை)	2-12-56 (மாலை)
நாஸிக்	3-12-56 (காலை)	3-12-56 (இரவு)
பம்பாய்	4-12-56 (காலை)	5-12-56 (இரவு)
பூனா	6-12-56 (காலை)	6-12-56 (மாலை)
பங்களூர் ..	8-12-56 (காலை)	8-12-56 (இரவு)
மைசூர் ..	9-12-56 (காலை)	9-12-56 (இரவு)
மேட்டூர் அணை ..	10-12-56 (பிற்பகல்)	10-12-56 (மாலை)
கோயமுத்தூர் ..	11-12-56 (காலை)	11-12-56 (மாலை)
உதகை ..	12-12-56 (காலை)	12-12-56 (மாலை)
மேட்டுப்பாளையம் (கீழ்பவானி) ..	13-12-56 (காலை)	13-12-56 (மாலை)
ஒலவாக் கோட்டை ..	14-12-56 (காலை)	14-12-56 (பிற்பகல்)
பழனி ..	15-12-56 (காலை)	15-12-56 (முற்பகல்)
காந்தி கிராமம் ..	15-12-56 (பிற்பகல்)	15-12-56 (மாலை)
மதுரை ..	15-12-56 (இரவு)	16-12-56 (பிற்பகல்)
திருவனந்தபுரம் குமரி முனை ..	17-12-56 (காலை)	17-12-56 (இரவு)
தென்காசி ..	18-12-56 (முற்பகல்)	18-12-56 (பிற்பகல்)
தனுஷ்கோடி ..	19-12-56 (காலை)	19-12-56 (முற்பகல்)
ராமேஸ்வரம் ..	19-12-56 (பிற்பகல்)	19-12-56 (இரவு)
திருச்சி, ஸ்ரீரங்கம் ..	20-12-56 (காலை)	20-12-56 (இரவு)
தஞ்சாவூர் ..	21-12-56 (காலை)	21-12-56 (பிற்பகல்)
சிதம்பரம் ..	22-12-56 (காலை)	22-12-56 (மாலை)
நெய்வேலி ..	23-12-56 (காலை)	23-12-56 (இரவு)
சென்னை ..	24-12-56 (காலை)	

இச் சுற்றுப் பிரயாணத்துக்கு ஆகும் செலவு.—சென்னையிலிருந்து 1956-ம் ௵ நவம்பர் ௴ 9௳-ல் புறப்பட்டு, மீண்டும் 1956-ம் ௵ டிசம்பர் ௴ 24௳-ல் சென்னை வந்து சேரும் வரை, உணவு, ரயில்வே கட்டணம் ஆகியவற்றிற்காகும் செலவு ரூ. 250 ஆகும். இச் செலவுத் தொகைக்காக, (State Bank of India) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் அல்லது ஷெட்யூல்ட் பாங்க் எதிலாவது ரூ. 250-க்கு "Additional Development Commissioner, Madras" என்ற பெயருக்கு (Bank Draft) பாங்க் டிராப்ட் வாங்கி, அதை, "Additional Development Commissioner, Public (R. D. P.) Department, Secretariat Madras-9. என்ற விலாசத்துக்கு, 1956-ம் ௵ செப்டெம்பர் ௴ 30௳-க்குள் வந்து சேரும்படி ரிஜிஸ்தர் தபாலில் அனுப்ப வேண்டும். இத் தொகையை மணியார்டர் மூலமாகவோ ரொக்கமாகவோ அனுப்பினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இச் சுற்றுப்பிரயாண கோஷ்டியில் சேருவதற்கு ஏற்கனவே மனு செய்துள்ளவர்களும் புதிதாக மனுச்செய்து கொள்வோரும் மேலே கூறியபடி, செலவுத் தொகையை முன்னதாக அனுப்பிவைக்கவேண்டும். தங்களுடைய சொந்த ஊர்களிலிருந்து 1956-ம் ௵ நவம்பர் ௴ 9௳ சென்னை வருவதற்காகும் பிரயாணச் செலவையும், சுற்றுப்பிரயாணம் முடிந்து, சென்னையிலிருந்து அவர்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிப்போகும் செலவையும், அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் ; இந்தப் பிரயாணங்களுக்கு ரயில்வே கட்டண சலுகை கிடையாது.

சாமான்கள்.—சாப்பிடுவதற்காக உபயோகிக்க ஒரு தட்டு, மற்றும் ஒருடம்ளர், ஒருபெட்டி, படுக்கைகம்பளி இவைகளைக் கொண்டுவரவேண்டும். அநாவசியமாக, அதிக சாமான்களைக் கொண்டுவந்தால், சிரமமும் காலதாமதமும் ஏற்படும். சாமான்களை வெவ்வேறு இடங்களில் இறக்கி, பிறகு ரயில்வண்டியில் ஏற்றும் பொறுப்பும், அச் சாமான்களைப் பத்திரமாக வைத்துக்கொள்ளும் பொறுப்பும், சாமான்களின் சொந்தக்காரர்களைச் சார்ந்ததாகும்.

உணவு.—சுற்றுப் பிரயாணத்தின்போது, கோஷ்டியினருக்குக் காலையில், ஏதாவதொரு சிற்றுண்டியும் (காப்பி அல்லது) தேயிலை பானமும் தரப்படும். காப்பிக்கும், தேயிலை பானத்துக்கும் (reconstituted milk) பால் தூளை உபயோகித்துக் கலக்கப்பட்ட பால் உபயோகிக்கப்படும். நடுப்பகலிலும் இரவிலும் சாதாரண சாப்பாடு விநியோகிக்கப்படும். ரயில் நிலையங்களிலேயே, உணவு வகைகள் சமையல் செய்யப்பட்டு, ரயிலடியிலுள்ள திறந்த அரங்கிலே பரிமாறப்படும். ஆனபோதிலும், உணவு விநியோகத்திலும் இதர விஷயங்களிலும், சுகாதார முறைகள் தவறாது அனுஷ்டிக்கப்படும்.

(32-ம் பக்கம் பார்க்க.)

சிறு கதை :

புதிய ஜீவன்

[ஸ்ரீ ஜி. ஜெயராமன், அங்கேரிபாளையம்]

ராமபட்டி கிராமம் அமைதியில் ஆழ்ந்திருந்தது. அப்போது இரவு மணி 12 இருக்கும். இரவின் பயங்கரத்தை அதிகமாக்கியது "ஐயோ! அம்மா!" என்ற வேதனைக் குரல். அந்தக் குரல் வேலனின் நெஞ்சைப் பிளந்தது. குடிசைக்குமுன் அங்குமிங்கும் பரபரப்புடன் நடந்தவன் சிறிது நின்றுவிட்டு மறுபடியும் அங்குமிங்கும் நடக்க ஆரம்பித்தான். அவன் மனதில் பயமும் ஒரு வித மகிழ்ச்சியும் மாறி மாறி எழுந்தன. குடிசைக்குள்ளே அவன் அன்பு மனைவி வள்ளி பிரசவவேதனையில் துடித்துக் கொண்டிருந்தாள்.

* * * *

வேலன் ராமபட்டி கிராமத்தைச் சேர்ந்த ஓர் ஏழை விவசாயி. ஐந்து ஏக்ரா புஞ்சை பூமியும், அதில் இருக்கும் கிணறும், இரண்டு எருதுகளும் தான், அவன் தகப்பனுர் அவனுக்கு விட்டுச்சென்ற ஆஸ்தி. வருஷத்தில் பாதி நாட்களுக்குக்கூட கிணற்றில் தண்ணீர் இருக்காது. தண்ணீர் இருக்கும்போது சாகுபடி செய்து கொள்வான். வேலன் நல்ல அழகன். நல்ல உழைப்பாளி. உழைத்து உழைத்து அவன் உடம்பு உரம் பெற்றிருந்தது. வேலனும் அவன் மனைவி வள்ளியும் தோட்டத்திலேயே ஒரு ஓலைக் குடிசை போட்டுக்கொண்டு அதில் வசித்துவந்தனர். வேலன் வள்ளியை புதிதாக மணம் செய்து கொண்டான். இப்பொழுது அவன் மனைவி வள்ளி பூரண கர்ப்பிணி.

வேலன் வரப்போகும் தன் மனைவியின் பிரசவத்திற்காகவும், பிறக்கப்போகும் தன் "புதிய ஜீவனு"க்காகவும் நன்ருக உழைத்தான். நிலத்தில் முக்கால் பாகம் சோளப்பயிர் செய்தான. சோளப்பயிர் நன்ருக வளர்ந்து வந்து கொண்டிருந்தது. அவன் மனதிலும் "பிரசவத்திற்கு மனைவியை 20 மைல் தூரத்திலுள்ள நகரத்தில் இருக்கும் பிரசவ ஆஸ்பத்திரிக்கு அனுப்பி நன்ருகப் பார்த்துக்கொள்ளவேண்டும், குழந்தை பிறந்தவுடன் அதற்குத் தங்கவளையல் செய்து போடவேண்டும், நன்ருகப் படிக்கவைக்கவேண்டும், 'இப்படி' வளர்க்கவேண்டும், 'அப்படி' வளர்க்கவேண்டும்" என்ற ஆசையும் வளர்ந்து கொண்டிருந்தது.

ஆயிற்று ; இன்னும் இரண்டு மாதம் சென்ருல் சோளக் கதிர் முற்றிவிடும். விளைச்சல் எதிர்பார்த்ததற்கு மேலாகவே இருக்கும் போலிருந்தது. வேலனும், வள்ளியும் எதிர் கால பலனை நினைத்து மகிழ்ச்சியுடன் எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். ஒரு நாள் வேலன் தன் தோட்டத்தைச் சுற்றிப்பார்க்கும் போது ஓர் இடத்தில் செழிப்புடன் வளர்ந்து கொண்டிருக்கும் சோளப்பயிர்கள் வாடி பூச்சியினுல் அரிக்கப்பட்டிருந்தன. வேலன் என்ன செய்வது என்று தெரியாமல், கவனிக்காமல் விட்டு விட்டான். ஒரு வாரத்தில் பூச்சிகள் பூராபயிர்களுக்கும் பரவி பயிர்களை வளரவிடாமலும், கதிர்கள் வளரமுடியாமலும் செய்து விட்டது. பருவமழையும் இல்லாததால் கிணற்றில் தண்ணீரும் தீர்ந்து விட்டது. பயிர் பச்சைகள் காய்ந்து கருகி விட்டன. வேலனுடைய ஆசைகளும் கருகிவிட்டன. விளைச்சல் இல்லாததால் செலவுக்குப் பணம் இல்லை. மாடு, எருது, கன்று இவற்றை யெல்லாம் ஒவ்வொன்ருக விற்று விட்டான். எஞ்சி நின்றவை அவன் வரண்ட பூமியும் அதில் இருக்கும் ஓட்டை ஓலைக்குடிசையும், தன் நிறை மாத கர்ப்பினியான மனைவியும்தான். இந்தச் சமயத்தில் தன் மனைவியின் பிரசவகாலம் நெருங்கிவிட்டதை அறிந்து வேலன் மிகவும் கஷ்டப்பட்டான்.

* * * *

"ஐயோ! மச்சான்!" என்ற வள்ளியின் வேதனைக் குரல் வேலனை குடிசைக்குள் போகச்செய்தது. அங்கே! அவன் அன்பு மனைவி பரிதாபமாக "மச்சான் எனக்கு நிரம்ப கஷ்டமாயிருக்கு, உடனே ஆஸ்பத்திரிக்கு கூட்டிக் கொண்டு போ" என்ருள்.

வேலன் என்ன செய்வான். காலமோ இரவு ஒரு மணியாகிக்கொண்டிருந்தது. "பிரசவ விடுதி"யோ ராமபட்டியிலிருந்து 20 மைல் தூரத்தில் இருக்கும் நகரத்திற்குச் செல்ல வேண்டும். பக்கத்தில் பிரசவம் தெரிந்த "மருத்துவச்சிகள்" யாரும் இல்லை. உடனே நகரத்திற்கு வள்ளியைக் கொண்டுபோக தன்னிடம் வண்டியும் இல்லை. இருந்த வண்டி மாடுகளை ஏற்கெனவே விற்று விட்டான். கையில் செலவிற்கும் பணமில்லை.

இதையெல்லாம் சிந்தனை செய்ய வேலனுக்கு நேரமில்லை. பக்கத்து தோட்டத்திலுள்ள குடிசையில் இருக்கும் சின்னம்மாள் என்ற ஸ்திரியைக் கூப்பிட்டு வள்ளியைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு மற்றொரு தோட்டத்திற்கு ஓடினுன். அங்கு அவர்களிடம் எருது கேட்டு வண்டியைப் பூட்டிக்கொண்டு அவன் குடிசைக்கு முன் நிறுத்தி விட்டு பரபரப்புடன் இறங்கினுன்.

"வேலு அவ்வளவுதான்! குழந்தை பிறந்து இறந்து விட்டது. பகவான் புண்ணியத்திலே வள்ளி தப்பிச்சிகிட்டாள். நீ அங்கேயே இரு. உள்ளே வராதே" என்று சின்னம்மா கூறவே, வேலன் அப்படியே உணர்ச்சியற்ற

மரக்கட்டை போல் நின்று விட்டான். வேலன் எதிர் பார்த்த அன்பின் செல்வம்........எதிர்கால "புதிய ஜீவன்"......ஜீவன் இல்லாமல் இருந்தது. அவன் விழி களில் நீர் பெருகி கன்னங்களில் வழிந்தோடியது.

*   *   *   *

இரண்டு வருஷங்களுக்குப்பின்—வேலனுடைய தோட்டத் தில் ஓலைக்குடிசைச்குப்பதில் ஓடு போட்ட வில்லை வீடு இருக் கிறது. கிணற்றை எட்டிப்பார்ப்போம்! அடேடே! இதென்ன நிறைய தண்ணீர் இருக்கிறதே. இது வேலன் தோட்டம் இல்லைபோல் இருக்கிறது! மாறி வந்து விட்டோம் போலிருக் கிறது!......கிடையாது. இது வேலனுடைய தோட்டமே தான். அதோ! வேலன் மண் வெட்டியை திண்ணையில் வைத்து விட்டு குடிசைக்குள்ளே போகிறானே. நாமும் போவோமே.

*   *   *   *   *   *

"வள்ளி! வள்ளி! உன்னைத் தானே. இன்று பக்கத்து ஊருக்கு "நல்ல வாழ்வு" என்ற சினிமா வந் திருக்கிறதாம், நல்லா இருக்குதாம், சீக்கிரம் சாப்பாடு போடு, நாமரெண்டு பேரும் போகலாம் வண்டி கட்டிகிட்டு" என்று சொல்லிக்கொண்டே மகிழ்ச்சியுடன் வேலன் குடிசைக்குள் நுழைந்தான்.

"போ மச்சான்! நான் ஒன்னும் வரலே! நீங்க வேணு முன்னு போய் பார்த்துட்டு வாங்க" என்று நாணத்துடன் வள்ளி தன் அன்பு கணவனின் முகத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னாள். வேலனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. "நீ வல்லேன்னு சாப்பாடு வேண் டாம், ஒரு மண்ணும் வேண்டாம்" என்று சாப்பாட்டுக்கு உட்கார்ந்தவன் "விசுக்" கென்று எழுந்திருந்தான். வள்ளி ஓடிச்சென்று வேலனின் கையைப் பிடித்து நிறுத்தி "எப்படி மச்சான், இது மாசம், எப்படி போறது, நீங்களே சொல்லுங்க" என்று கொஞ்சலாக சொன்னாள்.

வேலனுக்கு கோபம் எங்கு போயிற்றோ தெரியவில்லை. வள்ளி இரண்டாவதாக கர்ப்பம் தரித்திருந்தாள். முன் குழந்தை தான் பிறந்து இறந்து விட்டதே. பிறக்கப் போகும் தன் குழந்தையை நினைத்தவுடன் இந்தச் சமயத் தில் வள்ளியை வண்டியில் சினிமாவுக்கு அழைப்பது எவ் வளவு மடத்தனம் என்று வேலன் தெரிந்துகொண்டான்.

"வள்ளி! அப்படியானால் நாளைக்கே நீ நம்ம ஊர் பிரசவ ஆஸ்பத்திரியில் சேர்ந்துக்கோ" என்றான் வேலன்.

"அதுக்கென்ன? நம்ம உள்ளூரிலே இருக்கிற ஆஸ் பத்திரி தானே. சேந்தாப்போச்சு! நீங்க முதல்லே உட் கார்ந்து சாப்பிடுங்கோ" என்றாள் வள்ளி.

வேலன் சாப்பிட உட்கார்ந்ததும் பக்தனை ரட்சிக்கும் கடவுளைப் போல தன் நினைவில் ராமபட்டி "சமுதாய நலத்திட்டத்தின் மூலம் ஏற்பட்ட பிரசவ விடுதி" தோற்ற மளித்தது.

ராமபட்டியில் "பிரசவ விடுதி" கட்டப்பட்டு இப்பொழுது தான் இரண்டு மாதமாகிறது. அதற்கு ஊர் மக்கள் பாதிப் பணமும், சமுதாய நல அபிவிருத்தி திட்டத்தின் மூலம், சர்க்கார் பணம் பாதியும் வழங்கப்பட்டது. ஊர் மக்கள் கொடுத்த பணத்தில் நம் வேலனின் பணம் தான் அதிகம் என்று சொல்லவேண்டுமா? வேலன் முன் போல் இல்லை. இரவு பள்ளிக்கூடத்தில் (Adults School) படித்துக் கொண் டான். வேலன் சர்க்காரிடம் தவணைக் கடன் வாங்கி கிணற்றை நன்றாக வெட்டினான். ஓலைக் குடிசையை வில்லை வீடாக மாற்றினான். "எங்கு தண்ணீர் தீர்ந்து விட்டாலும் நமது வேலனுடைய தோட்டக் கிணற்றில் தண்ணீர் குறையாது" என்று ராமபட்டி ஊர் மக்கள் பேசிக்கொள்வார்கள்.

*   *   *   *   *   *

வேலனுடைய வீட்டில் "வள்ளி சீக்கிரம் சாப்பாடு போடு நான் திருப்பூர் போய் வரனும்" என்றான் வேலன்.

"இன்று வாரச் சந்தையும் திருப்பூரில் இல்லை. எதற் காக வேலன் திருப்பூர் போகவேண்டும்" என்ற கேள்வி வள்ளியின் மனதில் எழுந்தது.

"வள்ளி! நம்முடைய தோட்டப் பயிரில் கொஞ்சம் பூச்சி விழுந்திடுச்சு" என்றான் வேலன்.

இதை கேட்டதும் வள்ளியின் முகம் இருண்டது. இரண்டு வருஷங்களுக்கு முன் ஏற்பட்ட மாதிரி இன்றும் ஏற்பட்டுவிட்டதே என்று கலங்கினாள்.

"வள்ளி, இதுக்கா கவலைப்படறே. நான் திருப்பூர் வட்டார அபிவிருத்தி ஆபீஸிலே (Block Development) போய் பூச்சியை ஒழிக்கிறதற்கு மருந்து வாங்கிகிட்டு வரு கிறேன். மருந்து போட்டா எல்லா பூச்சியும் ஒழிந்துவிடும். பயிருக்கும் ஒரு கெடுதலுமில்லை. பூச்சி ஒழிப்பு மருந் துக்கு கொஞ்சமாகத்தான் கிரையம் வாங்கு வாங்க. எப்படி உபயோகிக்கிறதுன்னு நல்லா சொல்லிக் கொடுப் பாங்க. அதோடே வருகிற போகத்திற்கு பயிர் செய்ய நல்ல விதைகள், உரங்கள் அந்த ஆபீஸிலிருந்து வாங்கிகிட்டு வர்றேன்" என்றான் வேலன்.

"அப்படியா! அந்த சமுதாய நல அபிவிருத்தி ஆபீஸு நல்லா இருக்கனும்; ஏ மச்சான், எந்த யோசனை கேட்க வும் அந்த திருப்பூர் சமுதாய நலத் திட்ட ஆபீஸுக்குத் தான் போகனுமா?" என்றாள் வள்ளி.

"வேண்டியதில்லை, அந்த ஆபீசைச் சேர்ந்த கிராம வட்டாரத்து "கிராம சேவக்" (Grama Sevak) என்ப வங்க நம்ம கிராமத்திற்கு அடிக்கடி வருவாங்க. அவங் களிடமும் ஆலோசனை கேட்டு தெரிந்து கொள்ளலாம். இந்த மாதிரி பொது ஜனங்களுக்கு பல விதத்திலே உதவத் தான் சமூக அபிவிருத்தி இலாகா (Community Development) ஏற்படுத்தியிருக்கிறார்கள் சர்க்காரிலே. சரி; சரி நான் சீக்கிரம் திருப்பூர் போய்விட்டு வருகிறேன். நீ பத்திரமாய் உடம்பை பார்த்துக்கோ" என்று சொல்லி விட்டு வேலன் வண்டியை பூட்டினான்.

*   *   *   *   *   *

வேலன் திருப்பூரிலிருந்து ராமபட்டி செல்லும் ரஸ்தாவில் தன்னுடைய உயர்தர காங்கேயம் எருதுகள் பூட்டிய வண்டியில் தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு வாய் ஒரு தெம்மாங்கு பாட்டுப் பாட 'குஷி' யாக மாடுகளை "ஹை! ஹை!" என்று விரட்டுகிறான்.

அடேடே! இது ராமபட்டி ரஸ்தாவா? முன்பு ஒரே குண்டும் குழியுமாயிருந்த அந்த ரஸ்தாவா? இப்பொழுது புதிதாக நல்ல முறையில் அல்லவா ரஸ்தா அமைந்திருக்கிறது? ஆஹா, அந்த வேலனுக்கு ஏது இவ்வளவு நல்ல எருதுகள்! அந்த வண்டிக்குள் பூச்சியை ஒழிப்பதற்கு மருந்தும், உரமும் அல்லவா இருக்கின்றன!

ஆம்! அது ராமபட்டி கிராம ரஸ்தர்தான்! சந்தேகமேயில்லை. அது அந்த ஊர் மக்களாலேயே போடப்பட்டது! அதற்கு நம் வேலனைப் போன்றவர்களின் உடலுழைப்புதான் அதிகம்! குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஆண், பெண் யாவரும் சேர்ந்து போட்ட ரஸ்தா. அது சரி. வேலனுக்கு எப்படி கிடைத்தது இவ்வளவு நல்ல எருதுகள்! வேலன் சமுதாய அபிவிருத்தி ஆபீஸ் மூலம் பெற்ற எருதுகள்! வேலன் தான் இப்பொழுது எல்லாம் தெரிந்தவன் ஆயிற்றே. வேலன் திருப்பூரிலுள்ள வட்டார அபிவிருத்தி ஆபீஸிலிருந்து பூச்சி ஒழிப்பு மருந்தும் உர வகைகளையும் வாங்கி வருகிறான். வேலன் ஊரை நெருங்கும்போது "ஏ வேலு!" என்ற குரல் கேட்டு வண்டியை நிறுத்தினான். எதிரில் பக்கத்து தோட்டத்து குடிசையில் வசிக்கும் சின்னம்மா நின்றாள்.

"வேலு! உன் வள்ளிக்கு நம்ம ஊர் பிரசவ ஆஸ்பத்திரியிலே ராஜா மாதிரி ஆண் குழந்தை பிறந்திருக்கு. குழந்தையும் தாயும் சௌக்கியம்! ஹும்..ஹும்..போ!..போ! சீக்கிரம் உன் வள்ளி எதிர்பார்த்துட்டு இருப்பாள்" என்று மகிழ்ச்சியாகவும், சிறிது கேலியாகவும் சொன்னாள் சின்னம்மாள்.

வேலன் தன் 'புதிய ஜீவனைப்' பார்க்க, மாடுகளை 'ஹை' என்று விரட்டினான். ஊரின் மத்தியில் மக்கள் மன்றத்தாரால் சமூக அபிவிருத்தி திட்டத்தின்மூலம் ஏற்படுத்தப்பட்ட பொது ரேடியோ ஒலிபெருக்கியில் "புது வாழ்வு பிறந்தது" என்ற இசை ராமபட்டி கிராமம் முழுவதும் ஒலித்தது.

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

இட வசதி.—ஸ்பெஷல் ரயில் வண்டியில், கோஷ்டியினருக்குத் தனித்தனியாக இடவசதி அளிக்கப்படும்.

கோஷ்டித் தலைவர்கள்.—கோஷ்டியினரின் சௌகரியங்களைக் (குறிப்பாக உணவு விநியோகம், இடவசதி முதலியவற்றை) கவனித்துவர கமிட்டிகள் அமைக்கப்படும். சுற்றுப் பிரயாணக் கோஷ்டியில் சேருபவர்கள், கமிட்டி அங்கத்தினர்களின் யோசனைப்படி பொறுமையுடன் கட்டுப்பாடாக நடந்து வரவேண்டும். இச்சுற்றுப் பிரயாணத் திட்டம் வெற்றிபெற, அவர்கள் கமிட்டிகளுடன் மனப்பூர்வமாக ஒத்துழைக்க வேண்டும்.

புறப்பாடு.—கோஷ்டியில் சேர்ந்தவர்கள் 1956-ம் ஆண்டு நவம்பர் 9-உ பிற்பகல் 1 மணிக்கு, சென்னை ராயபுரம் ரயில் நிலையத்தில் ஆஜராகவேண்டும். பெரம்பூர் ரயில் பெட்டி உற்பத்தி சாலைக்கு, அவர்கள் உடனே அழைத்துச் செல்லப்படுவார்கள். அன்றிரவு சாப்பாடு முடிந்ததும், சுற்றுப்பிரயாணம் துவங்கும்.

பொது ஜனத் தொடர்பு அதிகாரி, சென்னை 9.

தேசிய வளர்ச்சித் திட்டம் விளக்கப் பா

[ஸ்ரீ விஸ்வநாத பாகவதரும் அவரது சகோதரர்களும்]

உலகெல்லாம் போற்ற வளர்ந்துலகாளும்
 நம் உயர்ந்த சர்க்கார் தந்த
விலைமதியா வைந்தாண்டுத் திட்டமதில்
 தேசிய நல விஸ்தரிப்பால்
நலமெல்லாம் நாமடைய உழைத்துழைத்து
 நம் ஊர்க்கு நன்மை செய்ய
நில மெல்லாம் செழித்தோங்க நீண்டுயர்ந்த
 வான் கொடியை காட்ட வாரீர்.

நதி போல உதவிடவே நல்லோர் வந்தார்
 நலி வெல்லாம் இனியோடும் நல்ல காலம்
முதியோர்க்குக் கல்விதர முனைந்தே நிற்பார்
 மூதாளர் பயன்பெறவே முயலல் வேண்டும்
மதிவேண்டு மென்பார்க்குக் கல்விச் சாலை
 மாண்புறவே பல வமைக்கும் மார்க்கமுண்டு
பதிவேண்டு மென்றாலோ பாக்கள் பாட
 பஜனைக் காவன தருவர் பரிந்து வாரீர்!

கூட்டுறவுக் குடிமக்கள் எல்லாங் கொள்ளத்
 தனிப்பட்டோர் சுயலாபங் குலைந்துபோக
வீட்டிற்கு ஒருவரெனச் சேர்ந்து வந்தால்
 விரைவினிலே நிதிச்சாலை விலங்குங் காணீர்
பாட்டிற்கு நாட்டங் கொண்டுழைக்குந் நீவிர்
 பண்டகச் சாலைகளுந்தான் நிறுவிக்கொள்ள
நாட்டிற்கு நல்திட்டம் வகுத்தார் நல்லோர்
 நாமெல்லாம் வாழ்ந்திடவே நயந்து வாரீர்.

Printed by the Superintendent, Government Press, Madras, Edited by the Public Relations Officer and published by the Additional Development Commissioner, Government of Madras.